திருக்கோயில்

மார்ச் & ஏப்ரல் 1996
விலை ரூ. 6-00



அகில இந்திய சுற்றுலாப் பொருட்காட்சியில் நம் துறையின் சார்பில் அமைக்கப்பட்ட அரங்கின் அழகிய முகப்புத் தோற்றம்.

முகப்பு :

சேலம் அருள்மிகு கோட்டை மாரியம்மன்

திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி நெடுஞ்சாலை,
சென்னை—600 034,
தொலைபேசி எண்: 8279407

ஆசிரியர் :
கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A.,Ph.D.

மாலை : 38 | திருவள்ளுவர் ஆண்டு 2027 யுவ-தாது ஆண்டு பங்குனி-சித்திரை 1996 மார்ச்-ஏப்ரல் விலை ரூ. 6—00 | மணி : 3 & 4

திருக்கோயில் வாசகர்களுக்கு அறிவிப்பு

அன்பு வாசகர்களே ! வணக்கம்,

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர் களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்.

உயர்திரு **ஆணையர்** அவர்கள்
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
சென்னை-600 034.

என்ற முகவரிக்கு பணவிடை அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

சந்தா விவரம்

அரை ஆண்டு	..	ரூ.	18-00
ஓர் ஆண்டு	..	ரூ.	36-00
ஆயுள்	..	ரூ.	300-00

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும்,
முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

பொருளடக்கம்

'' மான் ஓடி வந்ததே கண்டீர்களா? ''
—மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்
சபலங்கள்
—திருமிகு ச. சாவர்க்கர் இ.ஆ.ப.,
தருமமே தலைகாக்கும்
—ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரசுவதிசுவாமிகள்
பக்திக் கண்ணீர் !
—டாக்டர் டி. செல்வராஜ்
திருமங்கை மன்னன் பாமாலை
—புலவர் மதுரகவி ராமானுஜம்
திருநாமப் பெருமை
—ஏ. பரந்தாம ராமானுஜதாசன்
வாழி எம் முருகா வாழி!
—டாக்டர் கவிஞர் முருகுவண்ணன்
நடனானந்தம் பாடிய நல்லோர்
—கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்
அருள்மிகு திருவிலஞ்சிக் குமாரர் திருக்கோயில்
—பைம்பொழில் கே. பாலசுப்பிரமணியன்
அரங்கனின் திருவுருவநலன்
—ஆ. சுப்பிரமணியன்
மரமாகி நின்றருளும் மாருதி
—நல்லாசிரியர் வெ. சுந்தரம்.
கடும்பாடி சின்னஅம்மன்
—வசந்தி சுந்தரராசன்
மதுரை அருள்மிகு மீனாட்சி அம்பிகைதியானம்
—கி. பழநியப்பனார்
அறப்போதில் ஆட்சி செய்யும் அன்னை ஆதிகாமாட்சி—வெ. சுந்தரம்
விற்பிடித்த வேளைக்காரன்
—திருப்புகழ் நாவலர் கே. எஸ். சுப்பிரமணியன்
திருக்கழுக்குன்றத் திருத்தலப் பெருமை
—பி. வி. கிரி.
அயன்புரத்தில் ஓர் அய்யன் —சீ. வசந்தி.
நாதமுனிகள்
—டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன்.



''மான் ஓடிவந்ததே கண்டீர்களா?''

மாண்புமிகு
தமிழக முதல்வர்
முத்தமிழ் அறிஞர்
டாக்டர் கலைஞர்
அவர்கள்

வழக்கம்போல் வள்ளுவர் தம் மாணாக்கனுக்குத் தமிழ் இலக்கணம் கற்றுக் கொடுக்கும் நேரம். அவரது அகன்ற நெற்றியில் தேக்கப்பட்ட சிந்தனைப் பெருவெள்ளம் ஒளி வீசி மடைகளின் வழியாகப் பாய்ந்து கொண்டிருந்தது.

அப்போது அழகிய மான் குட்டியொன்று அச்சத்தால் நடுக்குற்றுத் தன் இனத்துக்குரிய இயல்பான வேகத்தை இரட்டிப்பாக்கிய வண்ணம் வள்ளுவரின் குடிலுக்குள் ஓடிஒளிந்து கொண்டது.

குறளாரின் குளிர்ப்பார்வை அந்த இளம் மானின் மீது படுவதற்குள் வில்லும் அம்பும் தாங்கிய வேடன் ஒருவன் விரைந்து வந்து வள்ளுவருக்கெதிரே நின்றான்.

''இந்தப் பக்கம் ஒரு மான் ஓடி வந்ததே! கண்டீர்களா? கண்டிருந்தால் சொல்லிவிடுங்கள். அது என் அம்புக்குத்தப்பிய மான். ஒருவேளை உமது இல்லத்துக்குள் நுழைந்து விட்டதோ!'' என்று பரபரப்புடன் கேட்டான்.

வள்ளுவர் அமைதியாகச் சொன்னார். 'மானா?' இந்தப் பக்கம் வரவில்லையே! அதோ அந்தப்பக்கம் அல்லவா சற்று நேரத்துக்கு முன் ஒரு மான் துள்ளியோடியது''.

இந்தப் பதிலைக் கேட்டதும் வேடன் ''அப்படியா'' என்று கூவியவாறு அவர் காட்டிய திக்கு நோக்கி ஓடத் தொடங்கினான்.

மாணாக்கன் மிகப் பணிவுடன் வள்ளுவரைப் பார்த்துக் கேட்டான். 'பெருந்தகையே! பொய் கூடாது. அது பெருந்தீது என்று ஒரு முறை விளக்கியிருக்கிறீர்களே! இன்று தாங்களே அந்த வேடனிடம் ஒரு பொய் கூறினீர்களே! சரிதானா?'

வள்ளுவர் புன்னகை புரிந்தவாறு விடையளித்தார். ''கேடு இல்லாத நன்மையை விளைவிக்கக்கூடிய பொய்யான சொல்லும் வாய்மை என்று கூறத்தக்க இடத்தைப் பெற்று விடும். நான் வேடனிடம் உண்மையைச் சொல்லியிருந்தால் அந்தப் புள்ளிமானின் உயிர் போயிருக்கும் அல்லவா? நான் கூறியது பொய்தான், எனினும் அது ஒரு நன்மையைச் சொன்னதால் வாய்மையாகவே கருதப்படும்.

வள்ளுவர் இந்த விளக்கத்தைச் சொல்லி முடித்து விட்டுஎதிரேயிருந்த ஏட்டையும்எழுத்தாணியையும் எடுத்தார். குறள் உருவாயிற்று.

''பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்''(குறள்)

அதனைத் தொடர்ந்து மாணாக்கனிடம் பேசினார்.

''இளைஞனே! இந்த விளக்கத்தைப் பயன்படுத்திக் கொண்டு பொய் சொல்வதையே வாழ்க்கையாக ஆக்கிக் கொள்ளக்கூடாது! ஒருவன் தன் நெஞ்சறியும் உண்மையை மறைத்து விட்டுத் தன்னைக் காத்துக் கொள்ளவோ

அல்லதுபிறவழிச் சூழலிலோ பொய்கூறுவானே யானால் அப்படிப் பொய் கூறியவனுடைய நெஞ்சமே அவனைச் சுட்டுப் பொசுக்கிவிடும். அதனைக் குறிப்பிடவே இந்தக் குறளையும் எழுதியிருக்கிறேன்.

''தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்''

(குறள் 293)

வள்ளுவரின் அருமை கருத்துக்களைக் கேட்டு மகிழ்ந்த மாணாக்கன் அவர் கால்மலர் தொழுது நின்று ''வாழ்க வள்ளுவம்'' என்று முழங்கினான்

—மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் 'குறளோவியம்' காவியத்திலிருந்து இக்கருத்தோவியம் நன்றியுடன் எடுத்து வெளியிடப்படுகிறது.

பெய்யெனப் பெய்யும் மழை

'தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழு[தெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை''

இந்தக் குறளுக்கு உரை எழுதிய பலரும் தவறான உரையே எழுதியிருக்கிறார்கள்.

கழனிக்கு மழை தேவை என்று உழவன் நினைத்தபோது உடனே மழை பொழிந்து விட்டால்-அந்த மழை எத்தனைக் குடும்பங்களின் நல்வாழ்த்தைப் பெறுகிறது? பெய்யென பெய்யும் மழை பெறுகிற புகழ் எண்ணிலடங்கா!

அது போன்றவளாம் கணவனையே தெய்வமாகக்கருதும் பெண்! இந்தக்கருத்தைத் தான்வள்ளுவர் வண்ணத்தமிழிலே குழைத்துத் தந்திருக்கிறார்.

—மாண்புமிகு முதல்வர்
டாக்டர் கலைஞர் அவர்கள்



உ



சபலங்கள்

திருமிகு ச. சாவர்க்கர், இ.ஆ.ப.,

ஆணையாளர்,

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,

சென்னை-34

அச்சம் அகன்றிட ஆண்டவனை வேண்டிடுவார்
மிச்சமின்றி ஆசைகளை ஓங்கிடச் செய்திடுவார்
ஆசைகள் ஒடுங்கிடச் செய்திடவே
மறுத்திடுவார்
ஆதலால் அச்சமே மேலிடச் செய்திடுவார் 1.

அவலங்கள் மிகுத்திட்டால் அர்ச்சனைகள்
செய்திடுவார்
அர்ச்சனையால் பிரச்சினைகள் தீருமென
நம்பிடுவார்
தீராமல் போனாலோ நம்பிக்கையில்
தளர்ந்திடுவார்
பாராமல் இருக்கின்றார் கடவுள்
என்றிடுவார். 2.

யோகம் அடிக்குமெனக் காத்துக் கிடந்திடுவார்
சோகம் சூழ்ந்திட்டால்சோர்ந்தே போயிடுவார்
சோதிடம் சொல்பவரைத் தேடியே
அலைந்திடுவார்
சோதனையை வெல்வதற்கு வேள்விகளைச்
செய்திடுவார் 3.

வேள்விகளின் தோல்வியினால் வேதனை
அடைந்திடுவார்
வேதனையின் விளைவாக விதியினை
நொந்திடுவார்
விதியினை நிந்தித்தே விரக்தி அடைந்திடுவார்
விரக்தியின் முடிவாக இறைவனிடமே
திரும்பிடுவார். 4.

இறைவனே தஞ்சமென்று பொறுமை
காட்டிடுவார்
இரண்டொன்று கிடைத்திட்டால் மறுபடியும்
மறந்திடுவார்
யாண்டும் இன்பமென ஏமாந்து இருந்திடுவார்
மீண்டும் துன்பமென்றால் இறைவனையே
நாடிடுவார். 5.



தர்மமே தலைகாக்கும்!

ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள்

புத்தாண்டு பிறக்கப் போவதற்கு அறிகுறியாக இயற்கையன்னை தனது மர வர்க்கங்களின் அரசிளங் குழந்தைகளான அரசையும் வேம்பையும் முதலில் அடியோடு இலையுதிரச் செய்கிறாள். பிறகு பச்சைத் துளிர்களைத் தழைக்க வைக்கிறாள்.

அரசுக்கும் வேம்புக்கும் கல்யாணம் செய்து அதனடியே விநாயகரையும் நாகராஜனையும் பிரதிஷ்டை செய்வது தொன்று தொட்ட வழக்கு. பனிக்காலத்துக்குப் பின் இலை உதிரும்போது இந்த மரங்களைப் பார்த்தால் இலையே இருக்காது. பிள்ளையாரும் நாகராஜனும் மரத்தின் நிழற் குடையில்லாமல் சூரிய வெளிச்சம் தங்கள் மேல்படுகிற மாதிரி இருப்பார்கள். இது, இம்மாதிரி ஆகாசம் பார்க்க சுக உஷ்ணமாக சூரிய வெளிச்சத்தை ஆனந்தமாக அநுபவிக்கிற பருவ காலமாகவே இருக்கிறது. மழையிலே குடை வேண்டும். கொளுத்துகிற வெயிலில் குடை வேண்டும். கடும்பனிக் காலத்திலும் இரா வேளையில் சூரியன் இல்லாத போது ஆகாசம் பார்க்க உட்கார்ந்திருக்க முடியாது. ஆனால் அத்தனை பனியில்லாத இந்த இலையுதிர் காலத்தில்-சிவராத்திரியோடு குளிர் 'சிவ சிவா' என்று போய்விடும் என்பார்கள். அப்படிப் பட்ட காலத்தில் உஷ்ணமாக சூரியன் இருக்கிற காலத்தில், பகல், இராப்பொழுது இரண்டிலும் ஆகாசம் பார்க்க உட்கார்ந்திருக்கலாம். இதை உணர்த்துகிறது போலவே இயற்கையன்னை இந்தப் பருவத்தில் விக்நேசுவரருக்கும் நாகராஜனுக்கும் சூரியபூஜை செய்கிற மாதிரி மேலே இருக்கிற அரசு, வேம்பு மரங்களின் இலைகளை உதிர்த்து விடுகிறாள். நாகராஜனை சுப்பிரமணிய ஸ்வாமி என்றே சொல்லலாம். தெலுங்கர்கள் சுப்ரமண்யர், பாம்பு இரண்டையும் 'சுப்பராயுடு' என்றே சொல்கிறார்கள். ஷஷ்டியில் நாகராஜ பூஜை செய்கிற வழக்கம் நம் தமிழ் தேசத்திலும் பிரசித்தியாக இருந்து வந்திருக்கிறது. ஆதி தம்பதிகளின் முதல் குழந்தைகளான பிள்ளையார், குமார ஸ்வாமி இரண்டு பேருக்கும் இயற்கையன்னை காட்டுகிற பரிவு, பார்வதி பரமேசுவரர்களுன் குழந்தைகளான நம் அத்தனை பேரிடமும் காட்டுகிற அன்புக்கு அடையாளமாக இருக்கிறது.

அது நிறைந்த பரிவாக இருக்கிறது. இப்போது சுகோஷ்ணமாக மித வெப்பமாகஇருப்பதால் இவர்களை இப்படிச் சூரிய ஒளியில் உட்கார்த்தி வைத்திருந்தாலும், வஸந்த காலம் வந்தவுடன், சூரியன் கொஞ்சம் உக்ரமானவுடன், அது அவர்களை உபத்திரவப்படுத்தக் கூடாது என்கிற கரிசனம் இயற்கையன்னைக்கு வந்திருக்கிறது. சூரியன் கடுமையாகும் காலத்தில், துளிர்கள் தழைத்துப் பசுங்குடை பிடிக்கிறாள். இலையுதிர்ப்பது, துளிர்ப்பது எல்லாம் இயற்கை; லோக நியதி; அவை யுகாந்தரங்களாக மாறாமல் நடப்பவை.

பிரபஞ்சத்தில் ஒவ்வொன்றுக்கும் இப்படிதான் நடக்க வேண்டும் என்று நியதி இருக்கிறது. அப்படி அவை நியதிப்படி நடப்பதால் தான் உலக வாழ்க்கை நடக்க முடிகிறது. இல்லாவிட்டால் எல்லாம் தறிகெட்டுப்போய் விடும். அதாவது லோகத்திலுள்ள சமஸ்த ஜீவராசிகளும், சௌக்கியமாக வாழ வேண்டும் என்கிற அன்பான எண்ணத்திலேயே அவை ஒன்றோடொன்று ஒத்துப் போவதற்காக இப்படி ஒவ் வொன்றுக்கும் ஒரு தர்மம், நியதி, ஈசுவரனால் ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. தன் குழந்தைகளை வெயில்படாமல், மழைபடாமல் காப்பாற்ற வேண்டும். அவர்களுக்கு இள வெயிலின் வெப்பம் தேவையாக இருக்கிற போது அதைத் தந்து அரவணைக்க வேண்டும் என்கிற அன்பு ஈசுவரனுக்கு இருப்பதால் அதற்கு அதற்கு அநுசரணையாக இயற்கையை நடத்தி வைத்து மரங்களுக்கு ஒரு நியதியை, தர்மத்தைத் தந்திருக்கிறார்.

இந்த அன்பைப் பெற நமக்கு யோக்ய தாம்சம் வேண்டாமா? வேண்டும். மரத்துக்கும் மட்டைக்கும் இருக்கிற நியதி நமக்கும் உண்டு. லோக சேமத்துக்காக அதை நாம் நடத்திக் காட்டுகிறபோதுதான் ஈசுவரனின் அன்பைப் பெற பாத்தியதை கேட்கலாம். மனிதனுக்காக உள்ள இந்த நியதிக்கே தர்மம் என்று பெயர். இந்த நியதியை மீறவும் மனிதனுக்கு மூளையைத் தந்து ஸ்வாமி விளையாட்டுப் பார்க்கிறார். அந்த மூளையை வைத்துக் கொண்டு இவனும் எதை எதையோ செளக்கியமாக நினைத்துக் கொண்டு, அவற்றுக்காக அலைகிறான். இதில் தனக்கான தர்மத்தையும் மீறுகிறான். ஆனால் இறுதியில் செளக்கியத்தைத் தருவது தர்மமே.

ஏதோ ஒன்று உலக மக்கள் எல்லோரையும் ஏதோ ஒரு விதத்தில் இந்த தர்மத்தின் திசையில் திருப்பிக் கொண்டுதான் வந்திருக்கிறது. இதனால்தான் சகல தேசங்களிலும் மனிதன் தன்னுடைய பௌதிகத் தேவைகளை பூர்த்தி செய்வதோடு மட்டும் நிற்காமல் வேறு சில 'விசித்திரமான' காரியங்களைச் செய்து வருகிறாள். ஒருவன் சிலுவை என்று ஒன்றை வைத்துக் கொண்டு பைபிள் சொல்கிறான். இன்னொருவன் 'நமாஸ்' செய்கிறான். வேறொருவன் விபூதியைக்குழைத்துப்பூசிக்கொள்கிறான். இன்னொருவன் நாமக்கட்டியைக் குழைத்துப் போட்டுக் கொள்கிறான். இவற்றால் நேருக்கு நேர் எந்த பௌதிகப் பலனும் தெரியா விட்டாலும் தலைமுறை தத்துவமாக இவற்றை மனித சமுதாயம் பின்பற்றி வந்திருக்கிறது. ஏன் இப்படிச் செய்திருக்கிறது?

உலக வாழ்வுக்கு மனிதன் பணமும் பொருளும் சேர்த்தான். அன்றைய தேவையோடு போதாது என்று எதிர் காலத்துக்காகவும் பொருளீட்டினான். 'எதிர்காலம்' என்கிற போது அது எத்தனை வருஷம் என்ற கேள்வி வந்தது. எப்படியிருந்தாலும் ஒருவன்ஆயிரம் பதினாயிரம் வருஷம் இருக்கப் போவதில்லை என்று தெரிந்தது. ஒரு மநுஷ்யனின் ஆயுள் உள்ளவரைக்கும், அந்த மனுஷ்யனின் சந்ததிக்கும் தேவைப்படுகிற சொத்தைத் தேடினான்.

இந்த மனுஷ்ய ஆயுள் முடிந்த பின் அவன் என்ன ஆகிறான் என்ற கேள்வி வந்தது. இந்த உடம்பு போவதோடு மநுஷ்யனும் போய்விடவில்லை என்று அந்தந்த தேசத்திலும் தோன்றிய மகான்கள் கண்டார்கள். ஆனால் இந்த உடம்புக்காகத் தேடிய பணமும், பொருளும் உடம்பு போன பின் அந்த மநுஷ்யனுக்குச் சிறிதும் பிரயோஜனம் இல்லை என்று கண்டார்கள். உடம்பு போனபின் உயிர் நல்ல கதி அடைவதற்குச் செய்ய வேண்டியது எதுவோ அதை அந்த மகான்கள் கண்டார்கள். பல தேசங்களில் பல விதத்தில் வழி கண்டார்கள். சிலுவை, நமாஸ், விபூதி, திருமண் எல்லாம் இப்படி வந்தவையே.

'லோகம் முழுவதையும் பகவானுடையதாகப் பார்த்து அதற்கேற்ப எப்படி நடக்க வேண்டுமோ அப்படி நடப்பதே மனுஷ்யர்களின் தர்மம். தனக்கென்று மட்டும் இவன் செய்துகொள்கிற காரியங்கள் இவனை அதர்மத்தில்தான் தள்ளும். எனவே, இப்போது இவனுக்கு இருக்கிற சுயநலத்தைக் குறைக்க வேண்டும்; இவனுக்கு ஈஸ்வரனின் நினைப்பை உண்டாக்கி அவனுடைய உடைமையே உலகமெல்லாம் என்ற அறிவை ஏற்படுத்த வேண்டும்' என்ற அடிப்படையில்தான் சகல மதங்களும் உண்டாகி யிருக்கின்றன. 'உன் ஆசைப்படி நடந்து கொண்டு உனக்கென்றே சொத்து சேர்த்துக் கொள்' என்று சொல்கிற மதம் எதுவுமே இல்லை. தன்னை முக்கியமாக நினைத்துக் கொள்கிற வரையில் இவன் சுய நலத்துக்குத்தான் காரியம் செய்துகொள்வான் என்பதால் அத்தனை மதங்களும் கடவுள் என்கிற ஒன்றை இவனுக்குச் சொல்லி, 'அப்பா பிரபஞ்சம் முழுவதையும் செய்த அந்த மகா சக்தியின் முன் நீ ஒன்றுமேயில்லை' என்று காட்டி இவனுடைய அகங்காரத்தைக் குறைக்கின்றன. அந்த மகா சக்திமானைப் பிடித்து விட்டால் நம் மூளையைச் செய்த அளவே

அதை எப்படித் திருத்த வேண்டுமோ அப்படித் திருத்தி நம்மை நம் தர்மத்தில் ஈடுபடுத்திவிடுவான் என்பதால் பக்தியையே பெரும்பாலான மதங்கள் முக்கியமாக வைத்திருக்கின்றன.

ஆனாலும் கடவுள் என்று ஒரு தத்துவம், அதனிடம் பக்தியில் மனசைத் தோய்க்க வேண்டும் என்று மட்டும் சொல்லி விட்டால் சாமானிய ரீதியில் அதைப் பிடித்துக் கொண்டு ஸ்திரமாக நிற்க முடியவில்லை. பக்தியையும் காரிய ரூபத்தில் காட்டுவது என்றாலே சாதாரண ஜனங்களால் முடிகிறது. இதற்காகத்தான் ஒவ்வொரு மதத்திலும் சடங்குகள்-சந்தியாவந்தனம், ப்ரேயர், நமாஸ்-எல்லாம் வந்திருக்கின்றன. லோக வாழ்க்கையில் இருந்து கொண்டே இப்படி பக்தி செய்கிறபோது உலகில் எப்படி நடப்பது இவனுக்கு தர்மம் என்பதை மதங்கள் சொல்கின்றன. 'எல்லோரிடமும் அன்பாக இரு: தியாகம் பண்ணு; சேவை பண்ணு' என்று இப்படியெல்லாம் அத்தனை மதங்களும் சொல்கின்றன. இப்படி இவன் வாழ்க்கை நடத்திவிட்டால் அப்புறம் உடம்பு போனபின் உயிரானது அந்தக் கடவுளிடமே போய்ச் சேர்ந்துவிடும். இதை ஒரு சித்தாந்தம் அத்வைதமாகக் கடவுளுக்கு வேறில்லை என்று அதுவாகவே ஆகிவிடுவது என்று சொல்லும்: இன்னொன்று அவரிடம் போய் சேவை செய்து கொண்டே அவரது கிருபையைப் பெற்று ஆனந்தமாக இருப்பது என்று சொல்லும். முடிவான அந்த நிலையினைப்பற்றி இப்போது நாம் சண்டை போட்டு மண்டை உடைத்துக் கொள்ள வேண்டாம். 'ஏதோ ஒரு வழியில் கடவுளை அடைந்து விடுகிறோம். அதற்கப்புறம் இந்த லோக வாழ்க்கையில் நமக்கு ஏற்படக்கூடிய துக்கங்கள், கஷ்டங்கள், ஏமாற்றங்கள், தோல்விகள் எதுவும் அடியோடு இல்லை; நீங்காத, நிறைவான ஆனந்தம் மட்டுமே இருக்கும்' என்று தெரிந்து கொண்டால் இப்போதைக்குப் போதும்.

அப்படிப் பரமாத்மா நம்மைத் தம்மிடம் அழைத்துக் கொள்ள வேண்டுமானால், நாம் லோகத்துக்கும், அவருக்கும் ஆற்றவேண்டிய கடமைகளை வழுவில்லாமல் செய்ய வேண்டும். இந்தக் கடமைகள் தாம் நமக்கான தர்மம். அதாவது உடம்பு உள்ளபோதும், உடம்பு போன பிற்பாடும் நன்மை பயப்பதே தர்மம். உடம்பு போனபின் கைகால் முதலிய அவயங்கள் இல்லை. எனவே உடம்பு இருக்கும் போதே அது போன பிற்பாடு நற்கதி பெற வேண்டியதற்கான தர்ம காரியங்களைச் செய்ய வேண்டும். நாம் போனபின் பிறர் நலனுக்காக ஆயுள் இன்சூரன்ஸ் என்று ஒன்றைச் சொல்கிறார்கள். தர்மமே ஆயுள் போன பிற்பாடும் நன்மை பயக்கிற ஆயுள் இன்சூரன்ஸ். ஆயுள் உள்ளபோதும் அதே தர்மம் சாந்தியும் சௌக்கியமும் தருகிறது.

எந்த தர்மத்தை நாம் அநுஷ்டிப்பது என்ற குழப்பமே வேண்டாம். பல காலமாகப் பெரியவர்கள் பரம்பரையாக அநுஷ்டித்து வந்த தர்மத்தில் நாம் ஊறியிருக்கிறோம். அநுபவத்தில் அவர்கள் நித்திய சௌக்கியத்தை அடைந்து, இருக்கிறார்கள். இந்தத் தலைமுறையில் நாம் ஓயாத அதிருப்தியோடு கிளர்ச்சி என்று செய்கிற மாதிரி இல்லாமல் அவர்கள் நிம்மதியாக, நிர்சிந்தையாக இருந்தார்கள் என்று நிச்சயமாகத் தெரிகிறது. எனவே, அந்த தர்மத்தை நாம் கடைப்பிடித்தால் போதும். நாமாக ஒன்றைப் புதிதாக பண்ணிப் பிடித்துக் கொண்டால் வீண் சிரமம்தான். அது நல்லதாயிருக்குமா, கெடுதலாயிருக்குமா என்று நமக்கே ஓயாத சந்தேகமாக இருக்கும். ஆதலினால் முன்பே பெரியவர்கள் அநுஷ்டித்து, நமக்கென்று ஏற்பட்டுள்ள தர்மத்தைக் கைக்கொள்வதே நல்லது.

மநுஷ்யராகப் பிறந்துவிட்டால் கஷ்டம் ஆபத்து எல்லாம் வரத்தான் செய்யும். அதை உணர்த்தத்தான் புத்தாண்டின் முதலில் பூக்கும் வேப்பம் பூவை உண்கிறோம். வருஷத் தொடக்கத்திலேயே கசப்பை ஏற்கிறோம். ஏறக்குறைய வருஷ முடிவில் வரும் பொங்கல் பண்டிகையில் கரும்பை ருசிக்கிறோம். ஆரம்பத்திலேயே இனித்து விட்டால் முடிவில் கசந்து போகும். கசப்பென்று வெறுப்படைய வேண்டாம். கசப்பையே இயற்கை அன்னையின்-அல்லது தர்ம நியதியின்-மருந்தாக எதிர்கொண்டு வரவேற்போம். அதனால் போகப் போக முடிவில் எந்த அநுபவத்தையுமே தித்திப்பாக எண்ணுகிற மனப்பான்மை உண்டாகும். ஸ்ரீ ராமனுக்கு வனவாஸத்தில் ஏற்பட்ட கஷ்டம், ஆபத்து எல்லாம் பெரியவை. ஊருக்கு போகும் குழந்தைக்குத் தாயார் கட்டுச் சாதம் கொடுப்பது போல், ராமன் வனவாஸம் செல்லும்போது கௌஸல்யையும் செய்தாள். 'பதினான்கு வருஷம் கெடாமலிருக்கும் பட்சணம் எது? குழந்தைக்கு எதைத் தரலாம்!' என்று நிரம்ப ஆலோசித்தாள் கௌஸல்யை: பிறகு நிரந்தர பட்சணமான தர்மத்தைத்தான் கட்டிக் கொடுத்தாள்.

''ராகவா! தைரியத்துடனும் நியமத்துடனும் நீ பாதுகாக்கும் தர்மமே உன்னைப் பாதுகாக்கும்' என்று சொல்லித் தர்மத்தை ராகவனுக்குத் துணை அனுப்பினார்.

தர்மமே இறுதியில் ராமனுக்கு ஜயத்தைப் பெற்றுத் தந்தது. தர்ம மார்க்கத்தில் ஒருவன் இருந்தால் பிராணிகள்கூட அவனை ஆதரிக்கும்; அதர்மத்தில் விழுந்தால் உடன் பிறந்தவனும் எதிரியாகி விடுவான் என்பதை ராமாயணம் நிரூபிக்கிறது. ஸ்ரீ ராமனை வானரங்களும் ஆதரித்தன. ராவணனையோ சகோதரன் விபிஷணனும் விட்டு விலகினான்.

தர்மமே தலைகாக்கும். பத்துத் தலை ராவணன் விழுந்து நாசமாக ஸ்ரீராமசந்திரமூர்த்தி விஜயராகவனாகத் தலை நிமிர்ந்து நின்றதற்குக் காரணம்-தர்மம் தலை காத்தது தான்: அவரவருக்கும் முன்னோர்களால் அநுஷ்டிக்கப்பட்ட தர்மமே ஒவ்வொரு மதமாகயிருக்கிறது. இந்த தர்மத்தை அவரவரும் தைரியமாக-நியமமாகப் பின்பற்றிச் சாசுவத சௌக்கியத்தைப் பெறுவார்களாக!



திருக்குற்றால நாதர் தலப் பதிகங்கள் - ஒலி நாடா வெளியீட்டு விழா

1996-ஏப்ரல்-5 திருக்குற்றாலம்-அருள்மிகு திருக்குற்றாலநாதர் திருக்கோயில் குடமுழுக்கு பெருவிழாவன்று-திருவாவடுதுறை ஆதீனம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள் திருவாவடுதுறை ஆதீன மடத்தின் சார்பில் 'திருக்குற்றால தலவரலாறு' என்னும் நூலும் திருக்குற்றால தலப் பதிகங்கள் அடங்கிய ஒலி நாடா கேசட்டும் வெளியிட்டு வழங்கினார்கள்.

திருக்குற்றாலநாதர் குடமுழுக்குவிழாவில் ஆதீனம் சார்பில் வெளியிடப்பட்ட ''திருக்குற்றாலநாதர் தலவரலாறு'' என்ற நூல் மற்றும் திருக்குற்றால தல பதிகங்கள் அடங்கிய ஒலிநாடா கேசட் இவற்றின் முதல் பிரதியை நெல்லை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு வேலு, இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையர் திரு சாவர்க்கர் இ.ஆ.ப. இருவரும் இணைந்து பெற்றுக் கொண்டார்கள். அதன் பின் சுவாமிகள் தமது அருளுரையில் 'பூஜைகள் இரண்டு வகைப்படும். ஒன்று ஆன்மார்த்தம், மற்றொன்று பரார்த்தம், ஆன்மார்த்தம் வீட்டில் நமது நன்மைக்காக செய்யப்படுவது, பரார்த்தம் உலக நன்மைக்காகக்கோயில்களில் சிவாச்சாரியார்களை கொண்டு செய்விப்பது.

கல்லிலும் செம்பிலும், கடத்தும் ஆற்றல் அதிகம் உண்டு. எனவே மூலவர் கல்லிலும் உற்சவர் செம்பிலும் உள்ளது. மின்சாரத்தை செப்புக் கம்பியின் மூலம் பாய்ச்சுவது போல மந்திர சக்தி குடமுழுக்கு மூலம் செலுத்தப்படுகிறது. இந்த சக்திகூடிய தெய்வத் திருவுருவங்களை எவர் வழிபட்டாலும் அவர்களுக்கு அந்த காந்த சக்தி எளிதில் கிடைக்கிறது. மேலும் உற்சவரை வீதி உலா செய்விப்பதன் மூலம் மக்களுக்கு அருள்சக்தி கிடைக்கிறது குடமுழுக்கு தரிசனம் செய்தால் பனிரெண்டு வருடங்கள் கோவில் தரிசனம் செய்த பலன் கிடைக்கும்.

நமது மதம் அன்பு மதம், எனவே ஒருவருக்கொருவர் அன்புகாட்டி மனித நேயத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும் 'அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே' என திருமூலர் கூறுகிறார். நாம் பிரார்த்தனை செய்யும்போது துன்பப்பட்டவர்களுக்காகவும், பாவப்பட்டவர்களுக்காகவும், ஏழைகளுக்காகவும் பிரார்த்தனை செய்ய வேண்டும்

நமது இந்து மதத்தில் ஜாதி வேறுபாடு கிடையாது. தேவாரம் பாடிய திருஞான சம்பந்தர் ஒரு பிராமணர். அவரோடு பல தலங்களுக்கு யாழ் வாசித்துச் சென்ற திருநீலகண்ட யாழ்ப்பாணர் பாணர் குலத்தினர். நந்தனார் ஒரு ஆதிதிராவிடர். திருக்குறிப்புத் தொண்டநாயனார் ஒரு சலவைத்தொழிலாளி, காரைக்கால் அம்மையார் வணிக குலத்தைச் சேர்ந்த பெண்ணடியார். திருநீலகண்ட நாயனார் குயவர் வகுப்பைச் சார்ந்தவர் சேரமான் பெருமான் நாயனார் ஒரு சேரநாட்டு அரசர் ஆக ஆண்டி முதல் அரசர் வரை அனைவரும் இறைவன் மீது பக்தி செய்து முக்தி அடைந்துள்ளனர். இறைவனை அடைவதற்கு ஜாதியோ, தொழிலோ ஒரு தடை அல்ல'', என தமது அருளுரையை நிறைவு செய்தார்கள்.

திருக்குற்றால தலப்பதிகங்கள் ஆடியோ கேசட்டில் பதிவு செய்வதற்காக பாடிய கலைமாமணி சா. திருஞானசம்பந்த ஓதுவார் மூர்த்திக்கு சால்வை அணிவித்து சம்பாவனை வழங்கினார்கள். பின்னர் விழாவில் கலந்து கொண்ட அன்பர்கள் அனைவருக்கும் திருநீற்றுப் பிரசாதமும் வழங்கினார்கள்.

பக்திக் கண்ணீர்

டாக்டர் டி. செல்வராஜ்

தமிழ்த் துறை தலைவர், உ. நா. அரசுக் கல்லூரி. பொன்னேரி.

மாணிக்க வாசக சுவாமிகள், 'யானே பொய். என் நெஞ்சும் பொய். என் அன்பும் பொய்யானால் வினையேன் அழுதால் உன்னை பெறலாமே!?'' என்று வினவுகிறார். 'நானும் பொய்யானவன். என் நெஞ்சம் உன்னை யடைய எனக்குத் துணை செய்திருக்க வேண் டும் அதுவும் பொய்த்துவிட்டது, பொய் யானது; உன் மீது நான் செலுத்தும் அன்பும் உண்மைக்கு மாறாக இயங்குகிறது. அன்பும் பொய்யானது. இவை அனைத்துக்கும் கார ணம் எனது வினைகள் அல்லவா! வினைகளால் கட்டுண்ட எனக்கு உன்னையடைய ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. நான் தொடர்ந்து அழுதால், பக்திக் கண்ணீர் வடித்தால், உன்னை அடைய முடியுமா?' முடியும்.

அன்பின் ஆழத்திலே விளைவது கண்ணீ ரின் ஊற்று. பரவச பக்தியின் சாறுதான் கண்ணீர். இது பொய்யான நீலிக்கண்ணீர் அன்று; துன்பக் கண்ணீர் அன்று; ஆனந்தக் கண்ணீரும் அன்று; அனைத்துக்கும் மேலான டக்திக் கண்ணீர்.

எந்த உறுப்பு அடிபட்டாலும் துன்ப உணர்ச்சியால் அழுவன கண்களே. இன்ப உணர்ச்சிகளால் உள்ளம் உந்தப்பட்டாலும் கண்கள் அழும். உடலின் அல்லது உள்ளத்தின் துன்பங்களால் மக்கள் 'அல்லலுற்று ஆற்றாது அழுத கண்ணீர்' துன்பக் கண்ணீர். உடலின் நோயால் உள்ளம் வருந்த அதன் விளைவால் துன்பக்கண்ணீர் தோன்றி வழிகிறது. இக் கண்ணீர் கீழ் இமையில் பிறக்கும்; உப்புக் கறிக் கும். அளவு கடந்த ஆனந்தம், உள்ளம் தாங் காத குளிர்ச்சியைத்தர, அதன் காரணமாக உடல் சிலிர்க்க, கண்களில் நிறைந்து, ததும்பி வழிவது ஆனந்தக் கண்ணீர். இது மேல் இமையில் பிறக்கும்; தித்திக்கும். இதனை ''உவகைக்கலுழ்ச்சி'' (கலுழ்ச்சி - அழுகை) என்றும் ''ஆனந்தப் பையுள்'' (பையுள்- துன்பம்) என்றும் பழங்காலத்தில் கூறினார்கள். ஒன்று அல்லது பல காரணங்களால். ஆனந்த மாக இருக்கும் அனைவருக்கும் தோன்றுவது ஆனந்தக் கண்ணீர். இவற்றைவிட உயர்ந்தது பக்திக் கண்ணீர். இக்கண்ணீர் விடும் 'பேறு' சிலருக்கே—பக்தர்களில் சிலருக்கே வாய்க்கும். இது சுகமான அனுபவம்; சுவைத்து மகிழ வேண்டிய அனுபவம்.

உள்ளத்துள் உறைகின்ற இறைவன், பக்தி யால் நிறைந்த பக்தனின் உள்ளத்தைத் தனது அருளால் நெகிழ்க்க, அப்பக்தனுக்குக் கரை யில்லா ஆனந்தத்துடன் உருகிப் பெருகி வழி வது பக்திக் கண்ணீர். அவனருள், பிரையிடு வதைப் போலத் தூய உள்ளத்திலும், உயிரி லும் கலக்கும்போது, உயிரின் தற்காலிகச் சட்டையான உடம்பிலுள்ள 'எலும்புகள் தம் வன்மை கெட்டு உருகுகின்றன; உள்ளம் மிகக் கனிந்து இரங்கி, அன்பென்ற ஆறு கரைகளைக் கடந்து புரளுகிறது; நல்ல பொறியுணர்ச்சிகள் ஐந்தும் ஒன்றுபடுகின்றன; ''நாதா'' என்று வாய் (தன்னையே அறியாமல்) அரற்றுகிறது; உரை தடுமாறுகிறது. மயிர்கள் சிலிர்க்கின்றன. கைகள் கூம்புகின்றன; மனம் மலர்கிறது. இவையனைத்தும் ஒரு நொடியில் கடந்து விடு கின்றன. தொடர்ந்து; ''கண்களி கூர நுண் துளி அரும்ப''- மகிழ்ச்சியால் மலரும் அதுவே பக்திக் கண்ணீர் (திருவாசகம் 4:80-85) பக்திப் பயிர் - கண்ணீர்ப் பயனைத்தானே அறுவடை செய்து கொள்கிறது. கண்ணீரில் மூழ்கிக் கிடப்பன கண்கள் மட்டுமல்ல; உள்ளமும் தான்; உள்ளம் மட்டுமன்று; உயிரும்தான். அப்போது உயிரும் இறையும் உறவாடுகின்றன. எனவே, அழுதால் ஆண்டவனைப் பெறலாமா! பக்திக் கண்ணீரை வடித்தால் பெறலாம். உறுதியாகப் பெறலாம்.

குளத்தங்கரையில், அண்ணாந்து பார்த்து புனிதவாய் மலர்ந்து அழுத'' (பெரிய புராணம் திருஞான சம்பந்தர் புராணம், பாடல் 1) பிள்ளை, அப்புனித வாய்க்குத் தகுந்த ஞானப் பாலைப் பருகியது. திருஞான சம்பந்தர் பால் வேண்டி அழுத அந்த மழலை அழுகை ஒலியே ஆண்டவன் விரும்பிய தேவாரப் பாட்டாகி விட்டது. அவரது புனித வாயில் நிறைந்த ஞானப்பாற்கடல், பக்தி அமுதமாய்ப் பிர வாகம் எடுத்துப் பரமனைப் பற்றிக் கொண் டது. அழுத ஞானக் குழந்தைக்கு ஆண்டவன் அருள் நிறைந்தது.



காளத்தி மலையுச்சி—அங்கே குடிகொண்டிருக்கும் குடுமித் தேவரை முதன் முதல் தரிசிக்கிறார் திண்ணனார்-திருக்கண்ணப்ப நாயனார். 'பேருவகையின் வேகமும், பேரன்பின் வேகமும் ஒன்றையொன்று முந்த, மிக்க விரைவோடு வேகமாய் ஓடிச் சென்றார்; தழுவினார்; மோந்து நின்றார்; பெருமூச்சுவிட்டார்; மயிர்க்கால்கள் சிலிர்க்க, 'மலர்க்கண்ணீர் அருவி பாய'', 'அடியனேற்கு இவர்தாம் இங்கே அகப்பட்டார் அச்சோ'' என்று அதிசயித்துக் கூறி, அவரைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டார். பக்தி வலையில் படும் பரமன், கற்றவர் விழுங்கும் கற்பகக்கனி, கரையிலாக் கருணை மாக்கடல், திண்ணனார் வடித்த பக்திக் 'கண்ணீர் அருவி'யில் சங்கமமானது ஓர் அற்புதமே. இதனால் விளைந்த சுகானுபவத்தைக் கண்ணப்ப நாயனார் அறிவார்; காளத்தி நாதனார் அறிவார்; வேறு யார் அறிவார்? கண்ணப்பனார் வடித்த பக்திக் கண்ணீர் அவருக்கு ஆறே நாட்களில் முக்தி அளித்தது.

''நாயகன் சேவடி தைவரும் சிந்தையும், நைந்துருகிப் பாய்வதுபோல்,'அன்புநீர் பொழி கண்ணும்' (பெரிய புராணம், திருநாவுக்கரசு நாயனார் புராணம், பாடல் 140) உடையவர் திருநாவுக்கரசர், இவரது திருப்பெயரால் அப்பூதி அடிகளார் தருமச்சாலைகள், குளங்கள், சோலைகள் முதலியவற்றை நிறுவினார். அப்பூதியடிகளார் திருநாவுக்கரசரை நேரில் முன்னர்க் கண்டதில்லை; பின்னர் அவரை நேரில் கண்டதும் தலைமீது கைகளைக் குவித்து வணங்கினார்; ''கண்கள் அருவி நீர் பொழிந்தன''; உரை தடுமாறியது; உடம்பெல்லாம் மயிர் சிலிர்த்தது; அவரது காலடியில் விழுந்து பணிந்தார் (பெரிய புராணம். அப்பூதி அடிகளார் புராணம், பாடல் 17). திருநாவுக்கரசரின் கண்கள் வடித்த 'அன்பு நீரும்' அப்பூதி அடிகளாரின் கண்கள் வடித்த 'அருவி நீரும்' பக்திக் கண்ணீர்.

'பேரோர் ஆயிரமும் உடையானைக்' காதலால் கனிந்து பணியும்போது, அந்த ஓராயிரம் நாமத்தையும் கண்ணீர் மல்க உணர்ந்து உச்சரிக்க வேண்டும். கடவுள் வேறு; அவரது நாமம் வேறன்று. இரண்டும் ஒன்று. கடவுளை போலவே அவரது நாமமும் பேராற்றலுடையது; பேருள் தர வல்லது. கடவுளை மறந்தவர் இல்லை; சிலர் மறந்தாலும் அவருக்கு உடனே கடவுளை நினைவுபடுத்துவது அக்கடவுளின் நாமமே. கடவுள்ன் திருநாமத்தைக் கண்ணீருடன் புலம்பிக் கூறியவர்கள் பெற்ற பலன்கள் பலப்பலவாம். 'ஆதிமூலமே' என்ற நாமத்தின் பெருமையை நிலை நாட்டியது ஓர் யானை', 'ராம' நாமத்தின் மகிமையை வாலியால் தெரிந்து கொள்ளலாம். பக்த பிரகலாதன் அரி என்ற நாமத்தை உச்சரித்து பேறு பெற்றான். திரௌபதியின் மானத்தைக்காத்தது' கிருஷ்ணா' என்ற திருநாமமன்றோ! திருநீலகண்ட நாயனாரின் துணைவியார் உரைத்தபோது உரைத்த 'திருநீலகண்டம், என்ற சொல், இருவருக்கும் என்றும் நீங்காத இளமையை அருளியது. பாம்பன் சுவாமிகள் வேலும் மயிலும்' என்ற நாமங்களைக் கூறும் திறத்தைப் பாடுகிறார் .:—

''எழும்போதும் வேலும் மயிலுமென்
பேனெழுந் தேமகிழ்ந்து
தொழும்போதும் வேலும் மயிலுமென்
பேன்தொழு தேயுருகி
அழும்போதும் வேலும் மயிலுமென்
பேனடி யேன்சடலம்
விழும்போதும் வேலும் மயிலுமேன்
பேன்செந்தில் வேலவனே''.



''தொழுது உருகி அழ'' வேண்டுமாம்; அழும் போது வேலும் மயிலும் என்று, கூற வேண்டுமாம்.

'நமச்சிவாய' என்ற நாமத்தை ஓதும் முறையைத் திருஞான சம்பந்தர் அருளுகிறார்.

''காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி

ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது

வேத நான்கினும் மெய்ப்பொருள் ஆவது

நாதன் நாமம் நமச்சி வாயவே''

நமச்சிவாய என்ற நாதன் நாமத்தைக் காதலோடு ஓத வேண்டும்; அதற்கும் மேலாக உள்ளம் கசிந்து ஓத வேண்டும்; மீண்டும் மேலாகக் 'கண்ணீர் மல்க' ஓத வேண்டும். நாமத்தை ஓதுவதற்குரிய மூன்றாம் நிலையும், முடிந்த நிலையும் பக்திக் கண் ணீர் மல்குவதே, அக்கண் ணீர் அக நெகிழ்ச்சியின் வெளிப்பாடு; உயர்நிலைப் பக்தனின், உண்மைப் பக்தனின் மெய்ப்பாடு.

பக்திக் கண்ணீர் யாருடைய கண்ணீரைப் போன்றது! அது தாயை நினைந்தழும் சேயின் கண்ணீருக்கு நிகரானது. பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து அருள் பொழிவது பரம்பொருள். ஈன்ற தாய், குழந்தையைச் சினந்து துன்புறுத்தினாலும், அச்செயல் குழந்தையின் நன்மைக்கே நிகழ்கிறது. அப்போதும் அவளது அருளை நினைந்தே அழும் பண்புடையது அக்குழந்தை. குலசேகர ஆழ்வார் பாடுகிறார்;

''தருதுயரம் தடாயேலுன் சரணல்லால்
சரணில்லை
விரைகுலவும் மலர்ப்பொழில்சூழ் வித்துவக்
கோட்டம்மானே
அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும்
மற்றவள்தன்
அருள்நினைந்தே அழுங்குழவி அதுவேபோன்
திருந்தேனே''

இப்படித்தாயின் அருள் நினைந்தழும் குழந்தையின் கண்ணீருப் பக்திப் பித்துப் பிடித்தழும் டக்தனின் கண்ணீரும் நிகராகின்றன. இரண்டும் அடக்க முடியாத அன்பின் மேலீட்டால் நிகழ்பவை. தாயிடம் ஒன்றை அழுதுகேட்கும் உரிமை குழந்தைக்குண்டு; அதே உரிமை ஆண்டவரிடம் அடியவருக்குண்டு. நியாயமான ஒரு பொருளைத் தாயிடம் அழுது பெற்றுவிடும் குழந்தையைப் போல் அடியவரும் அழுதால் ஆண்டவரைப் பெறலாமே.

திருவள்ளுவ நாயனார்,
''அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்
ஆர்வலர்
புன்கணீர் பூசல்' தரும்'

என்று அன்பு முகிழ்க்கும் முறையை அழகாகக் கூறினார். அன்பிற்கு அடைக்கும் தாழ் இல்லை. அன்புடையவரின் மென்மையான கண்ணீரே, அன்பைப் பலரும் அறியுமாறு வெளிப்படுத்திவிடுகிறது. அன்பு, முடிவில் பக்தியாய்க் கனிகின்றபோது, அவர் குறித்த அன்புக் கண்ணீர், பக்திக் கண்ணீராக மாறிச் சுரக்க, அதனுடன் ஆண்டவரின் அருளும் சுரக்கிறது.

— — —

திருமங்கை மன்னன் பாமாலை

புலவர் மதுரகவி ராமானுஜம். கோவை

திருமங்கை மன்னன்தாம் தீந்தமிழை
ஆய்ந்துணர்த்த சீல ராவார்
குருவடிவாய் வந்துதித்த குமுதவல்லி
ஆரணங்கைத் துணையாய்ப் பெற்று
திருமகளின் நாயகன்தம் திருவருளால் மெய்ஞ்
ஞானம் அருளப் பெற்று
திருமாலின் அடியார்கள் ஆயிரத்தெண்
மக்கட்கும் ஆண்டு முற்றும்

திருவமுது செய்விக்கும் திருப்பணியில் ஈடுபட்டு
வரும்நன் னாளில்
பொருள்தேட முனைந்துநிற்கும் வேளையிலே
மன்றல்செய் கோலங் கொண்டு
திருமகளும் நாயகனும் அணிகலன்கள்
பலவணிந்து வந்தார் கண்டு
பெருவிருப்பால் அவரணிந்த பொருளெல்லாம்
கைப்பற்றி மூடை கட்டி

பெருமிதமாய் எடுத்தபோது முடியவில்லை
திறல்வீரர் திகைத்தார் அந்தோ!
பெருமானே! என்ன மந்திரம் போட்டாய்
சொல் என்றுவாளை உருவ வாவென
அருகணைத்துச் செவியினிலே மறையுரைத்த
மந்திரத்தை உபதே சித்தார்
திருமங்கை மன்னருந்தாம் இதனைக் கேட்டு
தாய்கண்ட சேயானார்.

திருமிகுநற் குமுதவல்லி நாச்சியாரும்,
அடியவரும் தமைச் சூழ்ந்துவர
இருநிலத்தில் எம்பெருமான் எழுந்தருளி
இருக்கும்தலம் எங்கும்சென்று
விருப்பமுடன் பைந்தமிழால் மங்களா
சாசனம் செய்து மகிழ்ந்து வந்தார்
வருத்தமெலாம் மாய்ந்தொழிய மக்களெலாம்
உய்வதற்குத் தொண்டு செய்தார்

திருவரங்கப் பெருமாற்குத் திருமதில்கள்
ஏழுமெழில் திருவா பரணமாம்
திருமங்கைமன்னன்தாம் ஆலிநாடன் வீதியென
கட்டுவித்தார்
கருணைமிகு கைங்கரியம் கலியன்போல்
காசினியில் யாரே செய்வார்?
அருந்தமிழில் அவர்போல பாடவல்லார்
அவனியிலே எவர்தாம் உள்ளார்?

நெஞ்சிருளைப் போக்குகின்ற நீண்டதமிழ்
நீள்பிறவி மாய்க்கும் தமிழே.
தஞ்சமெனத் தாமரையாள் கேள்வனையே
அடைந்துய்ய காட்டும் தமிழே.
துஞ்சும்போ தழைக்கும் தமிழ் துயரொழிக்கும்
தூயதமிழ் தொல்லைநோயாம்
நஞ்சாகும் பிறவிக்கு நாரணனை நற்றமிழால்
காட்டும் அம்மா.

கற்கண்டோ கனிரசமோ காமதேனோ
கடிமலரோ
விற்பிடித்த இராமபிரான் கடந்துசென்ற
கடல்முத்தோ
நற்றுணையாம் கோடையிலே இளைப்பாற்றும்
குளிர்தருவோ
உற்றமணம் வீசுதென்றலோ பூஞ்சுனையோ
குளிர்மதியோ

கற்றவர்கள் போற்றுகின்ற கற்பனையின்
ஊற்றோதாம்
சொற்சுவையோ பொருட்சுவையோ
சுகமளிக்கும் இன்னிசையோ
கற்பூரப் பெட்டகமோ களிப்பூட்டும்
தீம்பாலோ
முற்றியநற் கோற்றேனோ பரகாலன் பாசுரமே
உற்றுற்று உலகோர்தாம் உவந்துண்ணும்
அமுதாகும்

அஞ்சுதுறைத் தமிழிலக்கியம், ஆரணத்தின்
சாரமாம்,
நெஞ்சுவந்து படிப்போர்க்கு நெடிதின்பம்
பயக்குமால்,
தஞ்சமேல வந்தடையும் பக்தியும் வாய்மையும்
செஞ்சொல்லால் அருள்செய்த திருமொழியைப்
படிப்போமே.

கற்றவர்க்குக் கனிச்சுவையாம் காதலன்தம்
காவியமாம்
நற்றவர்க்கு ஞானநூலாம், நற்புலவர்க்
கிலக்கியமாம்
நற்றமிழின் புலமையால் நாலுகவிப்
பெருமாளென
கற்றவர்கள்கொண்டாடும் கலியனது பாசுரமே.
பவமதனை அறமாற்றும் பக்தர்குழாம்
கையினிலே
பவனிவரும் பரகாலன் பைந்தமிழ்ப் பாசுரங்கள்
உவமையிலாக் கடவுள்நெறி காட்டுகின்ற
ஓவியமாம்
செவிக்கினிய செஞ்சொல்லாம் சிந்தைமகிழ்
பாசுரமே.

திருநாமப் பெருமை

புலவர்

ஏ. பரந்தாம ராமானுஜதாசன், எம்.ஏ. பி.எட்.,

ஸ்ரீமந் நாராயணன் உலகம் யாவையும் படைத்து அவற்றின் உள்ளும் புறமும் பரவி நின்று, அவற்றிலுள்ள அனைத்து உயிரினங்களையும் காத்து, சரணம் புரிந்து வருகின்றான். அவனுக்குப் பலகோடி நாமங்கள் உள்ளன. அவற்றில் ஓராயிரம் நாமங்களைத் தொகுத்து ''ஆழியான் நாமம் ஆயிரம்'' (ஸ்ரீவிஷ்ணு சகஸ்ரநாமம்) கொண்ட தொகுப்பை நமக்கு ஸ்ரீநிவாச பகவான் அளித்தார். இதனை மகாபாரதத்தின் சாரமாக ஸ்ரீ பீஷ்மாசாரியார் தருமபிரானுர்கு கண்ணபிரான் முன்னிலையிலேயே கூறினார். இதனையே

''தொண்டக்குலத்திலுள்ளீர் வந்தடி தொழுது
ஆயிர நாமம் சொல்லி''

''பேருமோர் ஆயிரம் பிற பலவுடைய
எம்பெருமான்''

''பேராயிரமுடைய பேராளன்''

''பேராயிரங் கொண்டதோர் பீடுடையான்''

என்று ஆழ்வார்களும்

''மாமாயன் மாதவன் வைகுந்தன்
என்றென்று நாமம் பலவும் நவின்று''

என்று ஆண்டாளும்;

''பேராயிரம்.....அவ் அரியனுக்கே''

என்று கம்ப நாட்டாழ்வாரும் சிறப்பித்துக் கூறியுள்ளார்.

அடுத்து ஆயிரத்தையும் சுருக்கி 108 அஷ்டோத்திர நாமங்களாகவும், அவற்றையும் சுருக்கி 12 துவாதச நாமங்களாகவும், அவற்றையும் சுருக்கி 8 எழுத்துக்களைக் கொண்ட திருமந்திரமாகவும், அவற்றையும் சுருக்கி 3 எழுத்துடைய விஷ்ணு என்ற நாமமாகவும் நமக்கு அளித்துள்ளனர் சான்றோர்.

இப்படி எம்பெருமானுக்குப் பல்வகையான திருநாமங்கள் இருந்தாலும் யார் ஒருவர் எந்த பேரை இட்டு அழைத்தாலும் அந்த பெயரை ஏற்று, ஓடோடி வந்து அருள்புரிகின்றான். இதனையே 'தமர் உகந்தது எப்பேர் மற்று அப்பேர்தானே' என்றார் நம்மாழ்வார்.

திருநாமம் சொல்வதன் பயன்;

எம்பெருமானை அடைவதற்கு கர்ம யோகம், ஞான யோகம், பக்தி யோகம்போன்ற பல வழிகள் இருந்த போதிலும் ''அவன் திருநாமம் சொல்வதே'' (நாமசங்கீர்த்தனம்) எளியதும் சிறந்ததுமாகும். அதன் பலனைக் காண்போம்.

எம்பெருமான் நமது சட்புலனுக்கு அகப்படாமல் வெகு தூரத்திலிருந்தாலும், அவனது திருநாமம் சொன்னால் அது நமக்கு அருகில் நின்று உதவும். இதனையே

''அவன் தூரத்தனானாலும் அது கிட்டி நின்று உதவும்'' என்று முமுட்சுப்படி கூறுகின்றது, கட்டிப் பொன்னை உடனே அணிய முடியாது. அதை வெட்டி, உருக்கி, நகைகளாகச் செய்தால்தான் அணியமுடியும். ஆனால் நகைப்பொன்னையோ விரும்பிய உடனே அணிந்து மகிழலாம். எம்பெருமான் கட்டிப்பொன் போன்றவன். அவனைப் பக்தி யோகம், ஞான யோகம் போன்றவற்றால் தான் அடைய முடியும். அவன் திரு நாமமோ பணிப்பொன் அதாவது நகைப்பொன் போன்று நமக்கு அருகில் நின்று உடனே உதவும்.

கேசவன் எனும் அவன் பெயரினைச் சொன்னால் நமது துன்பம் அனைத்தும்கெட்டு ஒழியும். இதனையே

''கேசவா என்னக் கெடும் இடர் ஆய எல்லாம்'' என்றார் நம்மாழ்வார். நாராயண நாமத்தைச் சொன்னால், உணர்வெனும் பெரும்பதம் தெரியும், உய்யும்வழி அறியலாம். நற்பொருள் காணலாம்.

திருநாடு அடைய வழி அறியலாம். ஞானமாகிய குலத்தையும், கைங்கர்ய மாகிற பெருஞ் செல்வத்தையும், பரம பதத்தையும், பேரானந்தத்தையும், பல நன்மைகளையும், அவரவர் விரும்பியதையும் பெற்ற தாய் தரும் உதவியைவிடச் சிறந்த உதவிகளையும் பெறலாம் என்றும் முக்கால துன்பங்களும் தீரும் என்றும் ஆழ்வார்கள் கூறியுள்ளனர். இதனையே

''குலம்தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுயராயின வெல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும் பருளும்
அருளொடு பெருநில மளிக்கும்
வலம்தரும் மற்றும் தந்திடும் பெற்ற
தாயினுமாயின செய்யும்
நலம்தரும் சொல்லை நான்கண்டுகொண்டேன்
நாராயணா வென்றும் நாமம்''

என்றார் திருமங்கையாழ்வார்.

ராம நாமத்தைச் சொன்ன ஜடாயுவுக்கு, ஈமக்கிரியைகளைச் செய்ததோடன்றி, மோட்சத்தையும் கொடுத்தான் சக்ரவர்த்தித் திருமகன். ஆதிமூலமே என்றழைத்த கஜேந்திர ஆழ்வானை முதலையினிடமிருந்து காப்பாற்றி மோட்சத்தைக் கொடுத்தான். இதனையே

''ஆனையின் துயரம் தீரப்புள்ளூர்ந்து சென்று நின்று
ஆழிதொட்டானை'', என்றார் திருமங்கையாழ்வார்.

அஜாமினன் சாகும் தருவாயில், தன் பிள்ளையை 'நாராயணா' என்றழைக்க, மோட்சமடைந்தான். இதனையே

''நாராயணன் தன் அன்னை நரகம்புகாள்'' என்றார் பெரியாழ்வார்.

திரௌபதி தன் மானத்தைக் காக்க, ''துவாரகவாசா'' ''அச்சுதா'' ''ஆபத்பாந்தவா'' என்று கதறியபோது, ஆடை சுரந்து அவள் மானத்தைக் காத்தான். இதனையே

''திரௌபதிக்கு ஆபத்திலே புடவை சுரந்தது திருநாமமன்றே'' என்கின்றது முமுட்சுப்படி. ஹரிநாமம் சொல்லி, எங்குமுள்ளான் என்று வாதிட்டு தந்தையின் தொல்லைகளால் துயர் அடைந்த பிரகலாதனுக்காக நரசிங்கமாகத் தோன்றி இரணியனை அழித்துக் காத்தார் திருமால்:

இதனையே,

''எங்குமுளன் கண்ணன் என்ற மகனைக்
காய்ந்து இங்கு
இல்லையாவென்று இரணியன் துண்புடைப்ப
அங்கு அப்பொழுதே அவன் வீயத் தோன்றிய
சிங்கப்பிரான்''



என்றார் நம்மாழ்வார்.

இத்துணையாகத் துணையிருந்த நாமங்களின் பெருமையினைப்பல்லோர் திருவாக்கால் அறியலாம்.

''நீ நாம ரூப உலகு நித்ய ஜய
மங்கள மென்றும்''; ''கரிராஜ, பிரகலாத
விபீஷண காசின நீ நாம மேமி ருசிரா''
என்று ஸ்ரீ தியாகப் பிரம்மமும்

''கண்ணன் கழலிணை நண்ணும் மனமுடையீர் எண்ணும் திருநாமம் திண்ணம் நாரணமே'' என்று நாராயண நாமத்தின் பெருமையை நம்மாழ்வாரும்;

'வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப் போய பிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும்.'' என்று ஆண்டாளும்

முற்கலன் ''சர்வம் கிருஷ்ணார்ப்பணம் என்று சொன்னதால் எமனால் வரவேற்கப்பட்டான், கத்திரபந்து கோவிந்த நாமத்தைச் சொன்னதால் பரகதி கண்டு கொண்டான் என்று தொண்டரடிப் பொடியாழ்வாரும்,

''கடியரங்கத் தரவணையில் பள்ளி கொள்ளும் மாயோனை வாயார என்று கொலோ வாழ்த்தும் நாளே' என்றும்



''திருமாது வாழ் மார்பனை வாழ்த்தி ஆடிப்பாடி அரங்கவோ என்றழைக்கும் நாளும் நாத்தழும்பு எழ நாரணா என்றழைத்து ஆடிப் பாடி யிறைஞ்சும் நாளும் எந்நாளோ'' என்று குலசேகராழ்வாரும்

''நாமசங்கீர்த்தனத்தாலே வாசுதேவனை அடைந்து அவனையே மேலான புகலாகக் கொண்ட மனிதன் எல்லா பாபங்களிலிருந்தும் விடுபட்ட சொரூபத்தை உடையவனாய் பரம்பொருளாகிய எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனை அடைகின்றான்'' என்று கீதையில் கண்ணபிரானும் நன்கு விளக்கியுள்ளனர்.

''ராமா, நீ யெட பிரேம ரஹிதுலகு நீ நாம ருசி தெலுசுனா'' என்று ராமதாசரும்

''நாமசங்கீர்த்தனமே அனைத்து பாபங்களையும் போக்குகிறது'' என்பதை

நாமசங்கீர்த்தனம் விஷ்னோ, சர்வபாப பிரணாசநம்'' என்று ஸ்ரீமத்பாகவதமும்,

''பகவானின் எல்லா உருவங்களையும் தேடி, காண முடியாமல் அவன் திருநாமங்களைப் பற்றி வாழ்கின்றான்'' என்று மார்க்கண்டேய புராணமும்,

பகவத நாமத்தைப் பாடினால், எத்தகைய பாபிகளாயினும் முக்தி அடையலாம், என்று வைசம்பாயண சங்கிதையும்

''நாராயணன் உலகறிந்த திருடன் என்றும், அவன் நாமத்தைச் சொல்லைக்கேட்டவுடனே பலபிறவிகளில் செய்து, சேர்த்து வைத்த பாப மூட்டைகளை யெல்லாம் திருடிக் கொண்டு செல்வான்'' என்று வாமன புராணமும்,

மாதவன் பேர் சொல்லுவதே வேதத்தின் சுருக்கமான கருத்து, 'மாதவன் பேர் சொல்லுவதே ஓத்தின் சுருக்கு' என்று பொய்கையாழ்வாரும்

''உன் நாமக் கூட்டங்களை நினைத்து, பாடியே எங்களது காலம் கழிப்போம்''

என்று நாராயண பட்டரும்,

வேதங்களும், உபநிடதங்களும், அந்தணர்களும், தேவர்களும் முனிவரும் சொல்லுவது உன் நாமம் தவிர வேறில்லை. ''அந்தணர், அருமறையறிந்தோர், உபநிடதங்கள், தேவரும், முனிவரும் உம்பேரைச் சொல்லுவதல்லது பிறிதொன்றுளதோ'' என்று கம்பநாட்டாழ்வாரும்,

''உன் நாமபலம் ஒன்றே எனக்குப் போதுமானது'' என்று புரந்தர தாசரும்,

ஹரிநாமம் மிகவும் இனிமையானது, அமிர்தமானது, ஆனந்தமானது' என்று துகாராமும்,

''எவன் பகவத் நாமத்தைச்சொல்லவில்லையோ, அவன் வாயில் மண்ணைப் போடு' என்று கபீர்தாசரும்.

'பகவத் நாமத்தைச் சொல்லாதவன் நாக்கு புழுத்துப் போகும்' என்று நாமதேவரும்



''ஒருவித சிரமமும் இல்லாமல், மிகவும் சுலபமாக ஸ்ரீபகவான் நாம சங்கீர்த்தனத்தாலே எல்லா பலன்களையும் அடையலாம் என்று விஷ்ணுபுராணமும் பாகவதமும்

''பகவந் நாம சங்கீர்த்தனமே ஆன்மாக்களுக்கு உஜ்ஜீவனமாய் இருப்பது'' என்று விஷ்ணு தர்மத்திலே செளநகரும்

''பகவந் நாமங்களை நாவினால் உரைத்தால் இம்மைக்கும் மறுமைக்கும் உறுதி பயக்கும்'' என்று, சங்கத்தமிழ் நூல்களும் கூறுகின்றன.

எம்பெருமான் திருநாமத்தை எப்பொழுதும் ஊக்கத்துடன் துதி செய்பவன் அனைத்து துன்பங்களிலிருந்தும், பயங்களிலிருந்தும் விடுபடுகிறான் என்றும் ''அவன் நாமம் சொல்வதே அனைத்து தர்மங்களிலும் சிறந்தது'' என்று, பீஷ்மாசார்யும் கூறியுள்ளார்.

மற்றும் ஆத்மசுகம், பொறுமை, ஞானம் (உண்மைப் பொருள்) வெற்றி, செல்வம், இன்பம், பிள்ளைப்பேறு, புகழ், தலைமை, பதவி, நோயற்ற வாழ்வு, நற்குணங்கள் போன்ற பலவற்றை அடைவதோடு ஜனனம், மரணம், மூப்பு, நோய், கோபம், தீய எண்ணம் தீய குணம் பேராசை போன்றவைகளிலிருந்து விடுபடவும் முடியும்.

இதுவரை கூறிய கண்ணபிரான் திருவாக்காலும் வேதவாக்கியங்களாலும், ஆழ்வார்கள் அருளிச் செயலாலும், மகான்களின் வாக்கினாலும், பக்தர்களின் மௌன மொழியாலும் வாழ்க்கை வரலாறுகளாலும் திருநாமத்தின் உண்மைப் பெருமையைக் கண்டோம். கலியுகத்தில் நாம சங்கீர்த்தனமே ஸ்ரீமந் நாராயணன் திருவருளைப் பெறவும், அவனது திருநாட்டை அடையவும், தீமைகளை ஒழித்து நன்மைகளைப் பெறவும் ஒரே சிறந்த வழியாகும்.

எனவே நாம் அனைவரும்

''துஞ்சும்போது அழைமின் துயர்வரில் நினைமின் துயரிலீர் சொல்லினும் நன்றாம்'' என்னும் திருமங்கையாழ்வார் அருளிச் செயலுக்கு இணங்க ஸ்ரீமந்நாராயணன் பெயரைச் ஆடிப்பாடி அகம் குழைந்து பாடிப் பாடி பரவசம் அடைந்து, நாடி நாடி திரு நாடு அடைவோமாக''.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

நித்ய ஸ்ரீ நித்ய மங்களம்.

வாழி எம் முருகா வாழி

டாக்டர் கவிஞர் முருகுவண்ணன்

முத்தமிழால் வாழ்த்தி முருகாநின் சீர்பரவ
முத்தமிழாய் என்னுள் முகிழ்.

உடன்பிறப் பெடுத்து வந்த
என்உடன் பிறப்பே! தாய்-நுண்
உடலினில் தந்தை நோன்பால்
உடுமலர்க் கோள்-மெய் தந்தென்
உடலினில் உயிராய் மேவி
உள்ளுறை உயிர்ப்பே! என்னோ(டு)
உடன்படும் அனைத்தே! 'என்னுள்
ஒன்(று) என உணர்த்தும் ஒன்றே!

ஒன்றுள்ஒன் றோங்கும் ஆன்ம
உறவுகொள் ஒருமைப் பாடே!
அன்பொளிர் அருளே! எல்லாம்
அறியும்மெய் அறிவே! பண்பே!
நன்னெறி உயிர்க்கே ஈகை
நல்கும் ஊதியமே உன்னை
என்சொலி வாழ்த்து வேனே
இனிக்குமுக் கனிபூந் தேனே! 2

எத்துணை விளக்கம் தந்தும்
விளக்கிடற் கரிதே என்னும்
முத்தமிழ் மூப்பே யாப்பே!
முதல்-முடி வில்லா ஒன்றின்
மொத்தமே! புதுமை யாவும்
முகிழ்த்திட பழுத்த வித்தே!
சத்துசித் தின்ப வாழ்வே!
தமிழ்நெறி காட்டும் ஒன்றே!

ஊழிபல் லூழி முன்னம்
எனைப்படைத் தளித்த ஒன்றே!
ஊழிபல் லூழி இம்மண்
வாழ்விலும் உறும்என் வாழ்வே!
வாழிஎன் பிறப்ப றுக்கும்
மன்னுயிர்த் தொண்டே! என்றும்
வாழிநீ! எனைப்போன் றாரும்
வாழ்ந்தினி துய்ய வாழி! 4

மண், மலை, கடல், கான், காற்று
மழை, மதி, கதிர் மீன், வானம்
எண்ணறு விலங்கு புட்கள்
மன்னுயிர் எல்லாம் வாழி!
அண்முதல் அண்டம் ஈறாய்
ஆம் 'பரம்-பரையே வாழி!
தண்ணளித் தாய்-சேய்-தந்தை
தமர்குலம் தழைத்தே வாழி! 5

ஊழென ஊழி தோறும்
வந்தெனுள் மிகுந்து, 'பாடி
வாழி 'என் றிசைத்து, நாற்பா
மரபியல் கவிதை தந்த
ஊழிவெல் தமிழை, வாழ்த்தும்
ஒருபெரும் பேற்றால், 'அன்பே
வாழிநீ, முருகா வாழி!'
எனப்பாடி வாழ்த்து கின்றேன்! 6

என்இரு வினைக்கும் ஆதி
அந்தமே! வாழி! வாழி!
'என்னையும் தடுத்தாட் கொண்ட
கடவுளே! ஐ-ஐ வாழி!''
என்றுனை வாழ்த்த லன்றி
வேறென்ன தொண்டு செய்வேன்!
மன்னும்இப் பிறப்பி லேனும்
உனைவாழ்த்தும் பேறீந் தாயே! 7

நண்பர்மெய் அன்பர் வாழி!
நன்றெணி நலமே வாழி!
தொண்டுசெய் எலாரும் வாழி!
தூயதமிழ்த் தொண்டர் வாழி!
எண்ணறும் உயிர்த்தொ கை, மற்
றேனைய யாவும் வாழி!
எண்-உரை-செயல்க டந்த
என்னுயிர்-மெய்ம்மை வாழி! 8

மரபியல் கவிதை வாழி!
மானிடம் தெய்வம் ஆக,
திருநிறை குறள்நூல் வாழி!
திருப்புகழ் அருட்பா வாழி!
'திருமறை' என்ப வெல்லாம்
திசையெட்டும் பரவி வாழி!
உரு-அரு-திருவாய் என்னுள்
ஓங்குநீ ஒன்றே வாழி! 9

எண்குணக் குன்று தோறும்
ஆடி இவ் வுலகே போற்றத்
தண்மலர்ப் பொழில்சூழ் ஞானத்
தணிகைமா மலைமேல் கோயில்
கொண்டனை முருகா! என்போல்
பாவியர் கூட்டம் நின்தாள்
அண்டியே வரச்செய்(து) ஆட்கொண்
டருள்செயக் கண்டேன் வாழி! 10

வாழியிப் பத்தும் பாடி
பரவிடும் அடியர் வாழி!
'வாழிநீ' என்றே என்னை
வாழ்த்திஆட் கொள்ளா யேனும்
''வாழி! எம முருகா''! என்பார்
வாழ்வாங்கு வாழ்ந்தே உய்ய,
வாழிஎன் முருகா வாழி!
வந்தருள் முருகா வாழி, 11

நடனானந்தம் பாடிய நல்லோர்

'கம்பன் கவிநயமணி' வே. தியாகராஜன்

தொட்டிக்கலை சுப்ரமணிய முனிவர் என்ற பெரியாரை மதுரகவி என அழைப்பர். இறைவன் ஆடும் காட்சியினை 'ஆட ஆட' என்ற சொல்லை வைத்து திருக்குற்றாலத்தில் இறைவன் சித்திரசபையில் ஆடும் காட்சியைத் தரும் கவிச்சித்திரத்தைக் கேட்டுப் படித்துக் களியுங்கள்.

''ஆயிரமுகக் கங்கை அலை எறிந்தாட: மலர்
ஆடகக் கொன்றை ஆட:
அரவாட: வால் வெண்பிறையாட:
வெண்டலைகள்
ஆட: வெள்ளருகும் ஆட:
ஞாயிறுதயம் பொரு சடாமகுடமாட; வளர்
நகைமுகக் கருணையாட;
நாககுண்டலமாட: அதளாட: ஒருகையில்
நாதவெண் துடியுமாட:
மேய ஒரு கையில்எரியாட; அமைந்தொருகை
வீசியொருகையாட; ஓர்
வீவொண் கழலாட உயிர்வர்க்கம் ஆனந்த
வெள்ளத்திளைத்தாடவே;
சேயிழ்ச் சீரடி சிவகாமி அம்மை இரு
திரு நயன வண்டுமாடச்
சித்திர சபைதன்னில் திருச்சிலம்பு ஒலி தர
திருநடம்புரிவ ரதனே.''

திருக்குற்றாலத்தில் உள்ளது சித்திரசபை. இறைவன் பெயர் குற்றாலநாதர். அம்மை பெயர் குழல்வாய் மொழியம்மை. இப்பெருமானுக்குச் செய்யும் தீபாராதனையே தாண்டவ தீபாராதனை எனப்படும். இது வாழ்க்கையில் மனிதர் கண்டுகளிக்க வேண்டிய ஒரு முக்கியமான காட்சி.

திருக்குற்றாலத்திற்குத் தலபுராணம் பாடிய பெரியார் மேலசுரம் திரிகூடராசப்பக் கவிராயர். குற்றாலநாதர் ஒருநாள் இவரெதிரில் ஒரு முனிவரின் வேடத்தில் வந்து நாக்கை நீட்டுமாறு கூறி இவர் நாக்கில் பஞ்சாட்சரத்தை எழுதி மறைந்தனர். இவர் அழகான கவிதைகளைப் பாட, இவரது அருமையை அறியாத சிலர் இவருக்குப் பித்த நோய் எனப் புரளி செய்து காலில் விலங்கு பூட்டிச் சிறையிட்டனர். ''நீ தெய்வ அருள் பெற்றது உண்மையானால் விலங்கு தறிக்கப்பாடு'' என்றனர். கவிராயர் அவ்வாறே பாட கால் விலங்கு அறுந்து விலகியது. குற்றாலநாதர், சின்னணைஞ்சாத்தேவர் என்ற குறுநில மன்னரின் கனவில் தோன்றி இவரைக் காக்குமாறு கட்டளையிட, அவர் நம் கவிராயரை விடுதலை செய்து வேண்டிய உதவிகள் செய்து ஆதரித்தனர் என்பது வரலாறு. இவர் மனிதரை ஒரு சமயம் பாடியதால் முடக்குவாதம் உண்டாகிப் பின் அந்நோய் நீங்கப் பெற்றனர் என்பர்.

''ஒரு கரந்தன்னில் படர்கனல் சுடர்விட;
ஒரு கரம் துடியார்ப்ப;
இரு கரங்களில் வரதமும் அபயமும்
எவ்வுலகமும் காப்ப;
அருள் பரந்தெழு திருவுளக் கருணையார்
அகிலமும் குளிர்தூங்கச்
செருகு கொன்றையங் கண்ணிதேனுழற்றிடச்
செழுமதி நிலவூற்ற
மங்கையாமளை இருவிழிகளிப்புற ஒரு
பதமலர் தூக்கிக்
கங்கைவாய்விட ஒரு பதம் குறளன் மேல்
கதிகொடு சதிதாக்கி
பங்கயாசனன் துதிசெய நெடிய மாலுக்கு
அதிசயம் பரந்தேறச்
சங்கையேந்திய குழைநிலாப் புயவரைத்தடந்
தொறும் தவழ்ந்தேற''

'சங்கையேந்திய குழைநிலாப்புயவரைத் தடந் தொறும் தவழ்ந்தேற' என்பது இவர் சித்திரசபையில் காட்டும் நடராஜமூர்த்தியின் திருநடனக் காட்சியின் கவிதை.

நடராஜ மூர்த்தியிடம் ஈடுபடாத புலவரே கிடையாது எண்ணலாம். நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்திலே.

''திருநிலைச் சேவடிச் சிலம்புவாய் புலம்பவும்
பரிதரு செங்கையிற் படுபறை ஆர்ப்பவும்
செங்கண் ஆயிரம் திருக்குறிப் பருளவும்
செஞ்சடை சென்று திசை முகம் அலம்பவும்
பாடகம்பதையாது சூடகம் துளங்காது
மேகலை ஒலியாது மென்முலை அசையாது
வார்குழை ஆடாது மணிக்குழல் அவிழாது
உமையவள் ஒரு திறனாக ஓங்கிய
இமையவன் ஆடிய'' (நடுநற்காதை—சிலம்பு)
அழகினை இளங்கோவடிகள் கூறினார்.

பஞ்சகாரியங்களான படைத்தல், காத்தல் அழித்தல், மறைத்தல், அருளல் ஆகியவற்றைச்

செய்யும் நடராஜப் பெருமானின் திருவடியே நகரமாகவும், திருஉந்தி மகரமாகவும், திருத் தோள் சிகரமாகவும், திருமுகம் வகரமாகவும், திருமுடி யகரமாகவும், ஐந்தெழுத்து மந்திர நிலையில் நடனம் புரிகிறார் என்ற நிலையை, உண்மை விளக்கம் என்ற நூல் கூறுகிறது.

இரட்டைப் புலவர்கள் இலந்துறைஎன்ற ஊரினர். உறவின் முறையால் மாமன் மகனும் அத்தை மகனுமாவர். ஒருவர் கண்ணொளி யற்றவர். மற்றவர் காலில்லாதவர். கண்ணில் லாதவரின் தோளில் காலில்லாதவர் ஏறிக் கொள்ள ஊர் ஊராகச் சென்றனர். சிவபக்தி நிறைந்த இவர்கள் தில்லை நாயகனான நட ராஜப் பெருமானையும், தில்லைத் தலத்தைப் பற்றியும் ஒரு கலம்பகம் பாடினர். நடராஜப் பெருமான் மீது ஈடுபாடு கொண்ட இவர்கள்,

''தில்லை மூவாயிரவர் பூசைபுரி பாதம்
தேவருடனே இருவர் தேடரியபாதம்
வல்ல மாகாளியொடு வாது புரிபாதம்
மாமுனிவற்காய் யமனை மார்பிலுதை
பாதம்
சொல்லவே பரவையிடம் தூது சென்றபாதம்
தொல்புலி பதஞ்சலியும் தொண்டு செயும்
பாதம்
அல்லலாம் ஏழ்பிறவி தீரநடமாடும்
ஆதிபுலியூரர் திரு அம்பலவர் பாதம்''

என இறைவனின் திருவடியின் பெருமைபாடி னர். எம் பெருமானே! கயிலை மலையான கல்லில் வாழும் நீ என் நெஞ்சான கல்லிலும் வாழலாமே'' என நயம்படக் கேட்கிறார்.

''புலியூர் உறையும் புனிதா! புகுவெண்
புலியூர் தொறுமிரக்கும் பண்பா-பொலிகயிலை
கல்லிருக்கக் கடனானால் என் நெஞ்சக்
கல்லிருக்கக் கடன்''

மண் (பிருதிவி), தண்ணீர் (அப்பு), நெருப்பு (தேயு) காற்று (வாயு), ஆகாயம் ஆகிய பஞ்ச பூதஸ்தலங்களையும், சித்திரசபை, ரத்னசபை, தாம்பிரசபை, வெள்ளிசபை, செம்பொற்சபை ஆகிய ஐந்து நடனத் தலங்கள் எவை எவை என்பதை ஒரேபாட்டில் அழகுபடக் கூறுவதைப் பாருங்கள்.

''கடல்விடம் நுகர்ந்த காசினி இலிங்கம்
காஞ்சி மாநகர் உறை இலிங்கம்
காவிரி வடபால் வரு திருவானைக்
காவினில் அப்புலிங்கமதாம்
வடதிசை அண்ணாமலையினில் லிங்கம்
வன்னியின் வடிவு; காளத்தி
வாயுலிங்கமதாம், சிதம்பர லிங்கம்
மாசில் ஆகாய லிங்கமதாம்;
குடதிசை அதனின் மருவுகுற்றாலம்
கோதறு சித்திர சபையாம்;



குற்றமில் குணக்கில் பழையனூர் மன்றம்
குலரத்ன மன்று என்பார்
அடல் விடைப்பாகன் நெல்லையம்பதியில்
அம்பலம்தாம்பிர சபையாம்
ஆலவாய் மதுரை வெள்ளியம்பலமாம்
அணிதில்லை செம்பொன் அம்பலமே''

சென்ற நூற்றாண்டில் நடமாடும் புத்தக சாலையாக விளங்கி, தமிழ்த்தாத்தா டாக்டர் உ. வே. சுவாமிநாதய்யரவர்களின் வித்யா குருவாக விளங்கிய மகாவித்வான் திரிசிரிபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் நடராஜ மூர்த்தி மீது ஆழ்ந்தபக்தியுடையவர். இறை யவனே! உமது அழகிய நடனத்தைக் காணாது பெண்கள் ஆடும் நாட்டியத்தைக் கண்டு மயங்குகிறேனே என்று அவர் பாடும் பாடல் பின் வருமாறு ;

''வரியார் முலையார் புரிநடம் நோக்கி
மகிழும் அதொழிந்து மால் அயற்கும்
அரிய நின் நடனம் அன்பூற்றெழ நோக்கி
ஆனந்தம் அடையும் நாள் என்றோ''

பிள்ளையவர்களின் மாணவரான ஸ்ரீ தியாக ராஜ செட்டியாரும் திருச்சிற்றம்பல வெண்பா அந்தாதிஎன ஒரு நூல் பாடியுள்ளார்.

''சீர்பூத்த அம்பலத்தில் தேவிமலர்க்
கண்களிக்க
நார்பூத்த இன்ப நடநவிலும்-கார்பூத்த
கண்டன்மறைச் சிலம்புகாட்டு மலர்ப்பாதம்
உண்டுதுணை நாயேன் உயிர்க்கு'

என்று முதல் பாட்டிலேயே நடனக் காட்சியைச் சித்தரிக்கிறார்.

திருவாலங்காட்டில் இறைவன் நடனமாடிய போது காதுக்குழை நிலத்தில் விழுந்ததாம். இறைவன் தந்திரமாக ஆடி மெல்லத் தன் காலால் எடுத்துக் காதில் அணிந்து கொண்டார். தேவர்களும் அடியார்களும் திருவள்ளுவரிடம் இதுபற்றிக் கேட்டபோது, 'பிரம்மனும் திருமாலும் தேவேந்திரனும் இருக்க இந்த ஏழை நெசவாளிக்கு இறைவன் திருக்கூத்தைப் பற்றி என்ன தெரியும்!'' என வள்ளுவர் கேட்டார்.

''பூவில் அயனும் புரந்தரனும் பூவுலகைத்
தாவி அளந்தோனும் தாமிருக்க—நாவில்
இழைநக்கி நூல்நெருடும் ஏழை அறிவேனோ
குழைநக்கும் பிஞ்ஞகன்தன் கூத்து''

என தனிப்பாடல் திரட்டில் வரும் திருவள்ளுவர் வரலாறு தெரிவிக்கிறது.

ஸ்ரீகவியோகி சுத்தானந்தபாரதியார் நடராஜ மூர்த்தியிடம் மிக ஈடுபாடு உடையவர். சுமார் ஆயிரம் நூல்கள் பல துறைகளில் எழுதிவர். தமது பாரத சக்தி மகா காவியத்தில் உலகோர் எப்படி வாழவேண்டும் என்பதை ஞான நடராஜ மூர்த்தியிடம் வேண்டுகோளாக விடுக்கிறார்.

''எளியவர்கள் வயிறார உண்ணவேண்டும்
செல்வர்
இறுமாப்பு நீங்க வேண்டும்
இடரான ஜாதிமத பேதவினையறல் வேண்டும்
எல்லாரும் ஒருகுலம் போல்
வலியவர்கள் கொடுமையற வாழவேண்டும்
பொய்
வழக்கினை ஒழிக்க வேண்டும்
வறுமையிருள் அடிமையெனும் வார்த்தையே
இல்லாது
வையஞ் செழிக்கவேண்டும்
மெலியவரு பிணிதுயர் பொறாமை வஞ்சத்
தீமை
வேரோடு மாயவேண்டும்
வீரமிகு கனல்வேண்டும் விடுதலைத்திறன்
வேண்டும்
வினைவேள்வி வெல்ல வேண்டும்
நலியவரு அசுரபலம் அழியவேண்டும் இந்த
நாட்டில் விண்ணரசுவேண்டும்
நானிலமெலாம் பரவி நானென்னுளத்திலே
ஞான நடமாடும் அரசே"

—தியானசித்திப்படலம்

தன்னை நினைத்தவர் மனத்தைக் கோயிலாகக் கொண்டு அடியாருக்கு அருளும் அற்புத மூர்த்தியான ஆனந்தத் தெய்வமான நடராஜப் பெருமான் நம் அனைவரையும் காத்தருள அப்பெருமானின் குஞ்சித பாதத்தை வணங்கி வாழ்வோமாக.

''வாழ்த்துமின் தில்லை, நினைமின்
மணிமன்றம்
தாழ்த்துமின் சென்னி தலைவற்கு-வீழ்த்த
புறநெறி ஆற்றாது அறநெறி போற்றி
நெறி நின்றொழுகுதிர் மன்ற
துறையறி மாந்தர்க்குச் சூழ்கடனிதுவே''

சிவகாமவல்லி சமேத ஆனந்தநடராஜன் துணை.



அருள்மிகு திருவிலஞ்சிக் குமாரர் திருக்கோயில்

பைம்பொழில் கே. பாலசுப்ரமணியன்

இருப்பிடம்

நெல்லை கட்டபொம்மன் மாவட்டம், தென்காசி வட்டத்தில், தென்காசி ரயில் நிலையத்திலிருந்து மேற்கே சுமார் 4 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது இலஞ்சி என்ற சிற்றூர். இவ்வூர் ஏரியை நாலாபக்கங்களிலும் கொண்டு அழகுடன் மிளிர்வது. மா, பலா, வாழை, கமுகு, தென்னை முதலிய மரங்கள் செறிந்த சோலைகளால் சூழப்பெற்றது. எம்மருங்கும் செந்நெற்பயிர் செழித்து வளர்ந்துள்ளது.

திருக்குற்றாலத்திற்கும், இலஞ்சிக்கும் இடையில், ''குத்திரம் வெண்குட்டமுடன் கோடி வினையறுக்கும்' சித்திர மாநதியும், ஐந்து தலையருவியாறும் கலக்குமிடத்தில் கிழக்கே சோலையும், வயலும் சூழ்ந்த இடத்தில் இக்குமாரர் கோயில் அமைந்துள்ளது.

ஆலய அமைப்பு

பிரதான வாயில் கிழக்குநோக்கி உள்ளது. மேல்பக்கம் நதியில் நீராடி வருவதற்கு ஒரு வாயிலும் உள்ளது. கீழ்வாயிலின் உட்புறம் தென்பால் ஒரு சவுக்கை உள்ளது. அதன் பக்கத்தில் ஸ்தல விருட்சமான மகிழ மரம் உள்ளது. இம்மரத்திற்கு இலஞ்சி என்று பெயர் உண்டு. எனவே, இவ்வூர் இலஞ்சி என்று வழங்கப்படுகிறது என்பர். கன்னிமூலையில் செண்பகவிநாயகர் கம்பீரமாய் வீற்றிருக்கிறார். கீழ் வாயிலின் வடபுறம் ஓர் கொட்டகை இருக்கின்றது. சுமார் 400 பேர் ஒரே நேரத்தில் உணவு கொள்வதற்கு ஏற்ற வசதியுடையது. நல்ல கிணறும் இக்கொட்டகைக்குள் உள்ளது. இக்கிணற்றிலிருந்து குழாய்கள் கோயிலுள் பல இடங்களுக்கு இணைக்கப்பட்டிருக்கின்றன. இடவசதியையும், தலப்பெருமையையும் கருதி ஏராளமான திருமணங்கள் இத்தலத்தில் நடைபெறுகின்றன.

கோயில் உள்வாயில் முகப்பில் இரு நிலையிலும், விநாயகர், சுப்பிரமணியர் வீற்றிருக்கின்றனர். கீழப் பிரகாரத்தின் தென்பால் சூரியனும், தெற்குப் பிரகாரத்தில் தெட்சிணாமூர்த்தி, அறுபத்துமூவர், சப்தமாதர்கள், கரதேவர் முதலியோர்களும், மேலப் பிரகாரத்தில் கன்னி விநாயகர், வள்ளி தெய்வயானையுடன் உற்சவ முருகன், வேணுகோபாலர், காசி விஸ்வநாதர், விசாலாட்சி, திருக்குற்றாலநாதர், குழல்வாய் மொழியம்மை, அகத்தியர், ஐயனார், ஆறுமுக நயினார் முதலியவர்களும், வடக்குப் பிரகாரத்தில் சனீஸ்வரர், சண்டிகேஸ்வரர், வைரவர் முதலியோர்களும் வீற்றிருக்கின்றனர். வடக்குப் பிரகாரத்தின் கீழ் கோயில் படியில் இறங்கி நீர் முகப்பதற்கேற்ற கிணறு ஒன்று இருக்கிறது. இக்கிணற்று நீரே சுவாமி அபிஷேகத்திற்கும், மடப் பள்ளக்கும் உதவுகிறது.

இக்கோவிலினுள் தெனபால் குமரப் பெருமான் வள்ளி தெய்வயானையம்மையாரோடு எழுந்தருளி உள்ளார். வடபால் அகத்திய முனிவர் ஸ்தாபித்த இருவாலுக நாயகர், இறைவி இருவாலுக ஈசர்க்கினியாளுடன் வீற்றிருக்கிறார். இறைவன் கிழக்கு முகமாயும், இறைவி இடதுபக்கம் தெற்கு முகமாயும் எழுந்தருளி உள்ளனர். உற்சவ மூர்த்தி இருவாலுக நாயகர் மூலவருக்கு வலப்பக்கமிருக்கிறார். சிவபெருமானுக்கும், முருகப் பெருமானுக்கும் எதிரே தனித்தனி கொடி மரங்கள் உள்ளன.

கோயில் தோன்றிய வரலாறு

மிகப் பழங்காலத்திலே பிரம்ம புத்திரராகிய காசிப முனிவர், திருமாலின் அம்சமாகிய கபில முனிவர், சீகண்ட பரமசிவத்தினிடமிருந்து தோன்றிய துருவாச முனிவர் ஆகிய மூவரும், திரிகூடாசல மலையில் வடகீழ்த் திசையாக இத்தலம் இருக்கும் இடத்தில் சந்தித்து பல தத்துவப்பொருட்களைஆராய்ச்சி செய்ய ஆரம்பித்தனர்.

அப்போது இவ்வுலகம் உள் பொருளா, இல்பொருளா என்னும் வினா எழுந்தது. மூவரும் உலகம் உள்பொருளே என்னும் முடிவுக்கு வந்தனர். பின்னர் அம்முனிவர்கள் மூவரும் நிமித்த காரணக் கடவுள் யாவன் என்று ஆராயத் தொடங்கினர்.

காசிபர் தம் தந்தையாகிய பிரமன் என்றார். கபிலர் திருமால் எனறார். துருவாசர் உருத்திரனே காரணக் கடவுள் என்றார். இவ்வாறு மூவரும் வாதிட்டுக் கலங்கினர். அப்போது துருவாச முனிவர் உண்மை விளங்க வேண்டுமென்று முருகக் கடவளைத் தோத்தரித்தார்.

அப்போது முருகக் கடவுள் பொன் போன்ற திருமேனியும், ஒரு திருமுகமும், வலக் கரங்கள் இரண்டிலும் வரதம், வேல் பொருந்தவும், இடக்கரங்கள் இரண்டிலும் அபயம், குக்குடம் பொருந்தவும் வெளிப்பட்டருளினார். முனிவர்கள் மூவரும் குமரனை வணங்கிப் பல துதிகள் பாடி தங்கள் ஐயத்தை ஒழித்தருள வேண்டினர். முருகப் பெருமான் கருணை கூர்ந்து 'மகா சங்கார காரணனாகிய கருத்தா யாமே. யாமே விதியாக நின்று படைப்போம். அரியாக நின்று காப்போம். மற்றையோராக நின்று அழிப்போம். ஆகையால், மும்மூர்த்தியாக விளங்குவது நாமே. அவ்வுண்மையைத் தெளியக் கடவீர்'' என்று, மும்மூர்த்திகளும் ஒரு வடிவத்திற் பொருந்துமாறு தோன்றி, ''முனிவர்களே! இவ்வுண்மையை, மூவிலைகளையும், ஒரு தாளையும் உடைய சூலாயுதத்தாலும், வேற்படைக்கலத்தாலும் அறிந்து கொள்ளுங்கள். வேல் ஞான சக்தி. வள்ளி இச்சா சக்தி, தெய்வயானை கிரியாசக்தி, யாமே, மும்மூர்த்தியாகி மூவினையும் செய்வோம்'' என்று தெரிவித்து அருளினார். முனிவர்கள் தங்கள் ஐயந்திரப் பெற்று, முருகன் அடி பணிந்து, 'தேவரீர்! இவ்விடத்திலேயே எழுந்தருளியிருந்து, வழிபடுவோர் யாவருக்கும் ஞானம் அருளி விரும்பும் வரத்தைக் கொடுத்தருளல் வேண்டும்'' என்று இறைஞ்ச, குமரக் கடவுள் அதற்கிணங்கி, இத்தலத்தில் எழுந்தருளினார். கட்டிளமைக் கோலத்தில் முருகன் முனிவர்களுக்குக் காட்சி கொடுத்ததால் இத்தலத்திற்கு 'குமாரர் கோயில்'என்றும், முருகப் பெருமானுக்கு 'குமாரர்' என்றும் திருநாமம் ஏற்பட்டது.

இருவாலுகநாயகர் வரலாறு

கயிலைமலையில் சிவபெருமான் திருமணத்தின்போது, வடதிசை தாழ்ந்து, தென் திசை உயரவே, அதைச் சமப்படுத்த அகத்திய முனிவரை சிவபெருமான் பொதிகை மலைக்கு அனுப்பியதாக வரலாறு உண்டு. அவ்வாறு வந்த அகத்தியர், இத்தலத்தை ஒட்டிய சிற்றாற்றின் கரையில் மணலை லிங்கமாகக் குவித்து சிவபூசைசெய்தார். அவ்வாறு பூசித்த மணல்லிங்கத்தைத் தன் யோக சக்தியால் நிறுத்தி வைத்துச் சிவாலயமாக்கிச் சென்றார்.

இது பெருமை பொருந்திய, சித்தர் அகத்தியரால் ஸ்தாபிக்கப் பெற்ற வாலுகம்: வெண்மணல்.

ஆகவே, இம்மூர்த்திக்கு இருவாலுக நாயகர் என்று பெயர் ஏற்பட்டது. இந்த லிங்கம் குவளை பொருந்தி, மருந்து சாத்தப் பட்டே விளங்குகிறது. இவருக்கு எண்ணெய் அபிஷேகம் கிடையாது.

வழிபட்டோர்

இத்தலத்திற்கு பிரம்மன், இந்திரன் வந்து வழிபட்டதாகக் கூறுவர்.

இலக்கியங்கள்

இத்தலத்திற்கு அருணகிரி நாதர் எழுந்தருளி நான்கு திருப்புகழ் பாடிப் பெருமை செய்துள்ளார். செங்கோட்டையைச் சேர்ந்த கவிராஜ பண்டாரத்தையா பாடிய'திருவிலஞ்சி குமாரர் பிள்ளைத் தமிழ்' சிறப்பு வாய்ந்ததாகும். திருகூட ராசப்பக் கவிராயரின் மகன் இம்முருகனைப் புகழ்ந்து 'திருவிலஞ்சி முருகன் உலா' என்ற நூலைப் பாடியுள்ளார்.

இலஞ்சிப் புதுவீடு ஐ. எஸ். சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் 'திருவிலஞ்சிச் செவ்வேள் கலிப்பா மாலை' என்ற நூலினை இயற்றியுள்ளார். இந்நூலில் பல வெண்பா, கலிப்பா, ஆசிரியப்பா போன்ற பலவகைப் பாக்கள் அடங்கி உள்ளன.

பூஜை விழாக்கள்

இத்திருக்கோவிலில் தினமும் திருவனந்தல், விளாபூசை, கால சந்தி, உச்சிக்காலம், சாயரட்சை, அர்த்த ஜாமம் என்று ஆறுகாலம் பூசைகள் நடைபெறுகின்றன.

சித்திரை மாதம் பிரம்மோற்சவம் பத்து தினங்கள் சிறப்பாக நடைபெறும். சித்திரை நட்சத்திரத்தன்று தீர்த்தவாரியுடன் இவ்விழா நிறைவு பெறும். ஐப்பசி மாதம் கந்தசஷ்டி விழா வெகு விமரிசையாக நடைபெறும்.

நிர்வாகம்

இத்திருக்கோயில் தமிழக இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையால் நிர்வகிக்கப்படுகிறது. அரசாங்கத்தால் நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப் பெற்றுள்ளார். இவ்வாலயம் எப்பொழுது கட்டப் பெற்றது என்று அறிய முடியவில்லை. ஆனால் 1911-ல் கிடைத்த கல்வெட்டு ஒன்றின் மூலம் கி. பி. 1409-ல் மாறவர்மன் குலசேகர பாண்டியனால், இக்கோயில் பழுதுபார்த்து விசாலமாகக் கட்டப் பெற்றதாக அறிகின்றோம்.

நிறைவுரை

தீர்த்தம் : சித்திரா நதி
ஸ்தலவிருட்சம்: மகிழமரம்.

'மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த்
தொடங்கினர்க்கு ஓர்
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும்
பராபரமே''

என்று தாயுமானவர் பாடியது போன்று இத்திருத்தலத்திற்கு ஒருமுறை சென்று வணங்கிப் பேறுபல பெறலாம்.

அரங்கனின் திருவுருவ நலன்

ஆ. சுப்பிரமணியன், புத்தூர்

முன்னுரை

இறைவனின் திருப்பெயர்களுக்குப் பெரியோர்கள் பலரும் பலவிதமான பொருள்களைத் தோற்றுவிப்பார்கள். அதிலும் குறிப்பாக நாராயணன் என்ற பதத்திற்கு ஆன்மீகச் சான்றோர்கள் அரும்பெரும் உரைகளைப் பணித்துள்ளார்கள். நாராயணபதத்தில் அடங்கியுள்ள குணங்கள் வாத்சல்யம், சுவாமித்வம், சௌசீல்யம், சௌலப்பயம், ஞானம், சக்தி என்று பிள்ளை லோகாசாரியார் தாம் அருளிச் செய்துள்ள முமுட்சுப்படி எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்சள். இத்தகைய சீரிய குணங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளதை எண்ணி ''நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன் நாராயணா எனும் நாமம்'' என்று இறுமாந்து பேசுகிறார் குலசேகர ஆழ்வார்.

ஆறு குணங்கள்

1. வாத்சல்யம்: அன்றீன்ற பசு தன் கன்றின் உடலிலுள்ள அழுக்கு எனும் வழும்பினை நாவால் நக்கி உண்டு புனிதப்படுத்துவது போல, இறைவன் தன்னடியார்களின் குற்றங்களைப் பொறுத்து அழிக்கிறான். ''என்னடியார் அது செய்யார் செய்வாரேல் நன்றே செய்வார்'' என்று மகிழ்ந்து பேசுவான். மேலும் கன்றைத் தாக்க வரும் விரோதிகளைப் பசு தனது கொம்புகளால் தாக்கிக் கன்றைப் பாதுகாப்பது போலவும், கன்றுக்குத் தனது பாலை வழங்கி வளர்ப்பது போலவும், பெருமான் அடியார்களைப் பாதுகாத்து அருள்பாலிக்கிறான். அந்த அருளாகிய கருணையே வாத்சல்யம் எனப்படும்.

2. சுவாமித்வம்: உடைமைகளுக்கு உடையவனாக உள்ள தகுதி சுவாமித்வம் எனப்படும். ஜீவாத்மாக்கள் பரமாத்மாவைப் புறக்கணித்து விலகினாலும் அவற்றைத் தன்பால் ஈர்த்து அவற்றைக் கைவிட மனமில்லாமல் ஆட்கொள்ளும் உறவுநிலை சுவாமித்வம் எனப்படும்.

3. சௌசீல்யம்: இறைவனாகிய பரமாத்மா உயிர்களாகிய ஜீவாத்மா எவ்வளவு தாழ்ந்த நிலையிலிருந்தாலும் அந்தத்தாழ்ந்த நிலைக்குத் தன்னைத் தாழ்த்திவேறுபாடின்றிக் கலந்து பழகி உறவாடித் தண்ணளி புரியும் பண்பு சௌசீல்யம் எனப்படும். பூனை தனது குட்டியை வாயால் கவ்வி எடுத்துச் செல்லுவது போல என்றும் சொல்லலாம். இதை மார்ச்சல நியாயம் என்றும் சொல்லுவார்கள்.

4. சௌலப்யம்: உயர்நிலையில் உள்ள இறைவன் ஜீவாத்மாக்களுக்குத் தனது எளிவந்த தன்மையால் தனது உருவைக் காட்டித் தன்னைப் பற்றிக் கொள்ளச் செய்து ஆட்கொள்ளும்நிலை சௌலப்யம் எனப்படும். குரங்குக் குட்டி தாய்க் குரங்கின் வயிற்றை இறுகப் பிடித்துக் கொள்வது போல என்றும் சொல்லலாம். இதனை மர்க்கட நியாயம் எனக் கூறுவர்.

5. ஞானம்: கீழ்நிலையில் உள்ள ஆன்மாக்களை மேல் நிலைக்குக் கொண்டு வந்து அவற்றைக் காத்தற்குரிய வழிகளை அறியும் தன்மை ஞானம் எனப்படும்.

6. சக்தி: ஆன்மாக்களின் குற்றம் குறைகளை நீக்கி அவற்றிற்கு நலம் தர ஆண்டவன் அளிக்கும் பேராற்றல் சக்தி எனப்படும்.

எனவே நலம் தரும் சொல்லாகிய நாராயணபதத்தில் இந்த ஆறு பண்புகளும் அடங்கியுள்ளன.

உருவநலம்

இந்த ஆறு உருவப் பண்புகளும் திரு அரங்கநாதனின் உருவ அமைப்பில் தெற்றென திகழ்கின்றன என்பது பெரியோர்களின் கூற்று. இறைவனின் திருக்கைகளில் தாங்கியுள்ள திருவாழி, திருச்சங்கு என்பன ஞானம், சக்தி என்ற பண்பு நலன்களைப் புலப்படுத்துகின்றன. அடியார்களை நோக்கி அஞ்சேல் என்று அபயமளிக்கும் அபயஸ்தம் என்னும் திருக்கை வாத்சல்யம் என்னும் பண்பைக் குறிக்கும். அவரது திருமுடி அண்ட சராசரங்களுக்கெல்லாம் தலைவன் என்ற சுவாமித்வத்தைக் குறிக்கும். அவரது திருமுகம் சௌசீல்யத் தன்மையையும், ஊன்றிய திருவடிகள் சௌலப்ய நிலையையும் உணர்த்தும்.

முடிவுரை

இத்தகைய வாத்சல்யம், சுவாமித்வம், சௌசீல்யம், சௌலப்யம், ஞானம், சக்தி என்ற ஆறு பண்பு நலன்களைப் புலப்படுத்தும் அரங்கனின் திருஉருவத்தை மனதில் பதித்து அவன் திருவடிகளை வழிபட்டு உய்வோமாக.

மரமாகி நின்றருளும் மாருதி

நல்லாசிரியர் வெ. சுந்தரம், எம்.ஏ.

சிரஞ்சீவிகளில் ஒருவராக விளங்கும் ஸ்ரீ ஆஞ்சனேயர் அருள்பாலிக்கும் தலங்கள் பல உண்டு. சனிபகவானின் பார்வையால் ஏற்படும் துன்பங்கள் விலக அனுமனை வணங்கினால் துன்பம் அகன்று நன்மை விளங்கும் என ஆன்றோர் கூறியுள்ளனர்.

ஒரு சமயம் சனீஸ்வரன் ஆஞ்சனேயரிடம் தான் அவரைப் பற்றிக் கொள்ளக் கேட்டாராம். ''அவசரப்பணியின் நிமித்தம் சஞ்சீவினியைக் கொணரச் செல்கிறேன். பிறகு பற்றிக் கொள்ளுங்கள்'' என பவ்யமுடன் கூறினாராம் ஆஞ்சனேயர்.

''உம்மைத் தீண்டும் காலம் வந்துவிட்டது. நீரோ பக்திமான்: பரம்பொருளின் சேவகன். எனவே பணிவுடன் வேண்டுகின்றேன். அனுமதி தர வேண்டும்' என்றார் சனீஸ்வரன்.

இவர்கள் உரையாடிக் கொண்டே சஞ்சீவி பர்வதம் சென்றுவிடுகின்றனர். விடாமல் தொடர்ந்து வரும் சிறிதும் நெறிமாறாத சனீஸ்வரனின் செயலுக்கும் மனம் இடம் தரவேண்டும். அத்தோடு தன்பணியான சஞ்சீவி பர்வதத்தையும் தூக்கிச் செல்ல வேண்டும். இதற்கான யோசனையுடன் சனீஸ்வரரைப் பார்த்து 'என் தோளில் பற்றி அமர்க' என்று அனுமன் கூறினார். கிடைத்த சந்தர்ப்பம் நழுவவிடக் கூடாதென சனீஸ்வரனும் பற்றிக் கொண்டார் அனுமன் தோளிலே.

அடுத்து சஞ்சீவி பர்வதத்தைத் தூக்கி சனீஸ்வரர் பற்றிய தோளில் ஏற்றிக்கொண்டு விரைந்தார் இலங்கையை நோக்கி. மலையின் பாரம் அழுத்த சனீஸ்வரர் வலியின் மிகுதியால் துடித்தார்.

ராமபிரான் மகிழ சஞ்சீவி காற்றுப் பட்டதும் லக்குமணர் முதலானோர் உயிர்த்தெழுந்தனர். அனுமனிடம் சனீஸ்வரர் ''ஐயா! இரண்டரை நாழிகை உன்னைப் பற்றியதற்குத்தக்க பலன்கிடைத்தது, இனி உன்னிடம் எக்காரணம் பற்றியும் வரமாட்டேன்'' என்றார்.

அனுமனோ ''என்னிடம் மாத்திரமல்லாது என் பக்தர்களுக்கும் உன்னால் தீங்கு வரக் கூடாது' என்று கேட்டுக் கொள்ள அவ்விதமே அருள் புரிந்து சனீஸ்வரர் சென்றதாக ஆன்றோர் கூற அறிய முடிகிறது.

அப்படி சனியின் பார்வை ஏற்படுங்கால் அனுமனை வழிபட்டு நிவர்த்திப் பெறலாம் என்பது நம்பிக்கையாக இருந்தாலும் பலரது வாழ்வில் அட்டமத்துச் சனியின துன்பங்கள் வராமல் காக்க ஆஞ்சனேய வழிபாடு துணையாகி மலை போன்ற துன்பங்கள் பனிபோல நீங்கி வருவது கண்கூடான செயல்களாகும்.

வயல் வெளிச் சிறப்பும் வாணிபப் பெருக்கமும் நெசவுத் தொழில் பெருமையும் மிக்க பரமக்குடியில் அனுமார் கோதண்டராமசாமி கோயில் அமைந்துள்ளது. தற்போது ஊரின் நடுநாயகமாக இக்கோயில் இருந்த போதிலும் முன்பு ஊர் ஓரத்துக் கோயிலாக இருந்திருக்கிறது.

கிராமம் விரிவடைந்து நகரமாக விளங்கும் இக்கால கட்டத்தில் நகரின் நடுநாயகமாக நகராட்சி அலுவலகத்திற்கு அருகே பிரதானமாக அமைந்து அறநிலைய ஆட்சித்துறையின் கண்காணிப்பில் அறங்காவலர் குழுவால் நிர்வகிக்கப்படுகிறது.

வரலாறு

பரமக்குடியில் வைகை பாயும் கரையோரம், பட்ட புளியமரம் ஒன்றும் அதனருகே ஒரு விநாயகர் சிலையும் இருந்து வந்தது. ஆற்றில் நீராடி விநாயகரை வழிபட்டுச் செல்வோர்களும் உண்டு.

பட்டபுளிய மரத்தை மட்டும் யாரும் வெட்டுவதில்லை. பட்டை உரித்த மொட்டை மரமாக பாலகர்கட்குப் பகலில் ஓடி விளையாடவும், இரவில் தற்கொலை, கொலை போன்றவற்றிற்கு இந்த பட்டமரம் வசதியாகவும் இருந்ததாகக் கூறுவர். இரவு நேரங்களில் யாரும் அங்கு செல்ல மனத் துணிவு கிடையாது. வெளியூரார் யாரேனும் அங்கு வந்தால் தங்கவிடாமல் உள்ளூர்வாசிகள் தங்கள்இல்லங்களில் தங்கியிருக்குமாறு கூறுவர். பொதுவில் பேய்கள் உலவும் மரம் எனப் பேசப்பட்டு வந்தது.

ஒரு நாள் மாலையில் வடநாட்டுப் பெரியவர் ஒருவர் விநாயகர் சிலைக்கும் பட்ட புளிய மரத்திற்கும் நடுவே தனது பொருள்களை வைத்துத் தங்கியிருந்தார். அந்தி மயங்கிய நேரம். வானில் விண்மீன்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக வானத்தில் தோன்ற ஆரம்பித்தன.

ஊராரில் சிலர் அவரிடம் வந்து ''இந்த இடம் நல்ல இடமல்ல. எழுந்து வந்து வீடுகளில் தங்கியிருக்கலாம்'' என அன்போடு அழைத்தனர்.

வடநாட்டு யாத்ரீகரான அந்த பைராகியோ காசி முதல் ராமேஸ்வரம் வரை கால்நடையாக வருவதாகவும் யாத்திரை முடியும் வரை எந்தவொரு இல்லத்திலும் தங்குவதில்லையென்றும் பிறர் இடும் அன்னம் உண்பதில்லை என்றும் மறுத்துவிடுகிறார்.

இரவில் இங்கு தங்கியவர்கள் காலையில் உயிருடன் இருப்பதில்லை என்பதைத் தெளிவுபடுத்தினார்கள் ஊரார். ஆனால் அவரோ ''நான் ஆஞ்சனேய பக்தன். ஆஞ்சனேயர் என்னைக் காப்பாற்றுவார். நீங்கள் தைரியமாகச் சென்று காலையில் வாருங்கள்' என்று சிரித்தவாறே சொன்னார்.

ஆதவன் தோன்றி மறுநாள் காலை தன் கைகளை நீட்டி இரவினை எழுந்தேகச் செய்கின்றான். விடிந்தும் விடியாத சங்குல் காலையது. முந்தைய நாள் மாலை நேரம் பார்த்த பைராகியைக் காணச் சிலர் விரைந்தனர்.

அதிர்ச்சியும் ஆச்சரியமுமாக பைராகியை நோக்கினர். குளித்து முடித்த அவர் ஈர உடைகளைக் காய வைத்துவிட்டு செங்கல்களால் ஏற்படுத்திய அடுப்பினில் தமது உணவிற்காக ரொட்டி தயார் செய்து கொண்டிருந்தார்.

வந்தவர்களை வரவேற்று அவர்கள் அச்சம் அகல உரையாற்றினார்.

''பட்டுப் போன இம்மரம் வெட்டுப்படாமல் இருப்பதன் நிலையை நீங்கள் உணர வேண்டும். ஆஞ்சனேயர் சஞ்சீவிமலையைக் கொண்டு சென்றபோது அம்மலையிலிருந்து ஒரு புளியம்பழம் கீழே விழ அவ்விதையிலிருந்து தோன்றியது இம்மரமாகும்!

உங்கள் நல்லுரைகள் அன்பான உபசரிப்பு இவற்றால் மகிழ்ந்து நான் உபாசித்து வந்த ஸ்ரீஆஞ்சனேயப் பெருமானை இப்பட்ட மரத்தில் ஆவாகணம் செய்துள்ளேன். இராமேஸ்வரம்சென்று நான் திரும்புமுன்னரே இப்பட்ட மரம் துளிர்விட்டு தழைத்திருக்கும். உயிர்ப் பொருளாக ஆஞ்சனேயர் வாசம் செய்வதால் எல்லோரும் இம்மரத்தை வழிபட்டு நலம் பெறுங்கள்' என்று கூறினார்.

அவர் கூறியபடியே சில நாட்களிலேயே பட்டமரம் தழைத்தது. பல்லோரும் பக்தியுடன் அனுமனை வணங்கத் தலைப்பட்டனர். நாட்கள் வேகமாக நகர்ந்தன. பூஜைகள் சிறந்தோங்க அனுமாரின் வீரம் ஆவேசம் அதிகமாகியது. சிறு பெண்களும் வயதான பெண்களும் தவிர மற்றவர்தாம் மரமிருக்கும் பக்கம் செல்ல முடியும் என்னும் நிலை ஏற்பட்டது. இதனால் மக்கள் கவலை கொண்டனர். மரத்தைச் சுற்றி சுவர் எழுப்பி மற்றும் விநாயகர் உள்ளிருக்கும்படி சுற்றுச் சுவர் எழுப்பித் தனிக்கோயிலாக வைத்து வழிபட்டனர்.

சுமார் நூறு ஆண்டுகட்கு முன்பு காஞ்சி சங்கராச்சார்யார் இங்கு எழுந்தருளியிருந்த சமயம் மரமாகி நிற்கும் மாருதியின் சிறப்புப் பற்றி கூறப்பட்டது. நேரில் வந்து பார்த்த சுவாமிகள் தனி ஆஞ்சனேயருக்கு உக்ரகம் அதிகம்தான் இருக்கும். அருகில் ஸ்ரீராமர் பிரதிஷ்டை செய்தால் சரியாகிவிடும் எனக் கூறி அவரே உரிய முறைகளைத் தெரியப்படுத்தியுள்ளார். ஸ்ரீசங்கராச்சாரிய சுவாமிகளாலேயே ஆஞ்சனேயருக்கு அருகே ஸ்ரீராமர் சந்நிதி தோற்றுவிக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடந்தேறியுள்ளது.

கோயில் அமைப்பு

கிழக்கு நோக்கிய ராஜகோபுரம் தற்போது பக்தர்களால் கட்டப்பட்டுள்ளது. ராஜகோபுரத்துள் வழியே மண்டபம் ஒன்றுஉள்ளது. நேரே மாருதி மரமாகி நின்று அருள்பாலிக்கின்றார். தென்புறம் கிழக்கு நோக்கிய ஸ்ரீராமபிரான் சந்நிதி. அத்திருவறைக்குள் ராமருக்கு வலப்புறம் இலட்சுமணப் பெருமாளும், இடதுபுறம் அன்னை சீதாதேவியும் நின்றருள்பாலிக்கின்றார்கள்.

இராமர் சந்நிதிக்கு நேராக கொடிமரம் புதிதாக பக்தர்களால் நிறுவப்பட்டுள்ளது. ஸ்ரீராமர் சந்நிதிக்குத் தென்புறமாக கிழக்கு நோக்கி சக்கரத்தாழ்வார் சந்நிதியும் பக்தர்

களால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. வலது பக்கச் சுற்றுச் சுவற்றில் ஆண்டாள் பாசுரங்கள் சலவைக்கல்லில் செதுக்கியவை பதிக்கப்பட்டுள்ளன.

ஆஞ்சனேயர் சந்நிதிக்குச் செல்லுமுன் கிழக்கு நோக்கியுள்ள சந்நிதிக்கு சற்று வடக்கே விநாயகர் (இடத்தின் சொந்தக் காரர்) இருக்கிறார்.

நூறாண்டுக்கு முன் ராமர், ஆஞ்சநேயர் விநாயகர் குடமுழுக்குக் கண்ட பின்னர் பக்தர்களின் பெரு முயற்சியால் யுவ வருடம் பங்குனி 26-ஆம் நாள் 8-4-1996 திங்களன்று விநாயகர் பெருமான், ஸ்ரீகோதண்ட ராமசாமி, ஸ்ரீசக்கரத்தாழ்வார் சமேத ஸ்ரீஆஞ்சனேயருக்கு மரமாகி நின்றருளும் மாருதி திருக்கோயிலில் ஸ்ரீ ஸ்ரீசக்ரத்தாழ்வார் பிரதிஷ்டையுடன் கூடிய கும்பாபிஷேகம் நடைபெற்று உள்ளது. பக்தர்களின் பக்திப் பரவசமும், பரமக்குடி கம்பன் கழக உறுப்பினர்களின் செயல்பாடும் திருக்கோயில் குடமுழுக்கை செவ்வனே நிறைவேற்றிய மாருதி திருவுள்ளம் நாம் போற்றி வழிபட வேண்டுவதாகும்.

பூஜைகள் : காலை, மாலை பூசைகள் விசேஷமாக நடைபெறுகின்றன. பௌர்ணமி தோறும் பெண்கள் திருவிளக்கு வழிபாடு, சனிக்கிழமைகளில் விசேஷ அபிஷேக ஆராதனைகள், ஸ்ரீராம நவமி பத்து நாள் உற்சவம், மார்கழி மாத சிறப்பு வழிபாடு போன்று திருமாலுக்கு உகந்த நாட்களில் சிறப்பு வழிபாடுகள் உண்டு. சுதந்திரதினம், குடியரசு போன்ற தேசிய திருநாட்களில் சமபந்தி போஜனமும் உண்டு.

ஸ்ரீராமநவமி உற்சவ காலத்தில் சீதாராமர் திருக்கல்யாண நாளில் ஆஞ்சனேயர் வேடம் தரித்திடும் பிரம்மச்சாரிக்கு மறு சீதா கல்யாண உற்சவத்துக்குள் திருமணமாவது உறுதி என்டது அனுபவ பூர்வ உண்மை.

இதுவரை உற்சவ மூர்த்திகள் இல்லாதிருந்த குறையை பக்தர்கள் நீக்கி விட்டார்கள். இனி உற்சவர்க்கும் வழிபாடு, வீதி உலா நடைபெற வாய்ப்புண்டு.

பக்தியுடன் வழிபடுவோர்க்கு சக்தி மிகத் தரும் மாருதி மரமாக, உயிர்ப் பொருளாக நிற்பதால் மரத்தின் அடியில் வெள்ளியால் அனுமார் கவசம் சாற்றப்பட்டுள்ளது.

வெண்ணெய் சாற்றல், வடைமாலை சாற்றல், மாலைகள் போன்ற கைங்கர்யங்கள் யாவும் மரமாகி நிற்கும் மாருதிக்கே உரியது.

மார்கழி மாதம் நடைபெறும் அனுமத் ஜெயந்திக்கு மக்கள் வெள்ளம் 100, 1000, 10000, 100000 என்ற எண்ணிக்கையில் பகவிரவு பாராது பக்தியுடன் பிரகாரத்தைச் சுற்றிவருதலும் விசேஷ அபிஷேகங்களும், அலங்காரங்களும் சிறப்பானவை.

நமச்சிவாய மந்திரம்

நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சிவாயவே நானறிவிச்சையும்
நமச்சிவாயவே நாநவின்றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி நாட்டுமே.

—திருநாவுக்கரசர்

நாலுபேர் கூடி நின்றாலும் கைக்குள் அடங்கா அளவில் உள்ள புளியமரமே மாருதியாகும், இம்மரம் மண்டபத்தின் மேல்புறம் படர்ந்து இருந்தாலும் வடகிழக்கு மூலையில் நின்று பார்த்தால் சஞ்சீவி பர்வதத்தை அனுமன் ஏந்திச் செல்வது போன்ற நிலையில் மரம் அமைந்துள்ளதைக் காணலாம்.

இம்மரத்தில் பூக்கும், காய்க்கும் கனிகள் சொத்தையாகிக் கீழே விழும். இலைகள் பிரசாதமாக, அங்கேயே உட்கொள்ளப்படும்.

விழாக்காலமாம் ஸ்ரீராம நவமியில் கலை நிகழ்ச்சிகள், உபன்யாசங்கள், கச்சேரிகள், பட்டி மண்டபங்கள், கவியரங்குகள் போன்றவை கோவில் வாசலில் உள்ள வெளியிடத்தில் நடைபெறும்.

கோவிலுக்கு கூடுதல் சிறப்பு

சுவாமி விவேகானந்தர் இக்கோயிலுக்குப் பக்கத்தில் உள்ள கட்டிடத்தில் தங்கியிருந்திருக்கிறார். இங்கு வழிபாடு செய்து அருகில் உள்ள வைகை ஆற்றங்கரையில் உரை நிகழ்த்தியுள்ளார்.

விநாயகர்—பிரம்மச்சாரி—இடம்
ஆஞ்சனேயர்—பிரம்மச்சாரி—மரம்
பைராகி—பிரம்மச்சாரி—ஆவாகனம் செய்தவர்
விவேகானந்தர்—பிரம்மச்சாரி—வழிபட்டு உரையாற்றியவர்.

இவ்வாறு பல்வேறு சிறப்புகள் கொண்ட மரமாகி நிற்கும் மாருதியின் திருக்கோயிலில் ஸ்ரீ ஸ்ரீகோதண்ட ராம சுவாமிக்கு தனிச்சந்நிதி உள்ளது போல் வேறு எங்கேனும் இருந்தால் தெரியப்படுத்தலாம்.

மரமே மக்களுக்குக் காற்று, மழை தந்து காப்பாற்றுவது. வாயு உற்பத்தியே மரங்களால்தான். இதை உணர்த்துமுகமாக வாயு குமாரன் மரமாகி நின்று மாறாதருள் புரியும் காட்சியைக் கண்டும் மாருதிசமேத கோதண்டராமசாமி அருள் பெற்று வாழ்வோம்.

கடும்பாடி சின்ன அம்மன்

வசந்தி சுந்தரராசன்

சுமார் 280 வருடங்களுக்கு முன் சைதாப்பேட்டை கிராமம், காடுகளால் சூழப்பெற்றிருந்தது.

அந்த காட்டில் ஓரிடத்தில் சின்ன கூரை வேய்ந்த இடத்தில் தானே உருவான சின்ன அம்மன் ஒன்று மூதாட்டி ஒருவரால் பூஜை செய்யப்பட்டு வந்தது. அவ்வமயம் (பிரிட்டிஷ் காலம்) ஈஸ்ட் இண்டியா கம்பெனியின் அரசர் வேட்டையாடுவதற்காக இந்த காட்டின் வழி வந்திருக்கிறார். வந்தபோது இந்த சின்ன அம்மனையும், பூஜை செய்த மூதாட்டியையும் பார்த்து ஏளனம் செய்திருக்கிறார்.

அன்று இரவே அவருக்கு கடுமையாக அம்மை நோய் கண்டது.

நோயின் கொடுமையைத் தாளாத அரசர் அம்மனின் சக்தியை உணர்ந்து ஓடோடி வந்து அம்மனின் காலில் விழுந்தார். மூதாட்டியிடம் தனது தவறை மன்னிக்குமாறு கேட்டுக் கொண்டார். தனது அறியாமையால் நேர்ந்த தவறை உணர்ந்து மூதாட்டி கேட்ட நிலத்தை அந்த அம்மனுக்கு கோவில் கட்ட தானமாக வழங்கினார். (விக்டோரியா மகாராணியால் வழங்கப்பட்டது). அதுமட்டுமல்லாமல் கோயில் பராமரிப்புக்காக 6 காணி நிலம் கோவில் பின்புறத்தில் வழங்கப்பட்டது. அந்த மூதாட்டி வாணிகச் செட்டி பரம்பரையைச் சேர்ந்தவர். அதனால் இன்றும் இந்தக் கோவில் அந்த பரம்பரை வழியாகவே பராமரிக்கப்படுகிறது. தற்போது சி.பி. சுப்ரமணி, சி.பி. ஆறுமுகம், சி.பி. சந்திரசேகர், சி.பி. பிரபாகரன் என்ற நால்வரால் பராமரிக்கப்படுகிறது.

இக்கோவிலின் சின்ன அம்மனுக்கு பின்னால் பெரிய அளவில் அம்மன் சிலை உருவாக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. பாலசுப்ரமணியச் செட்டியார் நிர்வாகம் செய்த காலத்தில்-அவர்களது சொந்த ஊரான செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள கடும்பாடி அம்மன் கோவிலைப் போல் உருவாக்க நினைத்து இந்த அம்மனுக்கு கடும்பாடி சின்ன அம்மன் எனப் பெயரிட்டார்.

இந்த அம்மனுக்கு பின்புறம் விநாயகர் சந்நிதி உள்ளது. அந்தக் காலத்திலேயே பெரிய அம்மன் உருவான செய்தி கல்வெட்டில் பதிவாகி உள்ளது. நுழை வாயிலின் இடதுபுறத்தில் ஒரு புற்று உள்ளது. தெற்கே கன்னிமார்கள் சிலையும், அண்ணன்மார்கள் சிலையும் உள்ளது. இவர்களைப் பக்தர்கள் எல்லைக் காவல் தெய்வமாக வழிபடுகிறார்கள்.

கன்னிமார்கள் அருகில் ஒரு படர்ந்த வேப்பமரம் உள்ளது. இது 200 வருடங்களுக்கு மேல் இருந்து வருகிறது.

துர்க்கை அம்மன் சந்நிதி உள்ளது. ஒற்றைப் பனைமரம் ஒன்று கோவிலின் நுழை வாயிலின் வலது புறத்தில் உள்ள சுவர் ஓரமாக வளர்ந்து உள்ளது. ஒற்றைப் பனைமரம் உள்ள கோவில் இது ஒன்றுதான், இங்கு இந்த மரம் கற்பூரம் ஏற்றப்பட்டு அந்தக் காலம் முதல் இந்தக் காலம் வரை பூஜிக்கப்படுகிறது. கோவிலின் நுழைவாயிலின் உட்புறத்தில் வலது புறம் மதுரை வீரன் சிலையும், இடது புறம் காத்தவராயன் சிலையும் காவல் தெய்வமாக விளங்குகிறார்கள். முன் மண்டபத்தில் துவஜஸ்தம்பம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானியர் சென்னைக் கோட்டையில் குண்டு போட்ட நேரம் ஊரடங்கு உத்தரவுச் சட்டம் நிலவி இருந்தது. அந்த நேரத்தில் மாலைப் பொழுதிற்கு மேல் மக்கள் நடமாட்டமோ, கோவில் வழிபாடுகளோ எல்லாமே நின்றுவிட்டது. இதன் காரணமாக கடும்பாடி அம்மன் தர்மகர்த்தா பாலசுப்ரமணிய செட்டியார் அவர்கள் திருவள்ளூர் சென்று விட்டார். உற்சவம் செய்ய முடியாத நிலை. அவ்வமயம் சைதாப்பேட்டை கிராமத்தில் கடுமையான அம்மை நோய் கண்டது. வீட்டின் முன்னால் வேப்பிலை கட்டி வாசலில் விளக்கும் வைத்தால் அந்த வீட்டில் அம்மை நோய் கண்டிருக்கிறது என்பதை உணரலாம்.

இதன் கடுமையைத் தாளாமல் மக்கள் கோவில் பூஜை செய்பவரிடம் பிரம்மோத்சவம் செய்யும்படி கேட்டுக் கொண்டார்கள். இது இப்படி இருக்க திருவள்ளூர் சென்றசெட்டியார் கனவில் தனக்கு உற்சவம் செய்யும்படி அம்மன் கட்டளையிட்டதைக் கண்டு மனதில் ஓர் முடிவுடன் சைதாப்பேட்டை வந்தடைந்தார். ஊரின் நிலையைக் கண்டு அம்மனின் விளையாட்டை பார்த்து ஆச்சரியப்பட்டு மாலைப் பொழுதில் விளக்கு ஏற்றுவதற்கு முன் உற்சவத்தை தினமும் நடத்தி முடித்தார்.

அந்த தீவிரமான நேரத்திலும் உற்சவம் செய்து கொண்ட பெருமை இந்த அம்மன் ஒருத்தியையே சாரும்.

இதோடு மட்டுமல்லாமல் அந்த கிராமத்தைச் சேர்ந்த பெண் ஒருத்தி குழந்தை வரம் வேண்டி மன்றாடி அம்மனிடம்தான் குழந்தை பெறும் பாக்கியம் அடைந்தால் அந்தக் குழந்தைக்கு கடும்பாடி எனப் பெயரிடுவதாக வேண்டினாள். அதே மாதிரியே ஆண் குழந்தை ஒன்றை பெற்று அதற்கு கடும்பாடி என்றே பெயரிட்டாள்.

இங்குப் புற்று சிறிய அறையில் உள்ளது. இதன் மேல் கூரை பனைக் கம்புகளால் வெகு ஆண்டுகளுக்கு முன் போடப்பட்டிருக்கிறது. இந்தப் புற்று உள்ள மேல் கூரையை புதுப்பிக்க வேலையாட்கள் உள்ளே நுழைந்தாலும் சில நிமிடங்களில் பாம்பு சீறும் சப்தம் கேட்பதாகவும் சர்ப்பம் நிழலாடுவதாகவும் சொல்லி வெளியில் வந்துவிடுகிறார்கள். வெள்ளிதோறும் புற்றில் வேப்பிலையால் (புற்று மூடும் அளவக்கு) பரப்புகிறார்கள். இது இந்த கோவிலின் விசேஷமாகும்.

மேல்புறத்தில் பாலும், முட்டையும் போடுகிறார்கள். 1000, 2000-த்திற்கு மேல் முட்டை ஓடுகள் இருந்தாலும் அவைகள் எப்போதும் அப்புறப்படுத்தப்படுவதில்லை. அன்றிலிருந்து இன்று வரை அப்படித்தான் இருக்கிறது. இருப்பினும் புற்றின் உயரம், சுற்றளவு எல்லாம் அதே நிலையில்தான் இருக்கிறது. வேப்பிலையும் காய்ந்த காம்புகளும் மட்டும் எடுக்கப்படுகிறது. இலைச் சருகுகள் நீக்கப்படுவதில்லை. இருப்பினும் புற்றின் நிலை மாறவில்லை.

ஈசன் திருவடி பற்றுக

நாளும் நம்முடைய நாள்கள் அறிகிலோம்
ஆளும் நோய்களோர் ஐம்பதோடு ஆறெட்டும்
ஏழைமைப் பட்டிருந்துநீர் நையாதே
கோளிலி அரன் பாதமே கூறுமே.

—திருநாவுக்கரசர்

இக்கோவிலின் வேப்பமரததில் 1982-ஆம் மகா சிவராத்திரியன்று 11 மணிக்கு மேல் பால் வடிந்திருக்கிறது. ஓரிருவர் அதைப் பார்த்துப் பின் லட்சோப லட்சம் மக்கள் பார்த்து வியந்து போனார்கள். இந்த பால் 1 வாரம் வரை தொடர்ந்து விடாமல் சொட்டியது. இந்த பால் ரொம்பவும் இனிப்பாக இருந்ததாகச் சொல்கிறார்கள்.

இக்காட்சியினைப் புகைப்படமெடுத்து (பெரிய அளவில்) கோவிலில் மாட்டியுள்ளார்கள். இதைப் பற்றிய செய்தி பத்திரிகையில் கூட வந்தது.

கோவிலில் வேப்பஞ்சேலை உடுத்திப் பிரார்த்தனை செய்ய விரும்புபவர்கள் இந்த மரத்தின் இலைகளைத்தான் உடுத்துவார்கள். இதில் பால் வடிந்த பிறகு இம்மரத்தின் இலையை மக்கள் எடுப்பதில்லை. ஆடி அமாவாசைக்குப் பிறகு வரும் வெள்ளியன்று கொடியேற்றி 10 நாட்களுக்குக் காலை மாலை இரு வேளையும் பிரம்மோத்சவ விழா விமரிசையாக கொண்டாடப்படுகிறது.

கார்த்திகை கடைசி வெள்ளியில் 108 சங்கு அபிஷேகமும், தை மாத கடைசி திங்கள் முதல் வெள்ளி வரை 5 நாட்களுக்கு லட்சார்ச்சனையும், நவராத்திரி 9 நாட்களுக்கு சிறப்பு வழிபாடுகளும் மகா சிவராத்ரியும், சித்திரா பவுர்ணமியன்று பௌர்ணமி பூஜையும் பல சிறப்பு அலங்காரத்தோடு பரவசத்தோடு கொண்டாடப்படுகிறது.

பிரம்மோத்சவத்தின் 9-ம் நாள் அம்மன் காமகோடி விமானத்தில் கம்பா நதிக் காட்சியுடன் அலங்கரிக்கப்பட்டு சைதை கிராம ஆற்றங்கரையிலிருந்து-பரம்பரை தலைவர்களின் தலையில் கரகம் எடுத்துவர பம்பை, உடுக்கை சகிதம் பாடலாக வர்ணிக்கப்பட்டு-அம்மன் சுவாமியுடன் ஊர்வலம் வருவது இக்கோவிலின் முக்கிய சிறப்பாகும்.

உற்சவத்தின்போது 108 பதுமைகள் ஊர்வலமாக எடுத்து வரப்படுகிறது.

10 நாள் கும்ப விழாவன்று சைதை கிராமத்து மக்கள் (ஆண், பெண் இருபாலரும்) வேப்பஞ்சேலையுடுத்தி அம்மனை வழிபடுகிறார்கள்.

மதுரை அருள்மிகு
மீனாட்சி அம்பிகை தியானம்

அறநெறியண்ணல் கி. பழநியப்பனார், மதுரை.

ஆசிரியப்பா

தேனார் மலரடிச் சீரார் சிலம்பும்
வானார் மின்னிடை வயங்கு மேகலையும்
மும்முலை இரண்டாய் முயங்கும் மார்பில்
செம்மணி முத்துடன் திகழும் ஆரமும்
மங்கல நாண்சேர் மாமணி மிடறும்
கொஞ்சுங் கிளியமர் கோலக் கரமும்
நிலவின் தண்ணொளி நிகரில் வதனமும்
இலகு கதிராம் இணைமுக் கனியும்
குனித்த புருவமும் குலவு காதினில்
அணிந்த மகரமும் அலங்கு தோடும்
கருணை பொழியும் கண்கள் இரண்டும்
மருவில் பிறைபோல் மன்னிய நுதலில்
செந்தூள் மங்கலத் திலக அழகும்
செந்துவர் வாயின் புன்னகைச் செறிவும்
துலங்கி விரிந்த சுடர்ஒளிக் கதிரென
விளங்கு சிரசில் வைரமா முடியும்
மரகத வண்ணம் பரவிய மேனியும்
விரைமலர்த் துதிக்கைத் தரைநீள் மாலையும்
கண்குளிர் தெய்வக் காட்சி அளித்திட
மண்ணில் பிறந்த மக்கள் பலரும்
ஆடியும் பாடியும் அன்னை அருளினைத்
தேடியே நாளும் நாடியே வந்திடும்
அன்பர்க்(கு) அருளும் அங்கயற் கண்ணியே!
துன்பம் துடைக்கும் தூமணி விளக்கே!
மதுரம் பொழியும் மதுராம் பிகையே!
பொதுவில் ஆடும் புனிதன் துணையே!
சொக்கன் உனக்கும் சொக்கியாம் அமுதே!
திக்கெலாம் நிறைந்த திரிபுரத் தாயே!
அழகெலாம் ஒன்றிய அற்புத அணங்கே!
உலகெலாம் ஈன்ற உத்தமக் கன்னியே!
ஆலவாய் அரசியாய் ஆள்வதை விட்டுக்
காலனை உதைத்த காலனை டணந்து
தன்னர(சு) ஈந்த தகைமை யுடையோய்!
பெண்ணொரு பாகமாய் நின்றருள் பொழிந்து
மண்ணுயிர் எல்லாம் மகிழச் செய்வோய்!
பந்தம் அகற்றும் அந்தமில் அணங்கே!
செந்தமிழ் மொழியாய்த் திகழும் தாயே!
வேதம் மோழிந்த விமலன் கூறே!
நாத முடிவாம் நாதன் துணையே!
உன்பத மலரைச் சென்னியில் வைத்தே
பொன்மலர் தூவிப் போற்றுவன் யானே!
அன்பும் பண்பும் அமைந்த வாழ்வில்
துன்பம் நீக்கி இன்பம் பெருக்கிப்
பொய்மை இல்லா வாய்மைப் பேச்சால்
எய்திட அருள்வாய் எண்ணிய அனைத்தும்;
உயிரைப் பற்றிய ஊழ்வினை குன்றிடப்
பயிலும் வகைதனைப் பரிவுடன் உணர்த்திப்
பயிரைக் காக்கும் பருவ மழையென
உயிர்கள் உய்ய உறுதுணை யாவாய்
அன்னை மீனாட்சி தண்ணார்
பொன்மலர்த் திருவடி போற்றி போற்றியே!

நல்மனமே அஞ்சாதே

(எண்சீர் விருத்தம்)

இல்லாதன எல்லாம் இருப்பதாய்ப் பாவித்து
ஏனோ நீ அல்லல் படுகிறாய் பாழ்மனமே!
நல்லனவோ கெட்டனவோ ஏதோ
நடப்பதெல்லாம்
நாதன் செயலென நீஅறியாயோ மனமே!
தொல்லை வினைதீர்ந்திட எத்தனை
எத்தனையோ
துன்பங்கள் அலைதக்கண்டு அஞ்சுவதேன்
மனமே!
எல்லையில் புகழ்சேர் அன்னை மீனாட்சியின்
இன்னருளே காக்கும் நல்மனமே அஞ்சாதே!

தாந்தன் சேத்திரம்

தாந்தன் என்ற ஆதி திராவிட திருமால் அடியார் சாளக்ராமத்தைச் சார்ந்தவர். விந்தியம் வரை வந்த அவரைப்பேரொளி ஒன்று வழிகாட்டி திருக்குருகூருக்கு அழைத்து வந்தது. ஆதி திராவிட இனமென வெறுத்தஅந்தணர்க்கு அஞ்சி பொருநையின் வடகரை வந்து ஆதிநாதரை அமைத்து வழிபட்டார். திருமால் அடியாரை இனங்கருதி வெறுத்த அந்தணர் விழி ஒளி இழந்தனர். ஆண்டவன் ஆணைப்படி தாந்தனிடம் வந்து மன்னிப்புப் பெற விழைந்தனர். தாந்தன் இருக்குமிடம் வந்ததுமே விழியொளி பெற்றனர் அந்தணர். தாந்தன் வழிபட்ட ஆதிநாதர் அமைந்த இடம் ஆதிநாத சேத்திரம், அப்பன் கோயில் என அழைக்கப் படுகிறது. ஆலய மண்டபத்தில் தாந்தன் உருவமும் இடம் பெற்றுள்ளது. செம்பொன் மாடத் திருகுருகூர் 'தாந்த சேத்திரம்' என்றும் அழைக்கப்படுவது எவ்வளவு பெருமை!

இந்த நாட்டில் அரிஜன மக்கள்—பிற சமுதாயப் போராட்டம் ஆதி நாதர், நம்மாழ்வார் மனதுக்கே உகப்பு அல்ல.

ஆதாரம் : 108 வைணவ திவ்யதேச தல வரலாறு.

தகவல் : ஆர். பி. சாரதி.

அறப்போதில் ஆட்சி செய்யும் அன்னை ஆதிகாமாட்சி

நல்லாசிரியர் வெ. சுந்தரம்

'மலையிலேதான் பிறந்தாள் சங்கரனை
மாலையிட்டாள்
உலையிலேஊதி உலகக் கனல் வளர்ப்பாள்
நிலையிலே உயர்த்திடுவாள் நேரே அவள்பாதம்
தலையிலே தாங்கி தரணிமிசை வாழ்வோம்'
—மகாகவி

மக்கள் வாழ்க்கைக்கு மங்காச் செல்வம் அளிக்கும் மருதநிலப்பகுதி. வாணிபம் மூலம் செல்வம் சேர்த்து கலைபல வளர்த்து ஆன்மீக நெறியில் அன்பினை வளர்க்கும் பாண்டிய நாட்டினுள் 'அறப்போது' என்றழைக்கும் அழகிய சிறு கிராமம்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகுளத்தூரிலிருந்து இராமநாதபுரம் செல்லும் சாலையில் சுமார் பத்து கிலோ மீட்டர் சென்றதும் கருமல் விலக்கு என்னுமிடத்தில் இறங்கி ஒரு கிலோ மீட்டர் தூரம் சென்றதும் பசுமை பொங்கும் வயல்கள் சூழ்ந்த கிராமம் ''அறப்போது'' என்பதாகும்.

ஊருக்குள் செல்லுமுன்னே அழகுமிக்க அன்னை ஆதிகாமாட்சி கோயில் நம்மை வாவாவென வரவேற்கும். குளக்கரையில் அமைந்துள்ளது இக்கோயில். எழில்மிக்க இயற்கைச் சூழலில் அழகுத் திருக்கோலத்தில் அம்மன் ஆதிகாமாட்சி நின்று அருள்பாலிக்கும் நேர்த்தியான தனிமை பக்தர்தம் நெஞ்சமதில் நினைவலைகளை நேர்படுத்தி பக்தியில் பரவசமாக்கி வைக்கும்; பரவச நிலையைப் பரிவுடன் அளிக்கும்.

கோயில் சிறியதே எனினும் அதன் கீர்த்தியோ மிகவாகும். லண்டன், சிங்கப்பூர், மலேசியா, ஆஸ்திரேலியா போன்ற இடங்களிலும் அறப்போது அன்னையின் அருள் பொலிவு மிகவாகியுள்ளதை அறியும்போது எண்ண அலைகள் அவளது திருவடியைத் தொழுகின்றன. லண்டன் போன்ற வெளிநாட்டிலிருந்து பக்தர்கள் பூஜைக்குப் பணம் அனுப்பி பிரசாதம் அஞ்சல் மூலம் பெறுவதை அறியும்போது தாயின் திருநீற்று மகிமை தரணி எங்கும் பரவி நலம் நாட்டுவிக்கும் மாட்சியை நன்குணர முடிகின்றது.

ராஜகோபுரம் சிறியதாக இருந்தாலும் சீர்மிகு கருணையுடன் 'யாமிருக்கப் பயமேன்' எனக் கூறி அழைப்பது போன்ற பிரமிப்பினை ஏற்படுத்துகிறது. உள்ளே நுழைந்ததும் இடது புறமாக தல விருட்சமாம் வில்வமரம் பெரியதாக படர்ந்த நிலையில் மணம் பரப்பும் பூக்களுடனும் காய்களுடனும் காண முடிகின்றது. மரத்தின் தன்மையைக் காணும்போது இது மிகப் பழைமை பெற்ற கோயில்தான் எனப் பகர்கிறது.

வாசலில் காத்தவராய சுவாமி காவல் தெய்வமாகக் காட்சி தருகிறார். தற்கால முறைப்படி கட்டப்பட்ட பெரிய மண்டபத்தினுள் நுழைகின்றோம். இருபுறங்களிலும் கருப்பண்ணசாமியும், எதிரில் கருப்பாயி அம்மை, சோணையா, முத்தாளம்மன் போன்ற தெய்வத் திருவுருவங்கள் நம்மை பக்தியுடன் வணங்கச் செய்வனவாகும்.

அம்மன் ஆதிகாமாட்சியைத் தரிசிக்க அர்த்த மண்டபத்தினுள் நுழைகின்றோம். திருவடி முதல் திருமுடி வரை எழிலார்ந்த அழகுத் திருமேனியாக நின்றருள்பாலிக்கின்றாள்.

நின்ற திருமேனியேயாயினும் அன்னையவள் வலது திருப்பாதம் சற்று முன்னும் இடது பாதம் சற்று பின்னுமாக உள்ளதைக் காணலாம். மேலும் நன்கு கூர்ந்து நோக்கினால் கால் விரல்கள் தரையில் ஊன்றி, குதிக்கால் சற்றே தூக்கிய நிலையில் இருப்பதைக் காணலாம்.

இவ்வாறு நின்றிருக்கும் திரு உருவ அமைப்பு மாங்காடு காமாட்சி அம்மனின் திரு உருவத்தை நினைவூட்டுகிறது. இரு உருவமும் ஒன்றாக நம் உள்ளத்தில் தோன்றி அருள் தருதற்காகவே கால் கடுக்க நிற்பதாகத் தோற்றமளிப்பதாக எண்ண முடிகிறது.

அன்னையின் நின்ற திருக்கோலக் காட்சியின் காரணமும், கோயில் வரலாறும் அறிய அவா மிகுந்தது. திருப்பணிச் செம்மல் ஆலயத்தலைவர் திரு வெ. தியாகராஜன் செட்டியார் அவர்களை அணுகி வினவிய போது அவர் சிந்தை மகிழ்ந்து செப்பிய செய்திகளில் சிலவற்றைக் காண்போம்.

ஆங்குள்ள ஓர் கல்வெட்டில் 'தளிர் மருங்கூர் தெய்வ நாயகம் செட்டி மகன் சிவஞானம் செட்டி' எனக் குறிப்பிடப்பட்டுள்ளதால் இக்கோயில் சிவஞானம் செட்டி என்பவரால் தோற்றுவிக்கப்பட்டிருக்க வேண்டும் என அனுமானிக்க முடிகிறது. காலச் சூழலில் சிறியதான கோயில் பழுதுபட்டாலும் அன்னை ஆதி காமாட்சியின் அழகுத் திரு உருவமும், அருள் பாலிக்கும் சக்தியும் பெருகியே வந்துள்ளது.

1956-57-ல் புதுப்பிக்கப்பட்டு குடமுழுக்கு விழா நடந்தேறியுள்ளது. பின்னர் 1976-77-ல் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு 9-2-81-ல் குடமுழுக்கு நடந்தேறியுள்ளது.

பக்திப் பெருக்காலும், அன்னையின் அருளால் சக்தி மிகப் பெற்றோராலும், ஆன்மீக நெறி நிற்போர்களாலும் விரிவுபடுத்தி பல்லோரும் போற்ற பயன்மிகு திருப்பணிகள் மேற்கொண்டனர். அதன் விளைவாகவே ராஜகோபுரம், பெரிய மண்டபம், திருமண மண்டபம், மடைப்பள்ளி, தங்கும் அறைகள், சுற்றுச்சுவர் போன்றவை அமைக்கப்பட்டும், ஊருக்குள்ளே கோயில் வீடும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பின்னர் 15-9-1994-ல் திருக்குடமுழுக்கு நடைபெற்றுள்ளது.

தினசரி காலை, மாலை இருகால பூஜையாயினும் முறையோடு நடத்தப்படுகிறது. ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் திருவிளக்கு வழிபாடு சிறப்புறச் செயல்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு மாதத்திலும் அம்மனுக்குரிய விசேஷ தினங்கள், ஆனித் திருமஞ்சனம் புரட்டாசி மாத நவராத்திரி, மகாசிவராத்திரி போன்ற காலங்களில் விசேட அபிஷேக, அலங்காரங்களும் சிறப்பு பூஜைகளும் நடைபெறுகின்றன.

நவராத்திரியில் நாயகியின் அலங்காரங்களும் பூஜைகளும் பார்க்க பல ஊர் மக்கள் இங்கு வந்து கூடித் தொழுவதைக் காணக் கண்கோடி வேண்டும்.

இனி கோயில் எழுந்த வரலாறு காண்போம்: ஆயிர வைசிய மஞ்சப் புத்தூர் செட்டியார் வம்ச முன்னோர்கள் வணிகம் மூலம் பொருளீட்டி கலை, கல்வி, ஆனமீகத் தொண்டாற்றியவர்கள் பலருண்டு. சுமார் ஐநூறு ஆண்டுகளுக்கு முன்னர் மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் சிறு வணிகர்கள் கூட்டங் கூட்டமாக பல ஊர்கட்குச் சென்று பொருளீட்டி வருவது மரபாகும்.

சிலர் வாணிப நோக்கில் சென்ற போது மாலை மயங்கி விண்மீன்கள் தோன்றத் தொடங்கியது. தங்குவதற்கு கிராமத்தின் ஒரு பகுதியில் ஏற்பாடு செய்து கொண்டனர். கள்ளர் பயம் மனத்தில் கவ்விய காரணத்தால், இயற்கை எழில் மிக்க தாவரங்கட்கிடையே கைப் பொருள்களை மறைத்து வைத்து இரவினைக் கழிக்க முற்பட்டனர்.

கைப் பொருளைக் காக்குமாறு, காமாட்சி தேவியை வழிபட்டு களைப்பால் உறங்க முற்பட்டனர் அதில் சிலர் விழி மூடாது வாழ்வு முறையை எண்ணி வருந்தியிருந்தனர்.

இளநங்கை ஒருவள் அவர்கள் முன்னே வரவும், முன் பின் கண்டறியாத அவளிடம் ஒருவர் ''நீயாரம்மா? உனக்கு என்ன வேண்டும்!'' என அன்புடன் கேட்டனர். 'என்னை அழைத்ததால் வந்தேன். அழைத்தவர்கட்கு ஓடி வந்து உதவுவது என் வேலை. என் பெயர் தான் ஆதி காமாட்சி'' என்றாள்.

கள்வர்களில் பெண்களும் இருப்பது இயற்கை தானே! இந்தக் கவலையால் நம்ப மறுத்தனர்.

''சற்று நேரம் முன்னே நீங்கள், 'அம்மா காமாட்சி! கள்வர் பயமின்றி காத்தருள்வாய் என்று கூறியதால் வந்தேன். ''இதோ உங்கள் வாணிபப் பொருள்களைப் பாருங்கள்' என்றாள்.

அனைத்துப் பொருள்களும் உப்புப் பொதிகளாக மாறியிருப்பதைக் கண்டு 'தாயே! பிழை பொறுப்பாய், கள்வர் பயத்தால், உன்னை யாரென்று உணரவில்லை. எம்மைக் காத்தருள்வாய்' என்று பணிந்தனர்.

உப்புப் பொதிகள் மீண்டும் வாணிபப் பொருள்களாக மாறின. ஆனந்தம் மிகவாக ''அம்மையே நீ எங்கிருக்கிறாய்? எப்போது பார்க்கலாம்? எமக்கு நீயே என்றும் துணையிருக்க வேண்டும்' என பக்திப் பெருக்கோடு கண் நீர் பெருக வேண்டினர்.

''குளக்கரையில் பசுமை மிக்க கொன்றை செடி மலர்களுடன் மணம் பரப்புமிடத்தில் நான் இருக்கிறேன். நாளைக் காலையில் வந்து

காணலாம்' என்று கூறினாள். அம்மட்டோ! அவ்விடத்தில் ஆதி காமாட்சி நாயகிக்குத் திருக்கோயில் அமைத்து வழிபடவும் ஆணை பிறப்பித்தாள்.

மறு நாட் காலை குளத்தின் கிழக்குக் கரையில் கொன்றைச் செடி மலர்களுடன் மணம் பரப்பிய இடம் கண்டனர். அங்குதான் அருள்மிகு அன்னை ஆதி காமாட்சிக்கு ஆலயம் அமைக்க உறுதிபூண்டனர். தங்கள் எதிரில் வந்து நின்று அருள் பாலித்ததாலும், ஓடோடி வந்து உதவும் செயலாலும் நின்ற திருக்கோல வடிவில், பாய்ந்தோடி வந்து பக்தருக்கு உதவும் நிலையில் உருவம் அமைந்தது.

அன்னையின் அருள் பெற்றவர் அமைத்த அச் சிறுகோயில் இன்று பெரிதாகவிரிந்துள்ளது. அன்னையின் அருள் அகிலமெங்கும் நிறைவாகி அன்பர்கள் நெஞ்சங்களில் இன்பங்களை இத மாக இணைக்கிறது.

திருமண பாக்கியம், குழந்தைப் பேறு; கல்வி அபிவிருத்தி, வணிக வளர்ச்சி போன்ற சகல சம்பத்துக்களையும் அருள் தரும் இரு விழிகளால் அளித்து வருகிறாள்.

'கா' என்பது கல்வி தரும் கலைவாணி என்றும் 'மா' என்பது தனம் தரும் இலட்சுமி என்றும், 'அட்சி' என்பது கண்களால் அருள்வது என்றும் ஆன்றோர்கள் கூறுவர்.

பலரின் அனுபவ வாயிலாக அன்னை ஆதி காமாட்சியின் அருளொடு பொருளும், ஆய கலையறிவும் பெற்றுச் சிறந்தவர்கள் சொல் வதைக் கேட்க இனந் தெரியாத இன்பம் பொங்குகிறது.

தாயவளின் கருணைக்குத் தரணியில் நிகரேது! தாய் என்றாலே தயை மிக்கவள் என்பது பொருள் அன்றோ! இது தவிர அறப் போது என்று வழங்கும் ஊரின் பெயர்க் காரண மும் அறிய முடிந்தது.

அரை நொடிப் பொழுதில் அருளும் அன்னை நின்றருள் பாலிக்கும் இடமான காரணத்தால் 'அரைப்பொழுது கோயில்' என்பது மருவி 'அறப்போது' என அழைக்கப் படுகிறது. இதுவும் ஒருவகையில் ஏற்ற மானதே. அறம் என்ற சொல்லுக்கு நீதி, நேர்மை, நியாயம், உண்மை, கருணை எனப் பல்வேறு பொருள்கள் பெற்றுள்ளதை அறி வோம். போது என்றால் தேன் மலராகும்.

மலரினும் மென்மையுடன் கருணைத் தேன் சொரியும் அறச்செல்வி அன்பர்க்கு விரைந்தோடி வந்து நலம் பயக்கும் திருக் கோயில் அமைத்து அருளாட்சி செய்வதால், அவள் குடி கொண்டு குடிகளைக் காக்கும் தன்மை கொண்ட காரணத்தால் 'அறப்போது' என்ற பெயர் பொருத்தமானதேயாகும். அன்னையவள் அருளை வேண்டுவோர் வேண் டியபடி நல்லவை நாளும் வந்து பொருந்தும் என்பதற்கு இதுவே ஓர் எடுத்துக்காட்டாகும்.

உற்சவ மூர்த்தங்கள் இல்லாத காரணத் தால் திருவீதி உலா மட்டும் நடைபெறுவ தில்லை. திரு அருளை ஓடிவந்தே அருளும் காரணத்தால் திருவீதி உலா தேவையில்லை என்பது அன்னையின் திருஉள்ளம் போலும்.

முன்னொரு சமயம் முதலை வாய்ப்பட்ட கஜேந்திரனைக் காக்க திருமால் விரைந்து வர எண்ணி கருடனைக் கையுள்பற்றி வந்தாராம், கருடன் மீது ஆரோகணித்து வந்தால்கூட சற்று காலதாமதமாகி விடும் என்றே கருடனைக் கைக்குள் கொண்டு தானேவிரைந்த தாக விரிவுரை அறிஞர் கூறுவர். அஃதே போல் அன்னை ஆதி காமாட்சி விரைந்து வந்து உதவும் நிலையில் இருப்பதைக் காணும்போது மனத்தில் பக்தி நிறைந்து அவள் சக்தியை நினைந்து திருவடிகளைத் தொழ நமது கரமும் இணைகின்றது.

பக்தி மார்க்கங்கள் ஒன்பதென முன் னோர் உரைத்தனர். அவையாவன:—(1) ஸ்வரணம்—இறைநாமம் கூறி பக்தி செய்தல் (2) கீர்த்தனம்—பக்தியால் பாடிப் பரவுதல் (3) ஸ்ரமணம்-எந்நேரமும் இறைநாமமே கூறி யிருத்தல் (4) பாதசேவனம்—திருவடிகளைப் போற்றிப் பணிதல் (5) அர்ச்சனம்-இறை யுருவை வழிபடுதல் (6) வந்தனம்—இறைக்கும் இறையடியார்கட்கும் முடிந்த போதெல்லாம் வணங்கி மகிழ்தல் (7) தாசியம்-திருத்தொண் டாற்றுவது (8) சக்யம்-உடல் உழைப்பை நல்கு வது (9) ஆத்ம நிவேதனம்—இதயத்தில் இறையை நிறுத்தி, இறைக்காக, இறைப் பணிக்காக உயிரையும் தரச் சித்தமாதல்.

இவ்வாறு கூறப்பட்டுள்ள ஒன்பது வகை பக்தி மார்க்கங்களும் மாந்தர் ஏற்று செயல் படக் கூடியதே! ஏதேனும் ஒரு மார்க்கத்தை நாமும் கைக் கொண்டு அன்னை ஆதி காமாட்சியை வழிபட்டால் இன்பம் தானே இணைந்திடும். இதிலேது ஐயம்?

மங்கலங்கள் நல்கும் மாங்காட்டு அன்னை போல், இங்கிருந்து அருள்கின்றாள் ஆதி காமாட்சி.

காமாட்சி, மீனாட்சி, விசாலாட்சி எனப் படும் தேவி சற்குண ரூபியாய் சகலருக்கும் சௌபாக்யம் தந்தருள்கின்றது கணகூடாகும்.

'தனந்தரும், கல்வி தரும்
ஒரு நாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவும் தரும்
நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாந்தரும்
அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள்
அபிராமி கடைக் கண்களே''

என்ற அபிராமி பட்டரின் கவிக்கேற்ப அருளும் அன்னை ஆதிகாமாட்சியின் திருவடிகளைத் தொழுது பக்திக்கேற்ற சக்தியினைப் பெற்று சௌபாக்ய வாழ்வு வாழ அவளே துணை செய்ய வேண்டும். அன்னையின் திருவடிகளே சரணம்,. வாழ்க வையம்.

விற்பிடித்த வேளைக்காரன்

திருப்புகழ் நாவலர் K. S. சுப்பிரமணியன்

கலியுக வரதனான கந்தப்பெருமான் ஒரு சிறந்த வேளைக்காரன். அவன் மேன்மை பொருந்திய குறத்தியின் வேளைக்காரன்' வையத்தோர் வாழ, தன் அன்பின் நிலையை விளக்க, ஆறுமுகத்துஐயனின் கைபிடித்து வாழக் கருத்துக் கொண்டு காதல் கொண்டாள் குறக்குடியிற் பிறந்த கொடியிடையாள் வள்ளி, அவளையேற்று மணக்க மனம் கொண்டான் மாலின மருகன். ஒரு விளையாட்டால் மணக்க எண்ணினான் வேலன். அவள் கைபிடிக்கும் வேளைக்காக எத்தனை உருவங்கள்? வேலன் வேடனானான்; வேங்கை மரமாகி நின்றான்: மூதிய சிவனடியாராகி முயன்றான். பிறகு தாய், தமர், நாய், பேய் முதலியன தூங்கும் நேரமறிந்து, தோழி வாயிற் கதவைத் திறந்து வள்ளல் கையிலே வள்ளியைக் கொடுக்ச அழைத்துச் சென்றான் ஆறுமுகத்தண்ணல். இதனை

''நாய்துயில் அறிந்து தங்கள் தமர்துயில்
அறிந்து துஞ்சா
நாய்துயில் அறிந்து மற்றந் நகர் துயில் அறிந்து
வெய்ய
பேய்துயில் கொள்ளும் யாமப் பெரும்
பொழுததனிற் பாங்கி
வாய்தலிற் கதவை நீக்கி வள்ளியைக் கொடு
சென்றுய்த்தான்.''

என்று கந்தபுராணச் செய்யுள் காட்டுகின்றது.

இவ்வாறு வள்ளியை மணக்க வேளை பார்த்து நின்ற வேளை ''மேதகு குறத்தி திரு வேளைக்காரன்'' என்று கொள்ளுதல் பொருந்தும். இனி வேளை முழுதும் வள்ளியுடனேயே கழிப்பவன் எனப் பொருள் கொள்ளுதலும் பொருந்தும். இவ்வேளைக்காரனின் பெருமைகள் யாவை? அருணகிரியார் கூறியிருக்கின்றாரே! பார்ப்போம்.

முருகனைச் சிறந்த பக்தியுடன் வழிபடும் அடியார்கள் பலர். ''இந்திரலோகம் ஆளும் அச்சுவை பெறினும் வேண்டேன்'' எனக் கூறிய ஆழ்வாரைப் போன்று முருகனை வழிபடுவதையே சிறந்த முக்தியெனக் கொண்டொழுகும் சிலர். வழிபாடன்றி, வாழ்நாளை கழிக்காத சிறந்த பக்தர்களிடத்தில் மிகுந்த அன்பு கொண்டு அவர்கள் வேண்டுவதையெல்லாம் அள்ளி அள்ளிக் கொடுப்பவன் ஆறுமுகப் பரமன்., அருணகிரியார் அத்தகைய முருகனை

''ஆனபய பக்தி வழிபாடு பெறு முக்தி
அதுவாக நிகழ்
பக்தசன வாரக்காரனும்.''

எனப் போற்றுகிறார்.

நாரதர் கொண்டு வந்த கனியின் காரணமாக ஏற்பட்ட போட்டியில் ஐயன் மயிலேறி அண்டத்தை ஒரு நொடியில் சுற்றிவந்த செய்தியும், அதன் காரணமும் 'செவ்வேளின் சீரடியில்' விளக்கப்பட்டிருக்கின்றன. மேலும் விநாயகர் யாவும் இறைவனுள் அடக்கம் என்னும் உண்மையைக் காட்ட இறைவனை வலம் வந்தும், முருகப்பிரான் இறைவன் எங்கும் உள்ளான் என்ற உண்மையைக்காட்ட உலகெலாம் வலம் வந்தும் விளக்கினர் என்பது புலப்படுமன்றோ? அருணகிரியார் முருகனை வேளைக்காரனாகப் பார்க்கும்பொழுது.

''ஆரமுதரித்த கனி காரணமுதற்றமையனாரு
டனுணக்கை பரிதீமைக்காரனும்
ஆகமம் விளைத்தகில லோகமும் நொடிப்பள
வில் ஆசையோடு சுற்றுமதி வேகக்காரனும்''

எனப் போற்றுகின்றார்.

உலகத்தோர் ஒரு சிலரின் பார்வைக்குப் பயப்படுவார்கள். ஏன்! அவர்களின் பார்வை தீமையைக் கொடுக்கும் என்பதற்காக, ஆனால் சிலரின் பார்வையில் சொல்லொணாச் சுகமும் இன்பமும், வேறு பலவும் கிடைக்கும். முருகனும் பார்வையுடையவன். ''என்னை ஒரு பார்வை பார்த்தான். அதனால் எனக்கு ஏற்பட்ட நன்மைகள் யாவை? என்னை மூடியிருந்த ஆணவ அழுக்கு நீங்கியது. அதனால் ஆவி விளக்கமுற்றதும் அனுபூதி பெற்றேன். உரையற்ற, உணர்வற்ற நிலையில் பெற்ற அனுபூதியில் ஐயனைக் கண்டேன். அடேயப்பா! எத்தனை சுகம்! பேறுகள்! இவைகள் அனைத்தும் அவருடைய ஒரு பார்வையிலே

நிகழ்ந்தன'' அப்படியா! ஆம்; அருணகிரியார் பாடுவதைப் பாருங்கள்:

''ஆணவ அழுக்கடையும் ஆவியை விளக்கி
அனுபூதி அடைவித்ததொரு பார்வைக்
காரனும்''

என்றல்லவா பாடுகின்றார்! அடடா! பார்வையின் பெருமைதான் என்னே! என்னே!

மிகுந்த துன்பம் அடைந்த சுரர்களைக் காப்பாற்றி அவர்களையும் அவர்களது நாட்டையும் காப்பாற்றிக் கொடுக்கும் சிறந்த ஆண்மைக்காரன் அவன். அவனைச் 'செந்தில் நகர் வாழும் ஆண்மைக்காரப் பெருமாளாகக் கண்ட அருணகிரியார் இங்கும் அவன் ஆண்மையைப் போற்றுகின்றார்.

அருணகிரியார் வாழ்க்கையில் துன்பம் பல அடைந்தார். துன்பத்தின் எல்லை மீறியது. நோய் வாட்டியது. மனம் தளர்ந்தார். உயிர் விட உறுதி கொண்டார். அருணைக் கோபுரத்தின் உச்சியிலேறிக் கீழே குதித்தார். கருணையுருவான கந்தப்பிரான் தன் பக்தன் இவ்வாறு உயிர்விடச் சம்மதிப்பானோ! கையிலேந்திக் காத்தான். அருணகிரியாரின் நோய் அகன்றது. சிந்தை தெளிந்தது. அருணகிரியாரை ''என் புகழ்பாடுக'' எனப் பணித்தான் பரமன். எவ்விதம் இயலும் என ஏங்கியது உள்ளம். அன்பனுக்குச் சந்தம் எடுத்துக் கொடுத்தான் சக்தியின் மைந்தன். ''முத்தைத்தரு'' என எடுத்துக் கொடுத்த அடியின் முறையிலேயே அமைந்தது அருமைத் திருப்புகழ். அருணகிரியார் தனது அன்பன் என்பதற்கு அடையாளமாக ஜபமாலை அளித்தான் முருகன். இதனை

''ஆடகவி சித்ரகன கோபுரமுகப்பில் அருணா
புரியில் நிற்கும்அடையாளக்காரனும்''

என்ற அடியுணர்த்துகின்றது.

ஆயிர முகங்களையுடைய நதியாகிய கங்கையின் பாலன், உள்ளன்போடு அவனை வழிபட்டு அவனுக்கு அடிமையானவர்கள் தொடுக்கும் கவிகளைத் தனக்கு உகந்த மாலையாக அணிபவன். ஆறுமுகங்களையுடையவனும், பன்னிரண்டு புயங்களையுடையவனும், முதலீறு இன்றி முருகன் என்னும் அரும் பெறல் மரபில் பெரும் பெயருடையோனாகவும் உள்ளவன். யான், எனது என்று சண்டையிடும் சமயத்தினர்கள் யாரும் உணர முடியாது அப்பாற்கும்அப்பாலாய் நிற்பவன். (நேர்மையுடையவன்) சீர்பாத வகுப்பிலும் முருகனின் பாதத்தை

''..பரசமய கலையாரவாரமற உரை அவிழ,
உணர்வவிழ
உளமவிழ உளபடியை உணருமவர்
அனுபூதியானதுவும்''

எனப் போற்றியிருப்பதைக் கருத்துள் கொள்ள வேண்டும்.

யாக்கை நிலையற்றது. செல்வமும் அத்தகையதே. இவ்வுலகில் எப்பொருளும் நிலையற்றது. மன்னா உலகத்து மன்னுதல் குறித்து இம்மானிடப் (அத்தகைய நிலையற்றதாகவுள்ள சூழ்நிலையில் நாம்) பிறவியெடுத்திருக்கின்றோம். இத்தகைய பிறவிக் கடலைக் கடக்க வேண்டுமே! யாது வேண்டும்? ஒரு ஓடமும் அதனை ஓட்டும் ஓடக்காரனும் வேண்டும். அவ்வோடக்காரன், நடுக்கடலிலே கலத்தை நிறுத்திக் 'காசு அதிகம் கொடுத்தால் கரை சேர்ப்பேன்: இல்லையென்றால் இங்கேயே கவிழ்த்து விடுவேன்'' என்று பயமுறுத்தும் கொடுமையுள்ளம் கொண்டவனாக இருத்தல் கூடாது. கருணையுள்ளம் உள்ளவனாக இருத்தல் வேண்டும். அவ்வாறு கருணையுள்ளம் கொண்டவன் கந்தப்பிரான். அவனை வணங்குவதால் அவன் ஏழு பிறவிக்கடலையும் கடக்க உதவும் ஓடக்காரன். 'கருணையோடக்காரன்' தானே. ஆம். எங்கே?

'யாதும் நிலையற்றலையு மேழு பிறவிக்கடலை
யேறவிடுநற்கருணை யோடக்காரனும்''

என்னும் அடி அறிவுறுத்துகிறது பாருங்கள்.

அவன் திருவேரகம் என்ற சுவாமிமலை, திருவிடைக்கழி, திருச்சிராப்பள்ளி, பழனி, திருத்தணி முதலிய பகுதிகளில் வாழ்ந்து அடியார்கட்கு அருள் சுரப்பவன், ஒருவன் செய்த நல்வினை தீவினைக்கேற்ப பிறப்பு கிடைக்கின்றது. ஆனால் முருகப்பிரானை வணங்குவதால் இவ்வுடற் சுமையையும் சிறையையும் தவிர்க்கலாம். ஆனால் அவன் அடியாரென்ற

காரணத்தால் எப்பொழுதும் அவன் பக்த னாக வாழலாம். அவ்வாறு நியாயம் வழங்கும் நியாயக்காரன் முருகன். இது

''ஏழையினி ரட்டை வினையாய தொருடற் சிறை
யிராமல் விடுவித்தருள் நியாயக்காரனும்''

என்பதால் இனிது விளங்குகின்றது.

அருணகிரியார் தலதரிசனங்களை முடித்துக் கொண்டு அருணை நகரையடைந்தார். அப் பொழுது, முன்பு இவருடன் வாதாடித்தோற்ற சம்பந்தாண்டான் இவரைச் சூழ்ச்சியால் கொல்ல எண்ணி, அரசனிடம் விண்ணுலகத்தி லிருந்து பாரிஜாதமலரைக் கொண்டுவர அருணகிரியாரை அனுப்பும்படி சொன்னான். சூதறியாத கொற்றவனும் அருணகிரியாரைப் பூக்கொண்டு வருமாறு பணித்தான். அருணகிரி யார் அருணபுரிக் கோபுரத்தின் உச்சியில் தன்னு டைய உடலை நிறுத்தி அங்கிறந்து கிடந்த ஒரு கிளியின் உடலில் உயிரை வைத்துக் கொண்டு புறப்பட்டார். அவர் சென்றவுடனே சம்பந்தாண்டான் அருணகிரியாரின் உடலைக் கொளுத்திவிட்டான். மலருடன் மீண்டுவந்த அருணகிரியார் விடயமறிந்து, ஐயனின் அருளை வியந்து, தன்னை உடற்சிறையினின்றும் நீக்கிக் கிளியாக்கியமைக்கு வணக்கஞ் செலுத்தி, தணிகை வந்து. முருகன் கையிலமர்ந்து வகுப்புப் பாடினார் என்ற வரலாறு மேலே குறிக்கப்பட்ட அடியில் ஒருவாறு குறிக்கப்படு கிறது. தன் பக்தன் என்பதற்காக மானிட உடலிலிருந்து நீக்கி கிளியாக்கி அவன் பெரு மையைப் பாடச்செய்த பரமனை நியாயக் காரன் என்று கூறுதல் நியாயந்தானே!

அன்னை பராசக்தியைத் தாய் என்றழைத்து அவள் மீதுள்ள அன்பால் உருகும் நேயக்காரன். குற்றமற்ற உள்ளத்துடன் அவனை வழிபடுபவர்களின் இருள்கெட அவர் களின் உள்ளத்தில் ஒளியாய் நின்று அருள்பவன் யாகம் முதலியன செய்யும் முனிவர்கட்குத் துணையாயிருந்து அவர்கள் யாகத்திற்கு ஒரு இடையூறுமின்றிக் காவல் காத்து நிற்பவன் கந்தக் கடவுள். இனிக் காவற்காரன் என்ப தற்கு அரசன் எனப் பொருள் கொள்ளுதலும் பொருந்தும்.

அருணகிரியார் 'தொழுது வழிபடும் அடியர் காவற்காரப் பெருமாளே'' எனக் கூறியிருப்பதாலும் வேளைக்காரனாக வர் ணிக்க ஆரம்பிக்கும்பொழுதே முக்தியையும் வேண்டாது அவனை வழிபடுதலையே முக்தி யாகக் கொண்டொழுகும் பக்தர்களின் வாரக் காரனாகக் காண்பதாலும் இங்குக் கூறப்பட்டி ருக்கும் யாகமும் அவனைத் தொழுதலேயெனக் கொள்ளுதல் பொருந்தும். ஆதலின் அவனைத் தொழுபவர்கட்கெல்லாம் எவ்வித இடையூறும் ஏற்படாது காவற்காத்து நிற்பவன் நிமல மூர்த்தியென்பது நிச்சயந்தானே!

மிகுந்த பலமான நான்கு தந்தங்களை யுடைய ஐராவதம் என்ற யானை மீதேறும்



தேவ சேனையின் மீது மிகுந்த ஆசையுடன் விளங்குபவன். இவையாவும்.

'யாமளை மணக்குமுக சாமளை மணிக்குயிலை
யாயென அழைத்துருகும் நேயக்காரனும்,
ஏதமற நிச்சயம னோலயவிளக்கொளியும்
யாக முநிவர்க்குரிய காவற்காரனும்,
ஈரிரும ருப்புடைய சோனைமத வெற்பிவரும்
யானையள விற்றுவளு மாசைக்காரனும்''

என்ற அடிகளால் உணர்த்தப்படுகின்றன.

முருகனுக்குகந்த மாலை கடம்பமாலை, அவன் பரமசிவனின் குழந்தைகளில் இளைய வன், அவன் வயதால் இளையவனானாலும் அறிவிற் பெரியவன். அருணகிரியார் அவனை,

''வையத்தையோடி ஐந்து கையற்கு வீசு தந்தை
மெய்யொத்த நீதிகண்ட பெரியோனே''

எனப் போற்றுகிறார். நீதிகண்ட பெரியோ னாகக் காண்கின்றார். எச்செய்கையில் குற்றம் கண்டு அதிலிருந்தும் எத்தகைய நீதியைக் கண் டான் குமரன்! தன் தந்தையின் செய்கையில் குற்றம் கண்டான். தான் ஒரே நொடியில் உலகத்தைச் சுற்றி வந்தும், தனக்குப் பழத் தைக் கொடுக்காமல் தன் தமையனுக்கு அளித்த தந்தையின் செய்கையில் குற்றம் கண் டான். அந்நீதியற்ற செய்கைக்குச் செய்ய வேண்டிய நீதியான செய்கை வெளியில் வந்து விடுவதே என்பதை யுணர்ந்து புறப்பட்டு விட் டான் அல்லவா! இது நீதி கண்ட செய்கை தானே! இவ்வாறு நீதி கண்டவன் வயதால் இளையவனாயிலும் அறிவில் பெரியவன் தானே! அவனை,

''ஏடவிழ் கடப்ப மலர் கூதள முடிக்கு
மிளையோனும் அறிவிற் பெரிய மேன்மைக்
காரனும்''
என்று பாடுகின்றார்.

ஐயன் அண்டத்தைச் சுற்றியதன் உட்கருத்து உலகத்தில் எங்கிருந்து அடியார் அழைத்தபோதிலும் உடனே அங்கு ஓடி அருள் கொடுப்பவன் என்பதைக் காட்டவேயாகும். பழனிக்கு வந்ததாற்றான் அவன் ஞானப் பிழம்பு என்பதைப் பக்தர்கள் உணர்ந்தனர். இன்றும் என்றும் அவனை வழிபட்டுப் பேறு பல அடைகின்றனர். அடைவர்.

வானவர்கள் மோன நிலையிலிருக்கும் சிவபிரானிடம் அலறினர். தங்களுக்குச் சூரர்களால் ஏற்பட்ட துன்பங்களை யெடுத்தோதினர். வழி வகுக்கவேண்டுமென்று வந்தித்தனர். அவர்களின் வேண்டுகோட்கிணங்கிச் சிவபிரான் ஐந்து முகத்தோடு அதோ முகமும்கொண்டார் இதனை,

''வெந்தருவர்க்காற்றாத, விண்ணோர்
முறைக்கிரங்கி
ஐந்து முகத்தோடு அதோ முகமும் தந்து
திருமுகங்கள் ஆறாகி''
எனக் கழறுகிறது கந்தர் கலிவெண்பா.

இவ்வாறு முகங்களினின்றும் தோன்றின ஆறு தீப்பொறிகள், அவைகள் சரவணப் பொய்கையில் விடப்பட்டன. அவையினின்றும் தோன்றியவரே முருகப்பிரான். ஆதலின் முருகப்பிரான் ஆறுமுகங்கள் உடையவராயிருப்பினும் ஐம்முகச்சிவனே ஆறுமுகப் பரம் பொருளாக வந்தான், ஆதலின் அவன் முகத்தில் மாயம் செய்பவன், அதன் பொருட்டே அவனை,

''வானவர் பொருட்டு மகவானது பொருட்டு
மலர்
வாவியிலுதித்த முகமாயக்காரனும்''
எனப் போற்றுகிறார் பெருந்தகை அருணகிரி.

மடு நடுவில் முதலையால் கவ்வப்பட்ட நிலையில் யானைகளுக்கு அரசனான கஜேந்திரன் பொறி கலங்கி, ஆதிமூலமேயென ஓலமிட்டான். ஓடிவந்து அருள் புரிந்தான் திருமால். அந்நிலையை

''போதகாதிபன் முதலை வாயிடைப்
பொறைதளர்ந்து முன்பொதுவிலே
நினைந்து
ஆதிமூலமே என்ன முன்வரும் ஆதிநாயகன்
அடி வணங்குவோம்.''
என்று போற்றுகிறார் புலவர் வில்லிபுத்தூரார்.

அவ்வாறு யானைக்கும் அருள்புரிந்த நாரணன் சந்தோசிக்கும் ஒப்பற்ற மருமகன், முருகன்.

படைப்புக் கடவுள் என்ற அகந்தை கொண்டான் பிரமன். ஏனைய வானோர் வணங்கியும் அவன் ஐயனை வணங்கவில்லை. கோபங்கொண்டான் குமரன். அவனை அழைத்துப் பிரணவத்தின் பொருளைக் கூறு மாறு கேட்டான். விழித்தான் பிரமன். உடனே கோபத்தில் அவன் தலையிற்குட்டி அவனைச் சிறையிட்டான் சண்முகத் தண்ணல். இது

''படைப்போன் அகந்தை யுரைப்ப மறையாதி
யெழுத்தொன்று
உகந்த பிரணவத்தின் உண்மை—புகன்றிலை
யால்
சிட்டித் தொழிலதனைச் செய்வதெங்ஙன்
என்று முன்னம்
குட்டிச் சிறையிருத்துங் கோமானே''

என்ற கந்தர் கலிவெண்பா அடிகளால் அழகாக விளக்கப்படுகின்றது. இத்தகைய கோபமுடையவனைத்தான் அருணகிரியாரும்,

''அயனைக்கறுவு கோபக்காரனும்''

எனப் போற்றுகிறார். அகந்தை உள்ளவர்களை ஐயன் தண்டிப்பான் என்பது இதனால் புலப்படுகின்றது.

''முருகா நீ வாழ்க, வாழ்க' என்று ஓதி, அவனை மறவாது வணங்குபவர்கட்குத் தாமரை மலர் போன்ற இரு பாதங்களை அருளால் அளிப்பவன். அவனுடைய பாதங்களால் பெரும்பேற்றைச் 'செவ்வேளின் சீரடியில்' கண்டோம். அவன் திரிகூடமலை (குற்றாலம்) கதிர்சாமம் முதலிய ஊர்களிலும் வீற்றருள் புரிபவன்.

வாள் போன்ற பற்களையுடைய வாசுகி என்னும் பாம்பைப் போரிலே வெகு சுலபமாக எடுத்து உதறும் சிறந்த வாசிக்காரன் முருகன்.

சக்கரவாளகிரியைத் தனது தாளால் பொருது, அது இடியும்படி போர் செய்து, வெற்றிமாலை புனைந்து, வெற்றிக் குறியாகிய கோழிக்கொடியை யுயர்த்திய பெருமையுடையவன் என்பது.

''வாளகிரியைத் தனது தாளிலிடியப்பொருது,
வாகைபுனை குக்குட பதாகைக் காரனும்'

என்பதால் விளங்குகின்றது.

பெருமைமிக்க முருகன் குற்றமற்ற உயிர்கட்கெல்லாம் உயிராகவும், உணர்வுக்கெல்லாம் உணர்வாகவும் வானில் அணுவுக்கு அணுவாகவும் இருப்பவன்.

அருணகிரியாருக்குப் பிறவிப் பயனால் ஏற்பட்ட நோயைத் தவிர்த்து ஒப்பற்ற திருப்புகழைப் பாட அடியெடுத்துக் கொடுத்த குருநாதனும் குமரப்பிரானே.

ஒருமுறை அருணகிரியார் திருச்செங்கோட்டிற்குச் சென்றிருந்தார். அங்கு ஐயனை 'சென்றேயிடங்கள் கந்தா எனும்போது செஞ்சேவல் கொண்டு வரவேணும்' என வேண்டினார். வேண்டுவோர் வேண்டுவதை அருளும் வேலன் அருணகிரியார் வேண்டியதை அருளாதிருப்பானா? அவர் தலயாத்திரையின்போது ஒருமுறை நடுக்காட்டில் அகப்பட்டுக் கொண்டார். வழி தெரியாமல் திகைத்து வள்ளி மணாளனை துதித்தார். உடனே வேல் தோன்றி வழி காட்டிச் சென்றது என்பதுவரலாற்றுக் குறிப்பு. காட்டிலே சகாயம் செய்வதற்காக நின்ற கந்தனைச் சகாயக்காரனாகவும் பாடி மகிழ்கின்றார்.

''வரதனை தவிர்த்த குருநாதனும்
வெளிப்படம
காடவியில் நிற்பதோர் சகாயக்காரனும்''.

என்ற அடி அதைத்தானே யுணர்த்துகின்றது!

மதுரையம்பதியில் சுந்தரபாண்டியனாயிருந்து அரசாண்ட சிவபிரானுக்கும், தடாதகைப் பிராட்டியாய் அவதரித்த அம்மைக்கும் உக்கிரகுமாரபாண்டியனாய் அவதரித்தவனும் அக்குமாரக் கடவுளே.

முருகன் மற்றொரு விநோதம் செய்தான். மதுரைப்பதியில் சங்கப்புலர்கள் நாற்பத்து ஒன்பது பேர்கள் இறையனார் அகப்பொருளுக்கு உரை கண்டனர். ஒவ்வொருவரும் தத்தம் உரையேசாலவும் நன்று எனப் பேசினர். வாதாடினர். சச்சரவு முற்றியது. முற்றிய சச்சரவு முடியும் வகை தெரியாது சங்கரனிடம் முறையிட்டனர். ஐயன் அவ்வூரில் வணிகர் குடியிலே தோன்றிய முருகனின் அவதாரமான உருத்திரசன்மன் என்ற ஊமைப்பிள்ளையை அழைத்துப் படித்துக் காட்டும்படி பணித்தார்

அவன் உடலில் மயிர் சிலிர்த்தல், கண்ணீர் வருதல், சிரக்கம்பம் செய்தல் போன்ற மெய்ப்பாடுகளால் உயர்ந்த பொருளை உணர முடியும் என உரைத்தார். அவ்விதமே உருத்திரசன்மன் அழைக்கப்பட்டான்; பலகையிலமர்த்தப் பட்டான். படித்துக் காட்டினர் புலவர், நக்கீரன் கபிலன், பாணன் முதலியோரின் உரைகளே முதன்மையானதென உணர்த்தினான். மகிழ்ந்தனர் புலவர். சச்சரவின்றி வாழ்ந்தனர். இது

'பல்காசொடு கடலிற்படு பவளஞ்சுடர் தாளம்
எல்லா நிறுத்(து)அளப்பானென இயல்வாணிகக் குமரன்
சொல்லாழமும் பொருளாழமும் துலைநா வெனத்தூக்க
நல்லாறரு புலவோர்களும் நட்டார் இகல் விட்டார்''

என்ற திருவிளையாடற் புராணச் செய்யுளால் செவ்வனே விளக்கப்பட்டுள்ளது.

இப்பெருமை மிக்க செயலையே அருணகிரியார்,

''ஈடாய ஊமர்போல வணிகரில்
ஊடாடி ஆலவாயின் விதிசெய்த
லீலா விசார தீர வரதா குருநாதா''

எனப்பாடுகிறார். இவ்வாறு விநோத வழியில் முத்தமிழின் சுவை தெரிந்து விதி செய்த வேலனை ''விநோதக்காரன்' எனக் கூறுவதில் எத்தனை பெருமிதம்!

இவ்வாறு முத்தமிழ் விநோதக்காரனாயிருப்பதால்தான் அவனை முத்தமிழால் வைதாரையும் வாழவைப்பவனாக வர்ணிக்கிறார் வாக்கின் மன்னன் அருணகிரி, அவனை முத்தமிழால் வைதவர் யார்? வள்ளி நாச்சியார். தினைப் புனத்திலே பல உருவங் கொண்டு அவள் கைபிடிக்க முயன்றபோது அவனை வைதாள். அவளுடைய சொற்களிலே இயற்றமிழ் இருந்தது. வைதபொழுது பேசிய குரலிலே இசைத்தமிழ் இருந்தது. காட்டிய சைகைகளில் நாடகத் தமிழ் இருந்தது. இவ்விதம் முத்தமிழாலும் வைத மங்கையாம் வள்ளியின் கைப்பிடித்து வாழச் செய்தான் வள்ளல் வேலன்.

அடேயப்பா! இவர் யார்? தெரியவில்லையா! சிவபிரான்: மிக அதிகமான நீண்ட சடையிருக்கின்றதே! அச்சடையிற்றான் எத்தனை விதமான பொருள்கள்! வெட்டிவேர், இளமதி, ஊமத்தம்பூ, ஆத்திப்பூ, கொன்றைப்பூ, ஆஹா. இவைகள் நிரம்பியிருப்பதால் என்ன அழகு, மணம்! இவ்வளவும் நிறைந்த பெருமையுடைய சிவபிரான் துதிக்கின்றார் முருகனை. ஏன்! அகந்தையால் அறிவழிந்த பிரமனைச் சிறையிட்டார் சிவகுமரன், அவனை விடுவிக்க வேண்டினார் வேணியம் பெருமான், பிரணவத்தின் பொருளைத் தனக்கும் உணர்த்துமாறு கேட்டார் உமாபதி. இருக்கும் முறையில் இருந்து கேட்டால் இயலும் என்றார் எயினர் கடவுள். அவ்விதமே நின்ற பிரானுக்கும் பிரணவத்தை யுணர்த்தினார் முருகன். சிவபிரான் கேட்கும் பேறுள்ள பெருமானை,

''வேரிமது மத்தமதி தாதகி கடுக்கைபுனை
வேணியர் துதிப்பதொரு கேள்விக்காரனும்''

எனப் பாடுகிறார் பக்தர் திலகம் அருணகிரி.

மலைபோன்ற தோளுடைய சூரன் அஞ்சி அலைகடலில் புகுந்ததையும், அவ்வேலைக்குள் வேல் புகுந்து, கடல் நீரை உறிஞ்சி துன்பப்படுத்தியதையும் மாமரமாய் நின்ற சூரனைக் கொன்ற பெருமையையும் ''வீரனின் வேலில்'' பார்த்தோம். அத்தகைய வேலினையுடைய வேலனை அருணகிரியார்.

''வேலைதுகள் பட்டுமலை சூரனுடல் பட்டுருவ
வேலையுற விட்டதனி வேலைக்காரனும்''

எனவும் துதிக்கின்றார்.

கார்த்திகைப் பெண்கள் அறுவரால் வளர்க்கப்பட்டவன்; சார்த்திகேயன் எனப் பெயர் பெற்றவன். அத்தகைய சார்த்திகேயனை வணங்குவதால் வீட்டின்பமே கிடைக்கும் பேற்றையளிக்கும் உதார குணமுடையவன். உத்தமன், உமை மைந்தன்; இமவான் மனைவியாகிய மேனை மதிக்கும் பேரன், சிறந்த வீரன், அரக்கர் குலத்தைச் சூறையாடுபவன். இவை,

''மீனுலவு கிர்த்திகைக் குமாரனும்
நினைக்குமவர்
வீடுபெற வைத்தருள் உதாரக்காரனும்
மேனை யரிவைக்குரிய பேரனும் மதித்த திறல்
வீரனும்
அரக்கர்குல சூறைக்காரனும்''

என்னும் அடிகளில் விளக்கப்படுகின்றன.

அவன் வேதியர்கட்குச் செல்வன் போன்றவன். திருமுருகாற்றுப்படையும் அவனை 'அந்தணர் வெறுக்கை'' என அழைக்கின்றது. அவ்வந்தணர்கள் அவனை எவ்வாறு வணங்குகின்றனர்?

பொழுதறிந்து, ஈரம் உலராத ஆடையை உடுத்திக் கொண்டு, உச்சிமேல் கைகுவித்து, ஆறெழுத்தை ஓதிஓதி வணங்குகின்றனர். யார் யார் அவனை அவ்விதம் வணங்குகின்றார்களோ அவர்களெல்லாம் அந்தணர்கள், அவர்கட்கெல்லாம் செல்வம் போன்றவன செவ்வேள்.

அவன் அநாதியானவன்; விசாகன் எனப் பேருடையவன் பல ரூபங்கள் உடையவன். இவையாவும்.

''வேதியர்வெ றுக்கையும் அநாதிபர வஸ்துவும்
விசாகனும்வி கற்பவெகு ரூபக்காரனும்''

என்னும் அடியில் அறிவுறுத்தப்படுகின்றன.

அவன் கொண்ட வெகு ரூபங்கள் குமரனானது, வேங்கையானது, கிழவனானது முதலியன.

தினைப்புனத்தில் தினைகாத்த வேட்டுவச் சிறுமியாம் வள்ளி, வேலனை மணக்க எண்ணி அழைத்தாள். அவள் நிலையுணர்ந்த நாரதர் நம் பெருமானுக்கு உணர்த்தினார். நாரதர் உணர்த்திய சகாய மொழியில் நாணமழிந்தான் நம்பி. நாயகியாம் வள்ளியின் புனம் நோக்கி நடந்தான். அவன் பாதம் காட்டில் நடந்த பெருமையைச் சீர்பாத வகுப்பு.

''எறுழிபுலி கரடியரி கரிகடமை வருடையுழை
இரலைமரை இரவுபகலி ரைதேர்
கடாடவியில்
எயினரிடு மிதணதனி விளகுதினை கிளிகடிய
இனிது பயில் சிறுமிவளர் புனமீது
லாவுவதும்''

என்று சொல்லுகின்றது. அவன் நடந்தது எவ்விதம்? இதோ கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.

''மருவு தண்டைகின் கிணிபரி புரமிவை
கலகலன்கலின் கலினென இருசரண்
மலர்கள் நொந்து நொந்தடியிட
வடிவமு மிகவேறாய்''

எனப் போற்றுகிறது பெருமைமிகு திருப்புகழ்,

அவன் வடிவமும் வேறானான்; அப்படியா! என்ன வடிவம்? அவன் கொண்ட வடிவத்தை விளக்குகிறது பாருங்கள், கீழ் வரும் கந்த புராணச் செய்யுள்.

''காலிற் கட்டிய கழலன் கச்சினன்
மாலைத்தோளினன் வரிவில் வாளியன்
நீலக்குஞ்சியன் நெடியன் வேட்டுவக்
கோலத்தைக் கொடு குமரன் தோன்றி
னான்''

இவ்வாறு விற்பிடித்த வேடுவனாக வேட்டுவப் பெண் முன் நின்றான். அவளை ஒரு வார்த்தையாகிலும் பேச மாட்டாயா எனக் கெஞ்சிக் கேட்டான். புன்முறுவலாகினும் புரியமாட்டாயா என்று மன்றாடினான். ஆறு முகத்துப் பரமனிடம் அலையாத உறுதி கொண்ட அவ்வணங்கு வேட்டுவ உருவத்தில் வேண்டி நின்ற வேலனிடம் பேசவில்லை. உலையிலிடப்பட்ட மெழுகு போல உருகினான் உமைமைந்தன், என்ன? ஒரு கடவுளா இவ் விதமெல்லாம் அல்லற்படுகின்றது என்று எண்ணுகின்றதே அகந்தையுடன் கூடிய அறிவு! மானுடப்பெண் ஆகிய வள்ளிமுன் நிற்கிறான். அவளைச் சோதிக்க வேண்டும். அவனும் மோகங்கொண்டு உழலுபவன் போல நடிக்கத் தானே வேண்டும். மேலும் அவளை ஆடலால் மணக்க எண்ணிய மாலின் மருகனுக்கு இவையெல்லாம் விளையாடல்கள் தானே! மேலும் ஆண்டவனருள் இவ்விதமெல்லாம் விளையாடவில்லையென்றால் அவனடியார்கள் அவனை

ஆற்றில் இறங்கும் கள்ளழகர்

யெவ்விதம் பாடிப் பரவி அவன் பெருமையை யுணர முடியும்?

எவ்வளவு எடுத்தோதியும் எயினர் மகள் ஏறெடுத்தும் பார்க்கவில்லை. வருத்தம் அடைந்தான்.

விற்பிடித்த வேடுவன் வியாகுல மனத்தோடு திரும்புகின்றான் பாருங்கள்.

''வேடுவர் புனத்திலுரு மாறிமுனி சொற்படிவி
யாகுல மனத்தினொடு போம் விற்காரனும்'

என விரித்துப் பாடுகின்றது வகுப்பு.

இவ்வாறு தினைப்புனத்தில் ஓவியம் போன்ற அழகுடைய குறப்பெண் முன் நின்று திருவிளையாடல் பல புரிந்து வேளையறிந்து அவள் கைபிடித்துக் காத்த கந்தனை நாமும் வணங்குவோமானால் அவன் நமக்குச் சிறந்த பாதுகாப்பாளனாக இருக்க, நாம் நலம் பலவும்

பெற்று நல்வாழ்வு வாழ, அருள் புரிவான் கருணை வள்ளல்.

ஒன்பது கோள்களின் தீயசக்திகளால் மனிதன் அல்லற்படாமலிருக்க இந்த வகுப்பை தினமும் ஓதி வரலாம். அத்தகைய மந்திர சக்தியுள்ள வகுப்பு இது. படியுங்கள் இதனை; பலனைச் சொல்லுங்கள்.

திருவேளைக்காரன் வகுப்பு

ஆனபய பத்திவழி பாடுபெறு முக்தியது
வாகநிகழ் பத்தசன வாரக்காரனும்

ஆரமது ரித்தகனி காரணமு தற்றமைய
னாருடனு ணக்கைபரி தீமைக்காரனும்

ஆகமம்விளை த்தகில லோகமு நொடிப்பளவி
லாசையொடு சுற்றுமதி வேகக்காரனும்

ஆணவ முக்கடையு மாவியை விளக்கியநு
பூதியடை வித்ததொரு பார்வைக்காரனும்

ஆடலைவு பட்டமரர் நாடதுபி ழைக்கஅம
ராவதிபுரக்கும் அடல் ஆண்மைக்காரனு

ஆடகவி சித்ரகன கோபுரமு கப்பிலரு
ணாபுரியி னிற்குமடை யாளக் காரனும்

ஆயிரமு கத்துநதி பாலனும அகத்தடிமை
யானவர்தொ டுத்தகவி மாலைக் காரனும்

ஆறுமுக வித்தகனு மாறிருபுயத்தரசு
மாதிமுடி வற்றதிரு நாமக் காரனும்

யானெனதெனக்கருவு மீனசம யத்தெவரும்
யாருமுணர் தற்கரிய நேர்மைக்காரனும்

யாதுநிலை யற்றலையு மேழுபிற விக்கடலை
வேறவிடு நற்கருணை யோடக் காரனும்

ஏரகமி டைக்கழிசி ராமலைதி ருப்பழனி
யேரணிசெருத்தணியில் வாசக் காரனும்

ஏழையினிரட்டைவினை யாயதொ ருடற்
சிறையி
ராமல்விடு வித்தருணி யாயக் காரனும்

யாமளைம ணக்குமுக சாமளைம ணிக்குயிலை
யாயெனவ ழைத்துருகு நேயக்காரனும்

ஏதமற நிச்சயம னோலயவி ளக்கொளியும்
யாகமுநி வர்க்குரிய காவற் காரனும்

ஈரிரும குப்புடைய சோனைமத வெற்பிவரும்
யானையள விற்றுவளும் ஆசைக் காரனும்

ஏடவிழ்க டப்பமலர் கூதளமு டிக்குமிளை
யோனுமறி விற்பெரிய மேன்மைக்காரனும்

வானவர் பொருட்டுமக வானதுபொருட்டுமலர்
வாவியிலு தித்தமுக மாயக் காரனும்

ஆணவம் வேண்டாம்!

இன்னம் பிறக்க இசைவையோ நெஞ்சமே
மன்னர்இவர் என்றுஇருந்து வாழ்ந்தவரை முன்னம்
எரிந்தகட்டை மீதில் இணைக்கோ வணத்தை
உரிந்துஉருட்டிப் போட்டது கண்டு.

—பட்டினத்தார்

வாரணப திக்குதவு நாரணனு வக்குமரு
மானுமய னைக்கறுவு கோபக் காரனும்

வாழியென நித்தமற வாதுபரற விற்சரண
வாரிசம ளிக்குமுப காரக் காரனும்

மாடமதில் சுற்றியத்ரி கூடகிரி யிற்கதிர் செய்
மாநகரி யிற்கடவு ளாயக் காரனும்

வாளெயிற துற்றபகு வாய்தொறுநெ
ருப்புமிழும்
வாசுகியெ டுத்துதறும் வாசிக் காரனும்

வாளகிரி யைத்தனது தாளிலிடி யப்பொருது
வாகைபுனை குக்குடப தாகைக் காரனும்

மாசிலுயி ருக்குயிரு மாசிலுணர் வுக்குணர்வும்
வானிலணு வுக்கணுவு பாயக் காரனும்

வாதனைத விர்த்தகுரு நாதனும்வெ ளிப்படம
காடவியி னிற்பதொர்ச காயக் காரனும்

மீனவனு மிக்கபல வோருமுறை பொற்பலகை
மீதமர்த மிழ்த்ரயவி நோதக் காரனும்

வேரிபது மத்தமதி தாகிசு டுக்கைபுனை
வேணியர்து திருப்பதொரு கேள்விக்காரனும்

வேலைதுகள் பட்டுமலை சூரனுடல் பட்டுருவ
வேலையுற விட்டதனி வேலைக் காரனும்

மீதுலவு கிர்த்திகைகு மாரனுநி னைக்குமவர்
வீடுபெற வைத்தருளு தாரக் காரனும்

மேனையரி வைக்குரிய பேரனும தித்தநிறல்
வீரனும ரக்கர்குல சூரைக் காரனும்

வேதியர்வெறுக்கையும் அநாதிபர வஸ்துவும்வி
சாகனும்வி கற்பவெகு ரூபக் காரனும்

வேடுவர்புனத்திலுரு மாறிமுனி சொற்படிவி
யாகுலம னத்தினொடு போம்விற் காரனும்

மேவியபு னத்திதனி லோவியமெனத்திகழும்
மேதகு குறத்திதிரு வேளைக்காரனே!

— — — —



திருக்கழுக்குன்றத் திருத்தலப்பெருமை

பி. வி. கிரி

திருக்கழுக்குன்றத்தில் பன்னிரண்டு தீர்த்தங்கள் உள்ளன. அத்தீர்த்தங்களுள் மிகப் பரிசுத்தமானதும், நன்னீரையுடையதுமான புனிததீர்த்தம் 'சங்கு தீர்த்தம்' எனப் பெரியோர்கள் கூறுகின்றனர்.

'சங்கு தீர்த்தம்' எனும் திருக்குளம் 760 அடி நீளமும் 560 அடி அகலமும் கொண்டது. இதற்கு எதிரில் விநாயகர் கோயில் ஒன்று உள்ளது. மத்தியில் அழகிய நீராழி மண்டபம் அமைந்திருக்கின்றது. மலையிலிருந்து விழும் அருவியே இத்தீர்த்தமெனக் கூறுவர்.

என்றும் பதினாறு வயது பெற்ற மார்க்கண்டேயர் இறைவனை வணங்க இங்கு வருகை தந்தபோது, இந்தத் தீர்த்தக்கரையில் தான் பூசைகள் செய்தாராம். பூசையின்போது அபிஷேகம் செய்ய சங்கு இல்லாததால் அவர் தமது யோக சக்தியினால், இக்குளத்தின் அடியிலிருந்து ஒரு சங்கை எடுத்துக் கொண்டார் என்று புராணம் கூறுகின்றது. இந்த இடத்தில் மார்க்கண்டேசுவர் ஆலயம் ஒன்றும் உள்ளது.

மார்க்கண்டேயர் இவ்விடத்தைவிட்டுப் போகும்போது, 'இங்கு வரும் பக்தர்களுக்கெல்லாம், தமக்குக் கிடைத்தது போன்று சங்குகள் உண்டாக வேண்டும்' என்று இறைவனை வேண்டிக் கொண்டாராம். அவரது வேண்டுகோள் வீணாகப் போய்விடவில்லை. சில சமயங்களில், அக்குளத்தில் சங்குகள் மிதந்து கொண்டிருப்பதைப் பார்க்கலாம்.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை, இங்கே 'சங்கு தீர்த்த புஷ்கரம்' என்னும் திருவிழா நடைபெறுகின்றது. புஷ்கரம் என்றால் முழக்கம், பேரொலி, நிறைவு என்று பொருள்; கன்னியா ராசியில் குரு வரும்நாளில் இந்த அற்புதம் இங்கே நடைபெறுகின்றது. அவ்வமயம் மூன்றரைக்கோடித் தீர்த்தங்கள் இங்கு வந்து சங்கமமாகின்றன என்பது நம்பிக்கை. அதாவது பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை எல்லா நதித்தேவதைகளும் இங்கு வந்து கூடுவதாகக் கருதப்படுகின்றது.

மார்க்கண்டேயருக்காக, இந்தத் தீர்த்தத்தில் சங்கு தோன்றியதால் 'சங்கு தீர்த்தம்' என்னும் பெயர் வழங்கலாயிற்று. மார்க்கண்டேயர் தரிசித்த சிவலிங்கப் பெருமான், மார்க்கண்டேசுவரர் அல்லது தீர்த்தேசுவரர்என்னும் திருநாமத்தோடு இக்குளக்கரையில் எழுந்தருளியிருப்பதை இன்றும் பார்க்கலாம்.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கோர் முறை 'கும்பமேளா' நடப்பது போன்று இந்திருத்தலத்திலும், 'சங்கு தீர்த்த புஷ்கர மேளா' நடைபெற்று வருகின்றது. அதாவது கும்பகோணம் 'மகாமகம்' போன்று இங்கும் இத்திருவிழா நடைபெறுகின்றது. இவ்விழா மிகவும் சிறப்பு வாய்ந்தது. தமிழகம் தவிர, வடநாட்டிலிருந்தும் இலட்சக்கணக்கான பக்தர்கள் இந்த நாளில் வருகின்றார்கள். சங்கு தீர்த்தக்குளத்தில் நீராடுகின்றார்கள். இக்குளத்தில் நீராடினால், புண்ணியம் கிடைக்கும் என்பது ஆன்றோரின் அனுபவ வாக்கு.

இவ்வாறு பன்னிரண்டு ஆண்டுகளுக்கோர் முறை பிறந்த சங்குகளெல்லாம் இங்கு பத்திரமாக வைக்கப்பட்டுள்ளன. *1908, 1919*ஆண்டுகளில் சங்குகள் பிறந்திருக்கின்றன. பிறகு *1921, 1933, 1944, 1956, 1968, 1980, 1992* ஆகிய ஆண்டுகளில் சங்குதீர்த்தப் புஷ்கர மேளா-லட்சத் தீபத் திருவிழாக்கள் நடந்திருக்கின்றன.

சங்கு பிறக்கும் முதல் நாளில், திருக்குளத்தின் நடுவில் சிறு கொந்தளிப்பு தென்படும். மறுநாள் சங்கு பிறந்ததும் ஓங்கார ஒலி முழங்கும். சங்கு நீரில் மிதக்கும். உடனே அந்தச் சங்கை எடுத்து, மங்கல இசையுடன் ஊர்வலமாக வந்து, இறைவன் திருமுன் பூசைக்கு வைப்பார்கள்.

சங்குதீர்த்தம், மலைமீதுள்ள மூலிகைகளைத் தழுவிக் கொண்டு இத்திருக்குளத்தை அடைகின்றது. இப்புனித நீரில் தாமிரச் சத்து அடங்கியிருக்கின்றது என்றும் கூறுகின்றனர்.

நோயுற்றவர்கள் இத்தலத்தில் 48 நாட்கள் தங்கியிருந்து, இப்புனித குளத்தில் நீராடி இறைவனை வழிப்பட்டு வந்தால்,

கொடிய நோய்களின்றும் நீங்கி முழுநலம் பெறுவர் என்பது பலருடைய நம்பிக்கையாக இருந்து வருகின்றது.

1992-இல் நடந்த சங்கு தீர்த்தப் புஷ்கர மேளா பற்றிய செய்தி, 'மாலை முரசு' 4-9-92 அன்று வெளிவந்தது. அந்த செய்தி வருமாறு:

''திருக்கழுக்குன்றம் வேதகிரீசுவரர் கோவில் சங்கு தீர்த்த குளத்தில் ஆயிரக்கணக்கான பெண்கள் உள்பட பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் இன்று நீராடினார்கள்

''திருக்கழுக்குன்றத்தில் அருள்மிகு வேதகிரீசுவரர் என்ற புராதனத் திருக்கோவில் உள்ளது. புகழ்பெற்ற இக்கோவிலில் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை சங்கு தீர்த்த புஷ்கர மேளா, லட்சத் தீபத்திருவிழா நடப்பது வழக்கம். வடநாட்டில் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை கும்பமேளா நடப்பதுபோல், இக்கோவிலிலும் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை சங்கு தீர்த்த புஷ்கர மேளா நடக்கிறது. கும்பகோண மகாமகம் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடப்பது போல், திருக்கழுக்குன்றம் வேதகிரீசுவரர் கோவிலில் சங்கு தீர்த்த புஷ்கர மேளா திருவிழாவும் பிரசித்தி பெற்ற விழாவாகும்.

குருபகவான் சிம்ம ராசியில் இருந்து கன்னி ராசிக்கு இன்று காலை சரியாக 9.53 மணிக்கு பிரவேசித்தார். இந்த நேரம் மிகவும் புண்ணிய நேரமாகும். இந்த நேரத்தில்தான், வேதகிரீசுவரர் கோவில் புஷ்கர மேளா திருக்குளத்தில், இந்நதியாவில் ஓடும் அனைத்துப் புண்ணிய நதிகளும் சங்கமமாகி ஊற்று எடுக்கும் எனபது ஐதீகம்:

''12 ஆண்டுகளுக்கு ஒருமுறை இதே நாளில் இது நிகழும் என்பதால், இந்த நாள் புண்ணிய நாளாகக் கருதப்படுகிறது. அதே சமயம், குருபகவான் சிம்மராசியில் இருந்து கன்னி ராசிக்குப் பிரவேசிக்கும் நேரத்தில், புஷ்கர மேளா குளத்தில் புனித நீராடினால் புண்ணியம் கிடைக்கும் என்பது பெரியோர்வாக்கு.

ஆகவே, இன்று காலை சரியாக 9.53 மணிக்கு ஆயிரக்கணக்கான பெண்கள் உள்பட பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வேதகிரீசுவரர் கோவில் குளத்தில் புனித நீராடினார்கள்.

''சுற்றுப்புறக் கிராமத்தில் இருந்து வந்திருந்த பெண்களும் புனித நீராடினார்கள். குளத்தில் பக்தர்கள் இறங்கிக் குளிப்பதற்கு வசதியாக, தக்க பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தன. வேதகிரீசுவரர் திருவீதி உலா வந்த பின்னர், சங்குதீர்த்தக்குளக்கரை யாகசாலை முன்பாக நிறுத்தப்பட்டார்.

''சரியாகக் காலை 9.53 மணி நெருங்கியதும் தாரை தப்பட்டை, மேள வாத்தியங்கள் முழங்கின. உடனே பெண்கள் மற்றும் பக்தர்கள் குளத்தில் இறங்கிப் புனித நீராடினார்கள்'.

''இன்று மாலை 6 மணிக்கு லட்ச தீபத் திருவிழா நடக்கிறது. ஒரு லட்சம் பக்தர்கள் அகல் விளக்கு ஏற்றி வைக்கிறார்கள். கோவிலின் உள்ளே உள்ள குளத்தைச் சுற்றிய படிக்கட்டுகள், மலை மீதும், சங்கு தீர்த்தக் குளத்தைச் சுற்றியும் பக்தர்களால் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட அகல் விளக்குகள் ஏற்றி வைக்கப்படுகின்றன.

''மாலையில் நடைபெறும் லட்ச தீபத் திருவிழாவில், ஒரு லட்சத்து 35 ஆயிரம் அகல் விளக்குகள் ஏற்றிவைக்கப்படுகின்றன. இதற்கு 12 பேரல் எண்ணெய், 200 கிலோ பஞ்சு திரி ஆகியவை தயார் நிலையில் வைக்கப்பட்டு உள்ளன. மலைக் கோவில், மலைப் படிக்கட்டுகள், சங்கு தீர்த்தக் குளப் படிக்கட்டுகள் மலை அடிவாரக் கோவில் ஆகிய இடங்களில் விளக்குகள் ஏற்றி வைக்கப்படுகின்றன. இதற்காக ஊர்க்காவல் படை மற்றும் தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்த 2 ஆயிரம் பேர் நியமிக்கப்பட்டு உள்ளனர்.

இச்செய்தியை இப்போது படித்தாலும் நம்மெய் சிலிர்க்கின்றதே. அவ்விழாவின்போது நேரில் சென்று நாம் பார்த்தால் எப்படி இருக்கும்!



அயன்புரத்தில் ஒரு அய்யன்

சீ. வசந்தி,

கல்வெட்டாய்வாளர்,
தொல்பொருள் ஆய்வுத்துறை.

தர்மமிகு சென்னையைச் சுற்றியுள்ள இடங்களான பாடி, வில்லிவாக்கம், திருவான்மியூர், திருவொற்றியூர், திருமுல்லைவாயில் ஆகிய இடங்களில் பழமையும், வரலாற்றுச் சிறப்பும் மிக்க கோயில்கள் பல உள்ளன. அவ்வரிசையில் அயன்புரத்தில் உள்ள பரசுராமலிங்கேஸ்வரர் கோயிலும் இடம் பெறுகின்றது. இக்கோயிலில் அண்மையில்கண்டுபிடிக்கப்பட்ட கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டு இதனை உறுதி செய்கிறது.

தற்போது அயனாவரம் என்று சென்னை மாநகர மக்களால் வழங்கப்படும் இவ்விடம் பண்டைய காலத்தில் அயன்புரம் என கி.பி. 14-ஆம் நூற்றாண்டு வரை வழங்கப்பட்டது. இது சயங்கொண்ட சோழ மண்டலத்தில், விக்கிரம சோழ வள நாட்டில்,துடர் முள்ளி நாட்டில் அமைந்திருந்தது. கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் அயனாவரமென்றில் சொத்திரிய கிராமம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. வேதத்திற்கே வித்தானவர் பிரம்மா. அவரையே வேதத்தின் பொருளை கூறவில்லை எனச் சிறையிலிட்டார் முருகன். தம்மை விடுவிக்க சிவபெருமானை வேண்டி பூஜித்த தலமாக உள்ளதால் இவ்வூர் அயன்புரம் என வழங்கப்பட்டிருக்க வேண்டும். இதற்குச் சான்றாக பிரம்ம சாஸ்தா எனப்படும் சுப்பிரமணியர் சன்னதியும் இக்கோயிலில் உள்ளது. மகாவிஷ்ணுவின் அவதாரங்களில் ஒருவரான பரசுராமரும் வழிபட்டதால் இக்கோயில் இறைவன் பரசு ராமலிங்கேஸ்வரர் என வழங்கப்படுகின்றார்.

இவ்வூரில், சிவன் கோயிலுக்கு அருகிலேயே கரிய மாணிக்கப் பெருமாள் எனப்படும் பெருமாள் கோயிலும் உள்ளது. இவ்விரண்டு கோயில்களிலும் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. பரசுராமலிங்கேஸ்வரர் கோயிலில் கருவறை நிலையில் வடபுறத்தில் உள்ள கல்வெட்டு கி. பி. 13 - ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த எழுத்தமைதியுடன் காணப்படுகிறது. 'அமுது அடுவான் சூரைக் குடையான் நயினான்'' என்று கல்வெட்டு வாசகம் உள்ளது. இதன் மூலம் அடுவான் அதாவது சமையல் செய்யும் ஒருவன் பெயர் சூரைக் குடையான் நயினான் என அறியப்படுகிறது. இக்கல்வெட்டு கருவறை நிலையில் காணப்படுவதால் கி'பி 13-ஆம் நூற்றாண்டில் இக்கோயிலை சூரைக் குடையான் நயினான் என்பவன் புதுப்பித்துக் கட்டியோ அல்லது இக்கல்வெட்டு உள்ள நிலை கற்பலகை வேறு இடத்திலிருந்து இங்கு கொண்டு வரப்பட்டதாகவும் இருக்கலாம். கரிய மாணிக்கப் பெருமாள் கோயிலில் உள்ள கல்வெட்டுக்களில் நிலத்தினை அளக்கப் பயன்படும் அளவுகளும் இறைவனுக்கு விடியற்காலை பூஜைக்கும் உச்சிப் பூஜைக்கும் அளிக்கப்பட்ட கொடைபற்றிய செய்தியும் காணப்படுகிறது. இதில் இறைவன் பெயர் குறிப்பிடாமையால் இவை இக்கோயிலைச் சார்ந்ததுதானா என என்னவும் தோன்றுகிறது. ஏனெனில், இக்கல்வெட்டுக்கள் தனித்தனித் கல்லில் காணப்படுகின்றன. இவை மிக இடிந்த நிலையிலிருந்து கோயிலிலிருந்து இம்மண்டபம் கட்டப்பட்டபோது இங்கு கொண்டு வரப்பட்டும் இருக்கக்கூடும்.

கட்டிட அமைப்பு இக்கோயில் கருவறை அடித்தளத்திலிருந்து உச்சி வரையில் வடமொழியில் 'கஜபிரஷ்டம்' எனவும் 'தூங்கானை மாடம்' எனவும் வழங்கப்படும் கட்டிட அமைப்பினைக் கொண்டுள்ளது. அதாவது யானை ஒன்றுபடுத்திருப்பது போன்ற தோற்றம் ஆகும். இதே போன்ற கட்டிட அமைப்புடைய கோயில்கள் வில்லிவாக்கம், பாடி (திருவலிதாயம்), திருமுல்லைவாயில், திருவொற்றியூர் ஆகிய இடங்களிலும் காணப்படுகின்றன. இவை சோழ மன்னன் முதலாம் இராசேந்திரன்

(கி.பி. 1012-1044) காலத்தில் கட்டப்பட்டவை ஆகும். எனவே, அயன்புரச் சிவன் கோயிலும், இக்காலக் கட்டத்தில் கட்டப்பட்டிருக்கலாம் என்றகருத்திற்கு இடமேற்படுகிறது. ஆனால்,இதற்குத்தக்க சான்றுகள் ஏதுமில்லை.

கருவறை தெற்கு தேவ கோட்டத்தில் நர்த்தன கணபதியும் தட்சிணா மூர்த்தியும் வடக்கு தேவ கோட்டத்தில் பிரம்மாவும், துர்க்கையும், மேற்கில் விஷ்ணுவும் உள்ளனர்.

''சுந்தரி எந்தை துணைவி என் பாசத்
தொடரை எல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தினாள்
மகிடன் தலைமேல்
அந்தரி நீலி அழியாத கன்னிகை
ஆரணத் தோன்
கந்தரி கைத்தலத்தாள் மலர்த்தாள்
என் கருத்தனவே.''

எனஅபிராமிபட்டர்பாடிப்போற்றியதேவியான துர்க்கையின் மேல் கரங்களில் சங்கு, சக்கரமும் கீழ்கரங்கள் அபயம் மற்றும் தொடை மீது இருத்தியும் காணப்படுகிறாள். இத்துர்க்கையம்மன் கி. பி. 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கலைப்பாணியை ஒத்துள்ளது.

சுப்பிரமணியர் அல்லது பிரம்ம சாஸ்தா

முருகப்பெருமான் தனக்கு எல்லாம் தெரியும் என்ற அகந்தையில் இருந்த பிரம்மாவிடம் வேதத்தினைப் பற்றி அறிய முற்பட்டார். அவரது வினாவிற்கு பிரம்மாவால் விடை கூற இயலாததால் அவரைச் சிறையிலிட்டான் குகன். அத்துடன் இல்லாமல் அவரது கமண்டலத்தினையும். அட்ச மாலையையும்கூட தன தாக்கிப் பறித்துக்கொண்டான். இந்த கோலத்தில் உள்ள சுப்பிரமணியரது உருவமே இங்கு காணப்படுகிறது. முருகனுக்கே உரிய கன்னி மாலை சூடிய திருநெற்றியுடன் உடலில் வீரர்களுக்கே உரிய வீரச்சங்கிலி அணிந்துள்ளார். கழுத்தில் அட்டிகை போன்ற அணிகலனும் காதில் பத்ர குண்டலங்கள் அணி செய்கின்றன. இச்சிற்பம் கி.பி. 8 அல்லது 9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கலைப்பாணியை ஒத்துள்ளது. இக்கோயிலில் உள்ள பைரவர் சன்னதியில் பைரவர் மேல் கரங்களில் உடுக்கையும், பாசமும் கீழ்க்கரங்களில் சூலமும், கபாலமும், தாங்கிக் காட்சியளிக்கின்றார். மேலும் சூரியன் சந்திரன், நவக்கிரகசன்னதிகளும் இங்குள்ளன. இங்கு உற்சவ மூர்த்திகளின் செப்புத் மேனிகளும் நடராஜர் சிவகாமி செப்புத் திருமேனிகளும் உள்ளன.

பரசுராமலிங்கேஸ்வரர் தீண்டாத் திருமேனியான இறைவன் சதுர வடிவலிங்க வடிவில் ஆவுடையார் மீது காணப்படுகிறார். இவருக்குத் தண்ணீர்,பன்னீர், இளநீர் அபிஷேகங்களும், ஆவுடையாருக்கு அன்னம், தயிர், ஆகிய அபிஷேகங்களும்தான் செய்யப்படுகின்றன. மலர்கூட கைகள் படாமல்தான் சாத்தப்படுகின்றன. இவ்வாறு இறைவன் தீண்டாத் திருமேனியாக திகழச் சில காரணங்கள் உள்ளன. அயனாவரம், வில்லிவாக்கம், புரசைவாக்கம் ஆகிய இடங்களில் புத்த சமண சமயங்கள் இருந்துள்ளன. இதற்குச் சான்றாகப் பல புத்த சமணச் சிற்பங்கள் இப்பகுதிகளில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. வில்லிவாக்கத்தில் கண்டெடுக்கப்பட்ட இருநின்ற அமர்ந்த கோலத்திலான மகாவீரரின் சிற்பங்கள் அரசு அருங்காட்சியகத்தில் தற்போது காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. எனவே, இச்சமயத்தினர் தீண்டாமல் இருப்பதற்காகவே, இச்சமயங்களிலிருந்து சைவ சமயத்திற்கு மாறிய சைவர்களின் கரங்கள் இறைவனைத் தீண்டக்கூடாது என்ற நியதியாலோ இறைவன் தீண்டாத்திருமேனியனாக வழிபாடு செய்யப்பட்டமை பின்னர் வழிவழியாகத் தொடர்ந்திருக்க வேண்டும். இத்தகையத் தீண்டாத் திருமேனியாக இறைவன், திருவள்ளூர் அருகிலுள்ள கடம்பத்தூர் வட்டத்தில் உள்ள கூவம் என்ற ஊரிலும் காட்சியளிக்கின்றார். மேலும், அயனாவரத்தில் உள்ள லிங்கம் சதுர வடிவப் பலகைக் கல்லின் அமைப்பில் உள்ளதும் முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும்.

உலகத்தை எல்லாம் காத்து ரட்சிப்பவனும் உலக நாயகியும் கருணைக் கடலான, அம்பாள் அயனாவரத்திலுள்ள பரசுராமேஸ்வரர் கோயிலில் பர்வதாம்பிகையாக அருள் வழங்குகிறார்.

அயனாவரம் பரசுராமேஸ்வர சுவாமி கோயிலில் இவ்வம்மன் சன்னதி, இறைவன் சன்னதிக்கு இடப்புறம் உள்ளது. கஜபிரஷ்ட அமைப்புடைய கருவறைக்கு அருகில் இறைவன் சன்னதி முன் மண்டபத்துடன் இணைக்கப்பட்டுள்ளதால் இது ஒரே கோயில் போலத் தோன்றுகிறது. ஆனால், இவ்விறைவி சன்னதி தனிச் சன்னதிதான். அபய வரத முத்திரைத் தாங்கி, நின்ற நிலையில் அருள் வழங்கும் கனிந்த பார்வையுடைய அன்னையை

''அண்ணல் இடபால் அமர்ந்தாய் ஆறுமுக
னுக்கு அன்னாய்
மண்ணையிடந்தாற் இளைய மாதங்காய்—
நண்ணியசீர்
மாமலைக்குச் சேய்ஆனாய் மாதங்கத்தைப்
பெற்றாய்
வாம சமயத்தாய் தீர்மாசு ''

அதாவது சிவபெருமானின் இடப்புறம் வீற்றிருப்பவனும், ஆறுமுகனுக்கு அன்னையும் மண்ணைத் துளைத்துச் சென்ற திருமாலின் தங்கையும் பர்வதராஜனின் புத்திரியும் விநாயகனை ஈன்றவளும், சாக்த சமயத்தின் தலைவியானவளே எங்களது துயரைத் தீர்ப்பாய் என்று புலவர் ஒருவர் ஏற்றிப் பாடிய உமையம்மை அபய, வரத முத்திரைத் தாங்கி நின்ற நிலையில் பக்தர்களுக்கு அருள் வழங்குகிறாள்.

பிறதலங்கள் போன்றே பரசுராமலிங்கேஸ்வரர் கோயிலிலும், சிவராத்திரி மாத பிரதோஷம், சஷ்டி, இவற்றுடன் வைகாசி விசாகப் பெருவிழாவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. நாமும் அயனாவரத்தில் உ ள் ள அய்யனை வணங்கி வழிபடுவோம்.

— — — —

நாதமாமுனிகள்

நயவுரைநம்பி

டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன்

''வேதத் தமிழறிந்து ஆழ்வார்கள்
மெய்யுணர்வால்
ஓதுமறை எல்லாம் ஒருங்குறக் காதலால்
நாத முனிகள் நமக்களித்தான் நாரணன்
பாதங்கள் கொண்டோம் பணிந்து''.

காவிரியாற்றின் கரையில் உள்ளது வீர நாராயணபுரம் என்னும் திருப்பதி. அவ்வூரில் பல கலைகளையும் நன்கு கற்றுணர்ந்த மறையவர்கள் பலர் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் எம்பெருமானிடத்தில் பேரன்பு வாய்ந்து, பரம பாகவதர்கள்' என்று சொல்லும்படி விளங்கினர். அவர்கள் உள்ளம் உரை செயல் மூன்றும் ஒத்தவர்கள். அவர்களுள் சொட்டைக்குலம் என்னும் ஒரு குலத்தவர் இருந்தனர்.

அக் குலத்தில் ஈச்சுவர முனிகள் என்பார் தோன்றித் தென்மொழி, வடமொழி இரு மொழிகளிலும் பல கலைகளையும் நன்கு கற்றுணர்ந்து, எல்லாரினும் சிறந்து விளங்கினார். அவருக்கு ஒரு அருமருந்தன்ன மைந்தர் தோன்றினார்.

ஈச்சுவரமுனிகள், அம்மைந்தருக்கு 'நாத முனிகள்' என்று திருப்பெயர் சூட்டினார். நாத முனிகள் ஏழிசைகளையும், தென்மொழி வடமொழிக் கலைகளையும் பயின்று, திருமகள் கேள்வன் பால் நீங்காத அன்பும், சிறந்த ஒழுக்கமும் உடையவராய் விளங்கினார் அவர், இசை உணர்விலும், தென்மொழி வன்மையிலும், திருமகள்நாதன் அன்பிலும் சிறந்து திகழ்ந்தார். அவரைக் கண்டவர்கள் எல்லோரும் 'இவர், உலகு உய்யத் தோன்றிய பெரியோர் ஆவர்'' என்று கூறுவார் ஆயினர். அவர் கற்பென்னும் மாண்குணம் அமைந்த கன்னியை மணந்து, இல்லறத்தைப் பல்லறம் ஆற்றிப் பொலிவுறச் செய்தனர். அவருக்கு ஒரு மகன் பிறந்தார். அவர், அம்மகனுக்குத் தம்முடைய தந்தையார் பெயராகிய ஈச்சுவர முனிகள் என்பதையே பெயராக இட்டனர். அவரும், தென்மொழி வடமொழிக் கலைகள் பலவற்றையும் கற்று உணர்ந்து, சிறந்த அறிஞராய் விளங்கி அறிவிற் சிறந்த அணங்கினை மணந்து, இல்லறத்தை இனிது நடத்துவாராயினர்.

நாதமுனிகள் வடநாடு செல்லுதலும், மீளுதலும்

நாதமுனிகள் தந்தையாருடனும் மைந்தருடனும் ஊரில் எழுந்தருளியுள்ள மன்னனாரை அன்புடன் வணங்கி, அப்பெருமானுக்கும் பல தொண்டுகளைப் புரிந்து வந்தனர். நாதமுனிகள் தொண்டு புரிந்து வருகையில், அவருக்கு ஆயர்பாடிக் கண்ணன் இனிது விளங்கியருளிய மதுரை, திருவாய்ப்பாடி, பிருந்தாவனம் யமுனைக்கரை முதலிய திருப்பதிகளைக்கண்டு வணங்க வேண்டும் என்னும் காதல் உண்டாயிற்று. உடனே நாதமுனிகள் மன்னனார் திருமுன் சென்று வணங்கித் தம்முடைய விழைவை விளம்பினார். மன்னனாரும் அருச்சகர் மூலமாக நாதமுனிகளுக்கு விடை அளித்தருளினர்.

உடனே நாதமுனிகள் தம்முடைய குடும்பத்துடன் புறப்பட்டுச் சென்று, வடமதுரை, சாளக்கிராமம், துவரை, அயோத்தி, வதரி முதலிய திருப்பதிகளுக்குச் சென்று, அப்பதிகளில் எழுந்தருளியுள்ள மலர்மகள் மணாளனை வணங்கினார்.

பின்பு, மிக்க பெருமிதத் தோற்றத்தோடு விளங்கும் யமுனை ஆற்றங்கரையில் உள்ள கோவர்த்தனபுரம் என்னும் பதியில் எழுந்தருளியிருக்கும் 'யமுனைத்துறைவன்' என்னும் பெருமானுடைய திருவடித் தாமரைகளை அன்பின் மிகுதியினால் கண்களினின்று அருவி என நீர் பெருகிவரப் பலபடியாகப் போற்றிப் பணிந்தார். கண்ணன், களிப்புற்று ஆடிப் பாடி விளங்கிய அப்பதியும், அவ் ஆறும், நாதமுனிகள் மனத்தை முற்றுங் கவர்ந்துவிட்டன. ஆதலின் நாதமுனிகள், அப்பதியிலேயே உறைய வேண்டும் என்னும் விருப்பம் கொண்டு, அவ்வாறே அப்பதியில் குடும்பத்துடன் இருந்து. அப்பதியில் எழுந்தருளியுள்ள யமுனைத் துறைவனை வணங்கி, அப்பெருமானுக்குத் தம்முடைய தந்தையார் முதலியவர்களுடன் பல தொண்டுகளைப் புரிந்து வந்தார்.

நாதமுனிகள் அப்பதியில் ஒருவாறு தொண்டு செய்து கொண்டிருக்கையில் ஒருநாள் இரவிலே, அவர் கனவில் மன்னனார் தோன்றி 'அன்பனே நம்முடைய வீரநாராயணபுரத்திற்கு வருவாயாக'' என்று பணித்தார். மறுநாள் நாதமுனிகள் தம்முடைய தந்தையாரிடமும், மகனிடமும் அக்கனவைக் கூறி, அவர்களோடு ஆய்ந்து, யமுனைத்துறைவனாகிய பெருமான்பால் சென்று, அதனை விண்ணப்பித்தனர். அம் முதல்வன் அருச்சகர் வழியாக 'அன்பனே! அவ்வாறே செய்க'' என்று விடை கொடுத்தருளினான்.

நாதமுனிகள் உடனே நம்முடைய தந்தையார் முதலியவர்களுடன் புறப்பட்டுப் புருடோத்தமம் என்னும் சகந்நாதம், சிங்கவேள் குன்றம், அகோபிலம், திருவேங்கடம், திருக்கடிகை, திருப்புட்குழி, திருக்கச்சி, திருவயிந்திரபுரம், திருக்கோவலூர், திருவரங்கம், திருக்குடந்தை முதலிய திருப்பதிகளுக்குப் போய் அப்பதிகளில் எழுந்தருளியுள்ள ஒருமுதலாகிய இறைவன் அடிகளை வணங்கி, மீண்டும் வீரநாராயணபுரத்திற்கு வந்து மன்னனாரை வணங்கிப் போற்றி நின்றனர்.

அப்பதியில் உள்ளவர்கள், நாதமுனிகளையும், அவர் குடும்பத்தினரையும் வரவேற்று, அவர்களுக்குத் தக்க திருமாளிகையைக் கொடுத்து அவர்களுக்கு வேண்டிய அமுதுபடி முதலியவற்றையும் அளித்து வரலாயினர். நாதமுனிகள் தந்தையாருடனும் மைந்தருடனும் சேர்ந்து, ஒரு நந்தவனம் அமைத்து மன்னனாருக்கு மாலை கட்டிச் சாத்தல் திருவிளக்கு அமைத்தல் முதலிய தொண்டுகளைக் குறைவற நடத்தி வந்தார். பலருக்கும் மெய்ப்பொருள் நூல்களின் அரும்பொருள்களை விளக்கியுரைத்து வரலானார்.



நாதமுனிகள் நாலாயிரம் பெறுதல்

நாதமுனிகள் மன்னனார் தொண்டுகள் முதலியவற்றை நடத்திக் கொண்டிருக்கையில், மேலை நாட்டிலிருந்து வைணவர் இருவர் வந்து மன்னனாரை வணங்கி அவர் திருமுன்,

''ஆரா அமுதே அடியேன் உடலம் நின்பால்
அன்பாயே
நீராய் அலைந்து கரைய உருக்கு கின்ற
நெடுமாலே
சீரார் செந்நெல் கவரி வீசும் செழுநீர்
திருக்குடந்தை
ஏரார்கோலம் திகழக் கிடந்தாய் கண்டேன்
எம்மானே'

என்று தொடங்கும் திருவாய் மொழியின் பதினொரு பாசுரங்களையும் ஓதி மன்னனாரை வணங்கி நின்றனர்.

அப்போது அங்கு மன்னனாரை வணங்க வந்திருந்த நாதமுனிகள், அவற்றைக் கேட்டு, அவற்றில் மிக்க விழைவுடையராய், அவர்களை நோக்கித் 'திருமால் அன்பிற் சிறந்த அடியீர்! நீங்கள் ஓதிய பாசுரங்களுள் ஒன்றான ஈற்றுப் பாசுரத்தில் 'ஆயிரத்துள் இப்பத்தும்' என்பது காணப்படுதலின், இப்பாசுரங்கள் ஆயிரம் பாசுரங்களைக் கொண்ட ஒரு பிரபந்தத்தைச் சேர்ந்தவை என்பதுதெரிகின்றது. அப்பிரபந்தம் உங்களுக்கு முற்ற வருமோ!'' என்று கேட்டனர். அவர்கள். 'அருங்குணப் பெரியீர்! நாங்கள் அறிந்தவை இப்பதினொரு பாசுரங்களே!' என்றார்கள். நாதமுனிகள் 'அறிஞர்களே! உங்கள் நாட்டில் இப்பிரபந்தம் கொண்ட ஏடுகள் உளவோ' இப்பிரபந்தத்தை முற்றும் பாடம் செய்தார் உளரோ!' என்று கேட்டனர்.

'அருங்குணத்தீர்! எங்களுக்கு மட்டுமே இப்பதினொரு பாசுரங்கள் வரும்; மற்றையோ

ருக்கு அவையும் வாரா', என்றார்கள். நாதமுனிகள், அவர்களுக்கு மன்னனாருடைய திருமஞ்சன நீரை அருளி, மற்றும் செய்வன செய்து அவர்களைப் போகவிட்டனர்; பிறகு, தமக்குள் பலவகையாக எண்ணி, 'இப்பிரபந்தம் திருச்சடகோபர் பிறந்த திருக்குருகூர் நகரில் இருத்தல் வேண்டும் என்று எண்ணி ஆழ்வார் திருநகரிக்குச் சென்று, ஆழ்வாரையும், பொலிந்து நின்ற புனிதனையும் வணங்கிச் சென்று, அப்பதியில் உள்ளார் சிலரை வினவினர். அவர்கள் 'அன்புடையீர் எங்கட்கு அப்பிரபந்தத்தைப் பற்றி ஒன்றும் தெரியாது. இப்பதியிற் கலையறிவு, ஒழுக்கம், திருமகள் கேள்வன்பால் அமைந்த அன்பு எல்லா உயிர்களிடத்தும் போருள் முதலிய சிறந்த குணங்கள் ஒருங்கு அமையப் பெற்ற பராங்குசதாசர் என்னும் திருப்பெயருடையார் ஒருவர் இருக்கின்றார். அவர்பால் சென்றால் அப்பிரபந்தத்தைப் பற்றி அறிதல்கூடும்'' என்று கூறி, அவர் இருப்பிடத்தையும் தெரிவித்தனர்.

நாதமுனிகள் அவர்களை வாழ்த்திச் சென்று அவர்கள் கூறிய அப்பராங்குசதாசர்பால் சென்று, அவரைக் கண்டு வணங்கி, 'அன்பிற் பெரியீர்! திருச்சடகோபர் அருளிய பிரபந்தத்தின் ஏடுகள் இங்கு உளவோ'' என்று வினவினார். அவர் நாதமுனிகளை நோக்கி 'அருங்குணச் செல்வரே, அப்பிரபந்தம் மறைந்து வெகு நாள்கள் ஆயின. அதனை அருளிய திருச்சடகோபருடைய சீடரான மதுரகவிகள், அவரைப் பற்றிப் பாடியதும், பதினொரு பாசுரங்களைக் கொண்டதும் ஆகிய 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' என்னும் பதிகம் ஒன்று உளது. அது கண்ணிநுண் சிறுத்தாம்பு என்று தொடங்கப் பெற்றிருத்தலின், அப்பெயர் பெற்றது. எங்கள் குரவர், அதனை எனக்கு அருளி, 'அன்பனே ஆழ்வார் திருமுன் இருந்து, அவர்பால் ஒன்றிநின்ற உள்ளத்தராய் இக் கண்ணிநுண் சிறுத்தாம்பு' என்னும் பிரபந்தத்தைப் பன்னிராயிரம் முறை உருப்போடுகின்றவர்களுக்குமுன் ஆழ்வார் தோன்றியருளுவார் என்று உரைத்தார்.' என்று கூறி, அப்பிரபந்தத்தை நாதமுனிகளுக்கு அளித்தார்.

நாதமுனிகள் அப்பிரபந்தத்தைப் பெற்று அவரை வணங்கி, ஆழ்வார் விற்றிருந்த திருப்புளி அடியில் இருந்து, 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' என்னும் பிரபந்தத்தினை அன்புடன் பன்னிராயிரம் முறை படித்தார். அவருக்கு முன் ஞானதேசிகராகிய ஆழ்வார். தேன் நிறைந்த மகிழ மலர்த்தொடை திருப்புயத்தில் இலங்கத் தலையில் திருமுடி பொலியப் செங்கதிர் ஒப்ப ஒளிவிடும் குண்டலங்கள் காதுகளில் திகழக் குளிர்ச்சியொடு மணம் பொலியும் செந்தாமரை மலரை ஒப்பத் தண்ணருளொடு கூடியதிருமுகம் ஒளி விளங்க, முத்திரைத் திருக்கையோடு தோன்றி, நாதமுனிகளை நோக்கி, அன்பிற் சிறந்த அண்ணலே, அருள்பெரும் யோகத்தின் அமர்ந் திருப்போர் தாமரை மணாளன் திருவடி மலர்களை இடைவிடாமல் மனத்துள் வைத்துப் போற்றுதல் போல நீர் நெடும் போதாக உம்முடைய நெஞ்சில் நம்மையே கருதி வைத்துத் துதித்துக் கொண்டிருத்தற்குக் காரணம் யாது' உரைப்பீர்' என்று வினவினார்.

நாதமுனிகள் வணங்கி நின்று 'எந்தையீர்! தங்கள் அருளிச் செயலைப் பெற வேண்டும் என்னும் விருப்பமே அதற்குக் காரணம் என்றனர். ஆழ்வாரும் நாதமுனிகளை உவப்புடன் நோக்கியருளித் திருமகள்செல்வம் தமக்கு மயர்வற மதிநலம் அருளினாற்போல அவருக்கு மெய்யறிவு கண்ணைத் திறந்து தாம் அருளிச் செய்த திருவாய்மொழி, திருவிருத்தம் திருவாசிரியம், பெரிய திருவந்தாதி என்னும் நான்கு பிரபந்தங்களையும் பொய்கையார், பூதத்தார். பேயார், திருமழிசையார், குலசேகரர், பெரியாழ்வார். தொண்டரடிப்பொடியாழ்வார். திருப்பாணர், திருமங்கை மன்னர், கோதை நாச்சியார் என்பவர்கள் அருளிச் செய்த பிரபந்தங்களையும் திருமந்திரத்தையும், மற்றும் உள்ள நூல்களின் அரும்பொருள்களையும் திருவாய் மலர்ந்தருளி, அட்டாங்க யோகத்தின் நுட்பங்களையும் அறிவித்தார்.

நாதமுனிகள், ஆழ்வார்பால் ஆராத காதல் உடையவர். அவரையும் பொலிந்து நின்ற பெருமாளையும் வழிபட்டு அவ்வூரில் உறையலானார். வீரநாராயணபுரத்தில் எழுந்தருளிய மன்னனார், ஒருநாள் இரவு நாதமுனிகள் கனவில் தோன்றி, 'அன்பனே நீ பெற்ற நாலாயிரத்தை நம்முன் வந்து, ஒருருக் கூறுவாயாக' என்று அருளினர். நாதமுனிகள் பொலிந்து நின்ற பெருமானையும், ஆழ்வாரையும் வணங்கி மன்னனார் தம்முடைய கனவில் தோன்றி அருளியதை விண்ணப்பித்தார். ஆழ்வார் அருச்சகர் மூலமாக 'அன்பனே! இப்பிரபந்தங்களை அன்புடையார்கள் எல்லார்க்கும் கூறி அவர்களை இவற்றுள் வல்லவராம்படி செய்து உய்விப்பாய்' என்று அருளி விடையளித்தனர்.

நாதமுனிகள் ஆழ்வார்பால் விடைபெற்றுக் கொண்டு வீரநாராயணபுரத்திற்கு மீண்டும் வருகையில் வழியில் உள்ள திருப்பதிகளை, அவ்வப் பதிகளுக்கு உரிய அருளிச் செயல்களால் போற்றித் தொழுதார். வீரநாராயணபுரத்திற்கு வந்து, மன்னனார் பணித்தருளியபடி அவர் திருமுன், நாலாயிரத்தையும் ஓருருக் கூறினார். மன்னனார், மகிழ்ச்சி மிக்கவராய் நாதமுனிகள் கனவில் எழுந்தருளி அவரை நோக்கி,'அன்பனே நீ! இவற்றை இயற்றமிழில் வகையின் வகுத்து; அவற்றிற்கு இசையும் அமைத்திடுக'' என்றார். நாதமுனிகள் தம்முடைய மருமக்களும் இசையில் வல்லவர்களும் ஆகிய கீழையகத்தாழ்வார். மேலையகத்தாழ்வார் என்பவர்களை அழைத்து மன்னனார் கட்டளையைத் தெரிவித்தார். முன்னே வேத வியாசர், வேதத்தை நான்காக வகுத்து அவற்றிற்கு உதாத்தம், அநுதாத்தம் முதலிய உச்சரிப்பு முறைகளையும் அமைத்தாற் போல நாலாயிரத்தை முதலாயிரம், பெரிய திருமொழி, இயற்பா, திருவாய்மொழி என்னும் நான்கு பகுதிகளாக வகுத்து, அவற்றிற்குத் வேதகானத்தை அமைத்து, அவற்றைத் தம்முடைய மருமக்களைக் கொண்டு பாடும்படி செய்தனர். அதனால் நாலாயிரம் உலகிற் பரவுவதாயிற்று.

மக்களின் அமோக ஆதரவினைப் பெற்று ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள், மேதகு தமிழக ஆளுநர் அவர்களின் முன்னிலையில் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்கிறார்கள்.



மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் புலவர் செங்குட்டுவன் அவர்கள் பதவிப்பிரமாணம் எடுத்துக்கொள்கிறார்கள்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை. சென்னை-600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ. பிஎச்.டி.
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம். அரசினர் தோட்டம், சென்னை-600002.



நம் இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை அரங்கம் இவ்வாண்டு சிறப்புப் பரிசினைப் பெற்றது. அரங்க முகப்பில் தலைமையிடத் துணை ஆணையாளர் திரு ப. தனபால், பி.ஏ. பி.எல்., சென்னை துணை ஆணையாளர் திரு. ப. ராஜா, பி.எஸ்.சி., பி.எல். மற்றும் உதவிப் பொறியாளர், அறநிலையத்துறையின் செயல் அலுவலர்கள், பணியாளர்கள் ஆகியோர் சிறப்புப் பரிசுடன் வீற்றிருக்கக் காணலாம்.

நம் இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை அரங்கிற்குக் கிடைத்த சிறப்புப் பரிசினைச் சுற்றுலாத் துறையின் அரசுச் செயலாளர் அவர்களிட மிருந்து நம் அறநிலையத்துறை சென்னை உதவி ஆணையாளர் திரு வேதமணி அவர்கள் பெற்றுக் கொள்கிறார்கள்.